விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# வலம்புரி

Valampurii
E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 14 செவ்வாய்க்கிழமை (26.02.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 069

# உணர்வுபூர்வமாக நடைபெற்ற ஹர்த்தால்

## காணாமல்போன உறவுகளின்

## கண்ணீரால் கரைந்த வன்னிமண்

### கிளிநொச்சியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் அணி திரள்வு



(கிளிநொச்சி) வடக்கில் நேற்று உணர்வுபூர்வமாக ஹர்த்தால் முன்னெடுக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கிளிநொச்சியில் திரண்டு தமது ஆதரவை தெரிவித்தனர். காணாமல்போன உறவுகளின் கண்ணீரால் கிளிநொச்சி மண்ணே கரைந்தது. (24-ம் பக்கம் பார்க்க...)

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ஆதரவு தெரிவித்து

### லண்டனிலும் மாபெரும் கவனயீர்ப்பு




(லண்டன்)

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து லண்டன் நகரில் மாபெரும் கவனயீர்ப்பு 24

## ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் மகஜர் கையளிப்பு



(கிளிநொச்சி)

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான மற்றும் கேப்பாப்புலவு 23

### சம்பந்தன், மாவை, சுமந்திரனை காணவில்லை

## கிளிநொச்சி போராட்டத்தில் பல அரசியல் பிரமுகர்கள் பங்கேற்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்திற்கு இரா.சம்பந்தன், மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரை காணவில்லை.

அரசியல் பேதங்கள் இன்றி குறித்த போராட்டத்தில் 24

## முள்ளியவளை ஹீச்சிராபுரத்தில் வெடிபொருள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளியவளை பொலிஸ் 23

### ஒலிபெருக்கி வயர்களை அறுத்து எறிந்து

## கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் குழப்பம் விளைவிப்பு

### ஊடகவியலாளர்களுக்கும் மிரட்டல் விடுப்பு

(கிளிநொச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் போராட்டத்தை வழிநடத்திச்சென்ற ஒலிபெருக்கி பொருத்தப்பட்ட முச்சக்கரவண்டியின் மின்சார வயர்களை அறுத்து போராட்டத்தில் குழப்பத்தை ஏற்படுத்த சிலர் முயன்றுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரது தீவிர ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் குறித்த குழுவினர் போராட்டத்தின் ஆரம்பம் முதல் குழப்பங்களை தோற்று 24

## ஒன்பது இந்திய மீனவர்கள் நேற்றுக் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்ட விரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 9 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

வடக்கு கடற்படை கட்டளை தலைமையகத்தினால் மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு நடவடிக்கையின் போது இலங்கை கடற்பரப்பிற்குள் சட்ட விரோதமாக 24

## இராணுவத்தால் தமிழர் மீது தற்போதும் சித்திரவதைகள்

### சர்வதேச அமைப்பு அறிக்கை

(கொழும்பு)

சித்திரவதை தொடர்பில் சகிப்புத்தன்மை முற்றிலுமின்மை எனும் கொள்கை குறித்து இலங்கையின் புதிய அரசாங்கம் வாக்குறுதி அளித்திருந்த போதிலும் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரும் தமிழர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டமை வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது.

குறிப்பாக இலங்கையின் பாதுகாப்புப் படையினரால் தொடர்ச்சியாக தமிழர்கள் சித்திரவதைக்கு உள்ளாவதாக பிரித்தானியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் சித்திரவதையில் இருந்து 24

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின்

## முழு அடைப்புப் போராட்டத்தால் வடக்கு முற்றாக முடக்கம்

(கிளிநொச்சி)

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அவகாசம் வழங்கக் கூடாது என வலியுறுத்தியும் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்புப் பேரணிக்கு வலுச்சேர் 24



# ஜெனிவா கூட்டத் தொடரில் இலங்கை அரசு தப்பித்துவிடும்

## தேசிய சமாதானப் பேரவை

(கொழும்பு)

ஜெனிவா கூட்டத்தொடரில் இம்முறை இலங்கைக்கு அழுத் தம் கொடுக்கும் புதிய பிரேரணை ஒன்று வரப்போவதில்லை என தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவ்வாறே புதிய பிரேரணை ஒன்று முன் வைக்கப்பட்டா லும் கூட அது கடந்த கால பிரேரணைகளை விடவும் அழுத்தம் குறைந்த ஒன் றாகவே அமையும் என்றும் அவர் கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "கடந்த கால ஆட் சியை போல அல்லாது இந்த ஆட்சியில் சர்வதேச நாடுகளின் ஆதரவு அர சாங்கத்திற்கு கிடைத்துள்ளது.

இலங்கையின் இக்கட்டான நிலைமைகளில் சர்வதேச நாடு களின் உதவிகளை பெற்றுக் காள்ள முடிந்துள்ளது. அதேபோல் இந்த அரசாங்கம் சீனா, ரஷ்யா பக்கம் இல்லாத ஆட்சியை கொண்டு நடத்துகின்ற காரணத்தினால் மேற்கு நாடுகளின் ஆதரவு உள் ளது.

அதேபோல் கடந்த காலங்களில் இறந்த முந்தைய கூட்டத்தொடர்களில் இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படு வதில் காலதாமதம் ஏற்பட்டுள் ளது.

எனினும் மெதுவான பயணம் ஒன்றினை ஆரம்பித்தேனும் இலக்கை நோக்கி பயணிக்கின்றது என்ற காரணத்தை சர்வதேசம் ஏற்று கொண்டுள்ளது எனவும் ஜெகான் பெரேரா குறிப்பிட்டார். (ம-3)

# சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்

திருமதி Dr.மகேந்திரராஜா சறோஜினிதேவி



கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் கால்நடை வைத்தி யராக கடமையாற்றி இளைப்பாறும் திருமதி Dr.மகேந்திரராஜா சறோஜினிதேவி அவர்களுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம். (C-5619)

**வைத்திய சேவையும் - பராமரிப்பும்**

உங்கள் வீடுகளில் வைத்துப் பராமரிக்க கஷ்டமான வயோதிப நோயாளர்களை எங்கள் இடத்தில் வைத்து பராமரிக்கப்ப டுவர். Physiotherapy சிகிச்சையும் உண்டு.

தொடர்புகளுக்கு:

077 873 0129 (7660)

**ஒத்துமாறல்**

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் அபி விருத்தி உத்தியோகத்தராக (D.O) கடமையாற்று பவர் யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலகத்திற்கு or யாழ் மாவட்ட செயலகத்திற்கு ஒத்துமாற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புவோர் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 644 6514 (C-5620)

## முன்னாள் கடற்படைத்தளபதி

# வசந்த கரன்னகொடவுக்கு எதிராக உயர் நீதிமன்றில் மனுதாக்கல்



(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளார்.


கொழும்பில் 11 தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட வழக்கில் தொடர்புடைய தாக, அவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் அவருக்கு எதிராக கைது உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், இரகசிய பொலிஸாரிற்கு தன்னை கைது செய்வதைத் தடுக்கும் விதமான உத்தரவு ஒன்றினை பிறப்பிக்குமாறு கூறியே அவர் இந்த மனுவை நேற்று திங்கட்கிழமை தாக்கல் செய்துள்ளார்.

11 தமிழ் இளைஞர்களை கொலைசெய்ய சதித்திட்டம் தீட்டினார் என்பது உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள் ளன.

குற்றவியல் சட்டக்கோவையின் 296 மற்றும் 338 ஆவது பிரிவுகளுக்கு அமைய குற்றங்களைச் செய்வதற்கு சதித்திட்டம் தீட்டினார் என்றும், 199, 200 ஆவது பிரிவு களின் கீழ், குற்றம் தொடர்பாக பொலிஸா ருக்கு தகவல் வழங்கத்தவறினார் என்றும், தவறாக வழிநடத்தும் வகையில் தகவல்களை அளித்தார் என்றும் அட்மிரல் வசந்த கரன்ன கொட மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவர் நாட்டை விட்டுத் தப்பிச்செல்லக் கூடும் என்பதால், கடவுச்சீட்டை முடக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியுள் ளது. (ம-3)



# மரண அறிவித்தல்

# தங்கராசா கேசவதாஸ்

## (திவானி கட்டட ஒப்பந்தகாரர்)

தும்பளையைப் பிறப்பிடமாகவும் இமையாணனை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா கேசவதாஸ் அவர்கள் (25.02.2019) நேற்று அகால மரணமடைந்தார்.

அன்னார் தங்கராசா (கட்டட ஒப்பந்தகாரர்) - தங்கரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், தியாகராசா - இன்பராணி ஆகியோரின் அன்பு மருமகனும், அமுதாவின் (சுகாதார உதவியாளர் - பற்சிகிச்சை நிலையம், உடுப்பிட்டி) பாசமிகு கணவரும், திவானி, தரன்யா, வர்ணஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமா, பத்மா, உமா, முருகதாஸ், பவானி, குகதாஸ், அம்பிகைதாஸ் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மதுரநாயகம், நாகலிங் கம், அரியராசா, அமலதாஸ், செல்வராணி, அமுதா, நிதா, சங்கீதா, கவிசீலன், கவிதா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கணேசலிங்கம், ஜீவா ஆகியோரின் சகலனும், எழிலரசியின் உடன்பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.02.2019) செவ்வாய்க்கிழமை இமையாணனில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இமையாணன், உடுப்பிட்டி. தகவல் : குடும்பத்தினர்

(7661)

# "இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கையாள வேண்டும்"



# போர்க்குற்ற விசாரணையை ஜனாதிபதி நிராகரித்த பின் கால அவகாசம் எதற்காக?

## ஐ.நா. உறுப்பு நாடுகளிடம் நீதியரசர் விக்னேஸ்வரன் கேள்வி

(கிளிநொச்சி)

போர்க்குற்ற விசாரணை உட்பட மனித உரிமைகள் சபை தீர்மானத்தின் பலவிடயங்களை நிறைவேற்றப் போவதில்லை என்று ஜனாதிபதி வெளிப்படையாக கூறியுள்ள நிலையில் காலஅவகாசம் எதற்காக என்பதை உறுப்பு நாடுகளும் ஐ.நா.* மனித உரிமைகள் சபை ஆணையாளரும் சிந்தித்துப் பார்த்து மாற்று நடவடிக்கைகளை எடுக்கமுன் வரவேண்டும். அதனால் தான் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கையாளவேண்டும் என்று கோரியுள்ளோம். அது சாத்தியப்படாவிட்டால் சர்வதேச சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவான பொருத்தமான ஒரு பொறிமுறையின் கீழ் மனித உரிமைகள் சபை இதனைக் கையாள வேண்டும் என்று கோரி தமிழ் மக்கள் பேரவை ஊடாகத் தீர்மானம் ஒன்றை அனுப்பியுள்ளோம் என வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்று கிளிநொச்சியில் மேற்கொண்ட கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கல்விச் செயற்பாடுகள், நாளாந்த வாழ்வாதாரச் செயற்பாடுகள் மற்றும் முக்கியமான பல கருமங்களை எல்லாம் ஒதுக்கி வைத்து செலவழித்து எமக்கான உரிமைகளையும் நீதியையும் சர்வதேச சமூகத்துக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அரசாங்கத்துக்கும் வலியுறுத்துவதற்காக வடக்கு-கிழக்கின் பலபாகங்களில் இருந்தும் இங்கு வந்துள்ள அனைவரையும் காணும் போது மகிழ்ச்சி அடைகின்றேன். முதற்கண் அவர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதேபோல வியாபார நிலையங்களை மூடி இன்றைய மக்கள் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ள வர்த்தகர்களுக்கும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் நடத்திய இந்தப் போராட்டத்திற்கு முழுமையான ஆதரவை வழங்கவே நாம் இங்கு கூடி வந்துள்ளோம். வடக்கு-கிழக்கில் வாழ்கின்ற மக்கள் ஒன்று திரண்டு சாத்வீக வழிமுறையில் மேற்கொண்ட இந்தப் போராட்டத்தின் தாற்பரியத்தை ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்ள வேண்டும். எமது மக்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு உரிய மாற்று நடவடிக்கைகளை காலம் தாமதிக்காமல் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மேற்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் சபை தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்குவதானது மனித உரிமைகள் சபை தன்னைத் தானே ஏமாற்றுவதோடல்லாமல் பாதிக்கப்பட்ட எமது மக்களையும் ஏமாற்றுவதாகவே அமையும்.

போர்க்குற்ற விசாரணை உட்பட மனித உரிமைகள் சபைப் தீர்மானத்தின் பல விடயங்களை நிறைவேற்றப் போவதில்லை என்று ஜனாதிபதி வெளிப்படையாக கூறியுள்ள நிலையில் காலஅவகாசம் எதற்காக என்பதை உறுப்பு நாடுகளும் ஐ.நா.மனித உரிமைகள் சபை ஆணையாளரும் சிந்தித்துப் பார்த்து மாற்று நடவடிக்கைகளை எடுக்க முன் வரவேண்டும். அதனால்தான் இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கையாள வேண்டும் என்று கோரியுள்ளோம். அது சாத்தியப்படாவிட்டால் சர்வதேச சட்டங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு அமைவான பொருத்தமான ஒரு பொறிமுறையின் கீழ் மனித உரிமைகள் சபை இதனைக் கையாள வேண்டும் என்று கோரி தமிழ் மக்கள் பேரவை ஊடாகத் தீர்மானம் ஒன்றை அனுப்பியுள்ளோம். அதேவேளை, தொடர்ந்தும் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராலயம் வடக்கு-கிழக்கில் தனது அலுவலகங்களை திறக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளோம்.

இறுதிப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் ஏராளமான ஆதாரங்கள் வெளிவந்துள்ள நிலையிலும் சர்வதேச விசாரணை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் சபை மேற்கொள்வதை இலங்கை அரசாங்கம் சவாலுக்கு உட்படுத்திவரும் விதம் எதிர்காலத்தில் மனித உரிமைகள் சபையின் இறைமையைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இறுதியுத்தத்தின் போது பல்லாயிரக்கணக்கில் எமது மக்கள் கொலை செய்யப்பட்டு இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டபோது பாதுகாப்பதற்கான தனது பொறுப்பில் (Responsibility to Protect) (R2P) இருந்து தவறிய ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும் போருக்குப் பின்னராவது பொறுப்புக் கூறல் மற்றும் நீதி ஆகியவற்றில் காத்திரமான ஒருவகிபாகத்தை அமைப்பார்கள் என்று எதிர்பார்த்து எமது மக்கள் மீண்டும் ஏமாற்றம் அடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

பொறுப்புக்கூறல் மற்றும் நீதி தொடர்பில் இலங்கைக்கு இருக்கின்ற கடப்பாடுகளை வலியுறுத்தி 2015 ஆம் ஆண்டு நிறை வேற்றப்பட்ட தீர்மானத்தினை அமுல்படுத்துவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் சபையும் சர்வதேச சமூகமும் தேவைக்கு அதிகமாகவே சகலவிதமான ஒத்துழைப்புக்களையும் வழங்கி நெகிழ்ந்த தமது தன்மையை காட்டி இருக்கின்றன. ஆனால் இவற்றைத் துஷ்பிரயோகம் செய்யும் விதமாகவே இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. பெரும்பாலும் கண்துடைப்பு நடவடிக்கைகளிலேயே இலங்கை அரசாங்கம் கடந்த 4 வருடங்களில் ஈடுபட்டுவந்துள்ளது. குறிப்பாக காணாமல் போனவர்கள் தொடர்பில் அமைக்கப்பட்ட அலுவலகம் இன்று செயலிழந்துள்ளது. ஏற்கனவே அதன் செயற்பாடுகள் அரசாங்கத்தின் போர்க்குற்றங்களை மூடி மறைக்கும் விதமாகவே அமைந்திருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம்சாட்டி அதற்கு எதிராக ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி இருந்தார்கள். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. தொடர்ந்தும் எமது நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகள் கூட இன்னமும் கட்டிக் கொடுக்கப்படவில்லை. இழைக்கப்பட்ட குற்றங்களை மறந்து விடுவோம். விசாரணை எதுவும் தேவை இல்லை என்று நாட்டின் பிரதமர் சில வாரங்களுக்கு முன்னர் கூறி எமது மக்களின் மனங்களைப் புண்படுத்தி இருப்பதுடன் எமது நம்பிக்கையீனத்தை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளார்.

ஆகவேதான் இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு குறிப்பாக போர்க்குற்ற விசாரணையை நடத்துவதில் இனிமேலும் கால அவகாசம் வழங்கக்கூடாது என்றும் வடக்கு-கிழக்கில் ஐ.நா.உயர்ஸ்தானிகராலயத்தின் அலுவலகங்களை அமைப்பது உட்பட மாற்று நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி நிற்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## இரண்டு வர்த்தகர்கள் கடத்திப் படுகொலை

# பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும்

(கொழும்பு)

தென் மாகாண விசேட விசாரணைப் பிரிவிலுள்ள ஏனைய பொலிஸ் அதிகாரிகள் 10 பேருக்கும் இடமாற்றம் வழங்கப்பட வேண்டும் என, மாத்தறை பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி கயந்த மாரப்பன பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

காலி - ரத்கம பகுதியில் வர்த்தகர்கள் இருவர் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில், தென் மாகாண விசேட விசாரணைப் பிரிவிலுள்ள 15 அதிகாரிகள் களுத்துறை மற்றும் பாணந்துறை ஆகிய பகுதிகளுக்கு கடந்த 21 ஆம் திகதி இடமாற்றம் செய்யப்பட்டனர்.

அவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டவர்களுள் 4 பேர் இதுவரையில் சேவைக்குக்கு சமுகமளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அவர்கள் சேவையில் இருந்து விலக்கப்பட்டவர்களாக கருதப்படுவர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இந் நிலையில், குறித்த பிரிவிலுள்ள ஏனைய 10 அதிகாரிகளுக்கும் உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்டு, தென் மாகாண விசேட விசாரணை பிரிவை கலைக்க வேண்டும் என மாத்தறை பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் அதிகாரி கோரியுள்ளார்.

இதேவேளை, கொலை செய்யப்பட்ட வர்த்தகர்களுடையது என சந்தேகிக் கப்படும் வகையில் மீட்கப் பட்ட எச்சங்கள் சில, டி.என். ஏ பரிசோதனைக்கு உட்படு த்தப்படவுள்ளதாக பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய ஒருவார காலப்பகுதிக்குள் அது குறித்த அறிக்கையை தயாரித்து, நீதிமன்றத்திற்கும் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்திற்கும் பொறுப்பளிக்கப்படும் என அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-7)

# தாமரை மொட்டு மகிந்தவின் குடும்பக் கட்சியாக மாறும்

## இராஜாங்க அமைச்சர் ரவீந்திர எதிர்வுகூறல்



(பல்லேகலை)

- 'தாமரை மொட்டு' கட்சியானது எதிர்காலத்தில் மகிந்த ராஜபக்ஷவின் குடும்பக் கட்சியாகவே மாற்றமடையும் என தொழில் மற்றும் தொழிற்றுறைத் தொடர்புகள் இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர தெரிவித்துள்ளார்.

பல்லேகலையில் நேற்றுத் திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதித் தேர்தலில் 'தாமரை மொட்டு' கட்சியில் இருந்து எந்த ராஜபக்ஷவைப் போட்டியிட வைப்பது என்ற குழப்பநிலையே தற்போது பிரதான விடயமாகக் காணப்படுகின்றது.

இந் நிலையில் தற்போது கூட்டணி அமைப்பது தொடர்பாகவும் பேசப்பட்டு வருகின்றது. கூட்டணி அமைப்பது தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலிலும் பல முரண்பாடுகள் காணப்பட்டன.

இந்நிலையில் ஐக்கிய தேசிய கட்சி இரண்டு முறை பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தது. ஆனால் இம்முறை ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ஒருவரே நியமிக்கப்படுவார். அவர் யார் என்பதை உரிய சந்தர்ப்பத்தில் தெரிவிப்போம்.

எதிர்வரும் தேர்தலில் தனிக்கட்சிக்கு போதியளவான பெரும்பான்மைப் பலம் கிடைப்பது என்பது இயலாத விடயம். எனவே தேசிய அரசு என்ற நிலைப்பாட்டிலேயே அடுத்த அரசாங்கமும் அமையும்" என இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர மேலும் தெரிவித்தார். (இ-7)

# இந்.பெண்கள் கலக்கல்

## மந்தனா அரைச்சதம் விளாசல்



மந்தனா

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 7 விக்கெட்டுக் களால் வெற்றி பெற்ற இந்திய பெண்கள் அணி, ஒருநாள் தொடரை 2:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. துடுப்பாட்டத்தில் அசத்திய மந்தனா 63 ஓட்டங்கள் எடுத்தார்.

ஐ.சி.சி., சார்பில் பெண்கள் ஒருநாள் சம் பியன்ஷிப் தொடர் (2017-2020) பல்வேறு நாடுகளில் நடக்கிறது.

புள்ளிப்பட்டியலில் முதல் நான்கு இடம் பெறும் அணிகள் 2020 உலக கிண்ண தொடருக்கு (நியூசி.) நேரடியாக முன்னேறும்.

இதன் ஒருபகுதியாக இந்தியா சென் றுள்ள இங்கிலாந்து அணி மூன்று போட்டி கள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற் கிறது.

முதல் போட்டியில் இந்தியா வென்றது. நேற்று இரண்டாவது போட்டி மும்பையில் நடந்தது. நாணயச்சுழற்சியில் வென்ற இங்கிலாந்து துடுப்பாட்டத்தை தேர்வு செய் தது.

**ஷிவர் அபாரம்**

இங்கிலாந்து அணிக்கு அமி (3), சாரா ரெய்லர் (1), அணித் தலைவர் நைட் (2) என ஏமாற் றினர். பியுமண்ட் (20), வின் பீல்ட் (28) சற்று உதவ, ஷிவர் 85 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வர்கள் கைவிட இங்கிலாந்து அணி 43.3 ஓவர்களில் 161 ஓட்டங் களுக்கு சுருண்டது.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஜூலன் கோஸ்வாமி, ஷிகா தலா 4 விக்கெட்டுக் களை வீழ்த்தினர்.

**மந்தனா கலக்கல்**

எளிய இலக்கைத் துரத்திய இந்திய அணிக்கு ஜெமிமா ரொட்ரிக்ஸ் 'டக்' அவுட் டாகி அதிர்ச்சி கொடுத்தார். பூணம் 32 ஓட்டங்கள் எடுக்க ஸ்மிருதி மந்தனா அரைச் சதம் விளாசினார். இவர் 63 ஓட்டங்கள் எடுத்து திரும்பினார்.

கடைசியில் வெற்றிக்கான ஓட்டத்தை அணித் தலைவி மிதாலி ராஜ் ஒரு பவுண் டரியாக விளாச,

இந்திய அணி 41.1 ஓவர் களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடு த்து. 7 விக் கெட்டுக்களால்வெற்றி பெற்றது.



மிதாலி

இதன்மூலம் ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையில் ஒருநாள் தொடரை இந்தியா, 2:0 என்ற கணக் கில் கைப் பற்றியது. மிதாலி ராஜ் (47), தீப்தி (6) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

இரு அணிகள் மோதும் 3வது மற்றும் கடைசி போட்டி வரும் 28ஆம் திகதி மும்பையில் நடக்கிறது.

# மெஸ்சி 50வது ஹட்ரிக்



மெஸ்சி

செவில்லா அணிக்கு எதிரான 'லா லிகா' கால்பந்து லீக் போட்டியில் மெஸ்சி 'ஹட்ரிக்' கோலடித்து கைகொடுக்க பார்சி லோனா அணி 4:2 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ஸ்பெயினில், உள்ளூர் கால்பந்து கழக அணிகள் பங்கேற்கும் 'லா லிகா' கால்பந்து தொடர் நடக்கிறது.

செவில்லே நகரில் நடந்த லீக் போட்டியில் பார்சிலோனா, செவி ல்லா அணிகள் மோதின.

முதல் பாதி முடிவில் 1:2 என, பின் தங்கி இருந்த பார்சி லோனா அணிக்கு மெஸ்சி 'ஹட் ரிக்' கோல டித்து கைகொ டுத்தார் ஆட்ட நேர முடிவில் பார்சிலோனா அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

பார்சிலோனா சார்பில் மெஸ்சி (26, 67, 85வது நிமிடம்), லூயிஸ் சாரஸ் (90+3வது) கோலடித்தனர். செவில்லா அணிக்கு ஜீசஸ் நவாஸ் (22வது நிமிடம்), கேப்ரியல் மெர்கடோ (42வது) ஆறுதல் கொடுத்தனர்.

**50வது 'ஹட்ரிக்'**

அபாரமாக ஆடிய மெஸ்சி, தனது 50வது 'ஹட்ரிக்' கோல் அடித்தார். இவர், பார்சிலோனாவுக்கு 44, ஆர்ஜென்டினா வுக்கு 6 கோல் அடித்துள்ளார். பார்சி லோனா சார்பில் 'லா லிகா' தொடரில் 32, ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரில் 8, 'கோபா டெல் ரே' தொடரில் 3, மற்றைய தொடரில் ஒரு 'ஹட்ரிக்' சாதனை படைத்துள்ளார்.

தவிர, தற்போது விளையாடிக் கொண்டி ருக்கும் வீரர்களில் அதிக 'ஹட்ரிக்' கோல டித்தவர்கள் பட்டியலில் 2வது இடத்தில் உள் ளார் மெஸ்சி. முதலிடத்தில் போர்த்துக்கல் வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ (51 'ஹட்ரிக்') உள்ளார். முன்னாள் பிரேசில் வீரர் பீலே, அதிகபட்சமாக 92 'ஹட்ரிக்' கோல் அடித்துள்ளார்.


# இறுதி ஓவர் பந்துவீச்சு 'இலகல்ல'

## உமேஷுக்கு பும்ரா ஆதரவு

"எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தாலும் கடைசி நேரத்தில் பந்துவீசுவது என்பது அவ் வளவு எளிதல்ல, மிகவும் கடினமானது." என இந்தியாவின் பும்ரா தெரிவித்தார்.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி இரண்டு போட்டிகள் கொண்ட 'ரி20' தொடரில்பங்கேற்கிறது. விசாகப்பட்டனத்தில் நடந்த முதல் போட்டியில் இந்திய அணி 20 ஓவரில் 126/7 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

அடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி, ஒரு கட்டத்தில் எளிதாக வெல்லும் என நம்பப்பட்டது. மாறாக கடைசி 2 ஓவர்களில் 16 ஓட்டங்கள் தேவைப் பட்டன. இந்நிலையில் பந்து வீசிய பும்ரா, 19 ஆவது ஓவரில் 2 ஓட்டங்களை மட் டும் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப் பற்ற, கடைசி ஓவரில் அவுஸ்தி ரேலியாவுக்கு 14 ஓட்டங்கள் தேவைப் பட்டன. இதனால் இந்திய அணி வெற்றி பெற வாய்ப்பு ஏற்பட்டது.



உமேஷ்

ஆனால் 20ஆவது ஓவரை வீசிய வேகப்பந்து வீச்சாளர் உமேஷ் யாதவ், 2 பவுண்டரிகள் உட்பட 14 ஓட்டங்களை விட் டுக் கொடுக்க, அவுஸ்திரேலிய அணி 'திரில்' வெற்றி பெற்றது.

இதுகுறித்து இந்திய அணி வேகப்பந்து வீச்சாளர் பும்ரா கூறியதாவது,

பொதுவாக போட்டியின் சூழ்நிலை எப்ப டிப்பட்டதாக இருந்தாலும் கடைசி கட்ட நேரங்களில் பந்து வீசுவது என்பது அவ் வளவு எளிதல்ல. இரு தரப்பிற்கும் சாதகமாக அமைய வாய்ப்புள்ளது. ஒரு சில நேரங்களில் 50:50 என சமமாக முடிவு கிடைக்கும்.


இதுபோன்ற நேரங்களில் முடிந்தவரை சிறப்பாக செயல்படத்தான் செய்வோம். எங் களது திட்டத்தை சரியாக செயல்படுத்த முயற் சிப்போம். சில நேரங்களில் இது சரியாக அமையும். சில நேரங்களில் பாதகம் ஆகி விடும். இதற்காக வருத்தப்படத் தேவை யில்லை. போட்டியை எப்படியும் கடைசி வரை கொண்டு செல்ல வேண்டும் என திட்டமிட்டபடி எல்லாம் சரியாக நடந்தது.

**இலக்கு குறைவு**

தவிர 'சேஸ்' செய்யும் இலக்கு தெரிந்து விட்டால் அதற்கேற்ப ஓட்டங்கள் சேர்க்கலாம். குறைவாக இலக்கு என்ற நிலையில் அவ் வப்போது பவுண்டரி அடித்து விட்டால் பிறகு 'ரிஸ்க்' எடுக்க வேண்டிய வேலையே இல்லை. முதலில் துடுப்பாட்டம் செய்யும் அணிக்கு எது பாதுகாப்பான இலக்கு என்றே தெரியாது என்பது பலவீனம் தான்.

இப் போட்டியில் 15 முதல் 20 ஓட்டங்கள் அதிகமாக எடுத்திருந்தால் நன்றாக இருந் திருக்கும். எதிர்பார்த்ததை விட எங்களது துடுப்பாட்ட வீரர்கள் சற்று விரைவாக ஆட்ட மிழந்தது சிக்கலை கொண்டு வந்தது. என் னைப் பொறுத்தவரையில் கொடுக்கப்பட்ட ஆடு களத்தில் திறமைக்கு ஏற்ப கவனம் செலுத்தி சாதிக்க முயற்சிக்கிறேன். இவ்வாறு பும்ரா கூறினார்.

# வரலாறு படைத்த இலங்கைக்கு உற்சாக வரவேற்பு



தென்னாபிபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை வென்று சாதனை படைத்த இலங்கை அணியினரை விளையாட்டு துறை அமைச்சர் வரவேற்றார்.

இலங்கை கிரிக்கெட் அணி தென்னாபிரிக்க அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரை 2-0 என்ற கணக்கில் வென்றது. இதன்மூலம் தென்னாபிரிக்க மண்ணில் டெஸ்ட் தொடரை வென்ற முதல் ஆசிய அணி என்ற வரலாற்று சாதனையைப் படைத்தது.

இலங்கை அணியின் இந்த வெற்றிக்கு முன்னாள் வீரர்கள், ரசிகர்கள் என பலரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில், இலங்கைக்கு திரும்பிய டெஸ்ட் அணிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அணித்தலைவர் திமுத் கருணரத்ன மற்றும் அணி வீரர்களை வரவேற்ற விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மாலை அணிவித்து தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

# பல்வேறு விபத்துக்களில் பெண்கள் இருவர் உட்பட நான்கு பேர் உயிரிழப்பு !

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் நேற்று இடம்பெற்ற விபத்துக்களில் பெண்கள் இருவர் உட்பட நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தொம்பே, அரலகங்வில, களுத்துறை ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற விபத்துக்களிலேயே இவ்வாறு நால்வர் உயிரிழந்துள்ளனர்.

தொம்பே, தித்தபத்தர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவரும் ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

ஆட்டோ ஒன்றும் மோட்டர் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர். 29 மற்றும் 49 வயதுடைய லுணுகம மற்றும்பதுக்கை பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் அரலகங்வில பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 25 வயதுடைய இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

மோட்டார் சைக்கிளை கட்டுப்படுத்த முடியாமல் அருகில் இருந்த மின் கம்பத்துடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரும் காயங்களுக்கு உள்ளான நிலையில் அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, களுத்துறை வடக்கு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மோட்டார் சைக்கிள் ஒன்று மோட்டார் வாகனத்தின் பின்னால் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் பலத்த காயமடைந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அதில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

களுத்துறை வடக்கு பகுதியை சேர்ந்த 44 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)

# நவம்பரில் நாடாளுமன்றில் நடந்த வன்முறைகள் தொடர்பான அறிக்கை பக்கச் சார்பானது

## கம்மன்பில நிராகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் நவம்பர் மாதம் நாடாளுமன்றில் இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பான அறிக்கை பக்கச் சார்பானது என்று பிவித்துரு ஹெல உறுமயவின் செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒக்டோபர் 26ஆம் திகதி புரட்சியின் பின்னர், நாடாளுமன்றில் மகிந்த-மைத்திரி அரசாங்கத்துக்கு எதிரான அவநம்பிக்கைப் பிரேரணை முன்வைக்கப்பட்ட போது, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் நாடாளுமன்றில் குழப்பங்களை ஏற்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக பொலிஸார் மீதும், நாடாளுமன்ற உறுப்பினர் மீது மிளகாய்தூள் உள்ளிட்ட பொருட்களை எறிந்து தாக்குதல் நடத்தப்பட்டது.

இதுதொடர்பில் விசாரணை நடத்திய குழு சமர்ப்பித்துள்ள அறிக்கை பக்கச் சார்பானது என்றும், அதனை தாங்கள் நிராகரிப்பதாகவும் உதயகம்மன்பில தெரிவித்தார். (இ-7)

# அதிரடிப்படை, இராணுவம், புலனாய்வுப்பிரிவு இணைந்து கூட்டு போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை

(கொழும்பு)

முக்கிய போதைப் பொருள் கடத்தல் வர்த்தகர்களை கைது செய்வதற்காக, பொலிஸ் விசேட அதிரடிப் படையினர், இலங்கை இராணுவம் மற்றும் அரச புலனாய்வுப் பிரிவு ஆகியன இணைந்து கூட்டு நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இதன்படி போதைப்பொருள் கடத்தல் தொடர்பான புலனாய்வுத் தகவல்களை வழங்கும் பிரதான பொறுப்பு இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதன், அடிப்படையிலேயே போதைப் பொருள் கடத்தல் வியாபாரிகளை கைது செய்யும் நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## ரஞ்சனின் குற்றச்சாட்டு குறித்த விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் கைச்சாத்து

(கொழும்பு)

கொக்கெய்ன் பாவனையில் ஈடுபடும் அரசியல்வாதிகள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க வெளியிட்ட கருத்து குறித்த விசாரணை அறிக்கையில், அந்த விசாரணையை நடத்திய குழுவின் உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து இந்தக் கையெழுத்திடும் நடவடிக்கை இடம்பெற்றதாக அதன் உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்தார்.

அமைச்சர் லக்ஷமன் கிரியெல்ல தலைமையில் இந்த குழு செயற்பட்டது.

இந்த அறிக்கை நேற்றுப் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

நாளை புதன்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூட்டத்தில் முன்வைக்கப்படும்.

மேலும் இந்த அறிக்கை, குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கும் வழங்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஆசு மாரசிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

### கப்பம் பெற முயன்ற இராணுவ சிப்பாய் கைது

(மொனராகல)

மொனராகல-ஊவா குடா ஒய - ஏதிலிவேவ பிரதேசத்தில் வர்த்தகர் ஒருவரிடம் 5 இலட்சம் ரூபா கப்பம் பெற முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கப்பம் பெற்றுக் கொண்ட நிலையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து கைக்குண்டு மற்றும் பல உபகரணங்களைப் பற்றப்பட்டதாக பொலிஸ் அதிரடி படையினர் தெரிவித்துள்ளனர். (இ-7)


## கண்ணீர் அஞ்சலி

### திரு.நாகன் தம்பிராசா



எமது கல்லூரியின் கல்விசாரா ஊழியர் திரு.தம்பிராசா தவமோகன் அவர்களின் அன்புத் தந்தையார் திரு.நாகன் தம்பிராசா அவர்கள் 2019.02.25 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-5618)

யா/இணுவில் மத்திய கல்லூரி
அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர்
நலன்புரிச்சங்கம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



### அமரர். மாணிக்கம் செல்லம்மா

கடந்த 27.01.2019 அன்று கனடாவில் சிவபதம் அடைந்த எங்கள் குடும்ப குத்துவிளக்கு அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை (26.02.2019) இன்று செவ்வாய்க்கிழமை பகல் 11.30 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

வீரபத்திரர் கோவிலடி,
அச்செழு, நீர்வேலி.

மருமகன்
K.S.அச்சுதன்

(7658)


## இராசி பலன்

**மீனம்:** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் அனுகூலம் தரும், அன்பால் சாதித்துக் காட்டும் நாள்.

**மேடம்:** இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், கொடுக்கல்- வாங்கல்களில் கவனம் தேவை, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது.

**இடபம்:** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கும்பம்:** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள்.

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி, புத | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் பரணி | | |
| | | | |
| சனி, சுக், கேது | குரு சந் | | |

**26.02.2019**

மாசி 14, செவ்வாய்க்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

சப்தமி முற்பகல் 11.04 மணிவரை

அனுசம் பின்னிரவு 4.31 மணிவரை

சுபநேரம் 10.57-12.29மணிவரை

இராகுகாலம் 3.29-4.59 மணிவரை

வளவன்

**கடகம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், கல்வி நலனில் ஆர்வம் கூடும், வியாபார விருத்தியுண்டு, தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** வாகன யோகத்தால் வளம் காணும் நாள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், சயனசுகக் குறைவுகள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, பக்குவமாகப் பேசி காரியங் களைச் சாதிக்க வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்:** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.

**கன்னி:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், நீண்ட நாளை பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உடன் பிறப்புக்கள் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர்.

# வீதியைப் புனரமைக்குமாறு மாசேரி மக்கள் கோரிக்கை

(வரணி)

சாவகச்சேரி பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் உள்ள அடைக்குறிச்சி மாசேரி எல்லை வீதியாகவும் கொடிகாமம்-பருத்தித்துறை வீதியுடன் இணைக்கின்ற வாழைத்தோட்டம் வீதியானது 50 வருடங்களுக்கு மேலாக எந்தவித புனரமைப்பும் இன்றி குன்றும் குழியுமாகக் காணப்படுவதுடன் கற்கள் சிதைவடைந்து மணல் வீதியாக மாறியுள்ளது.

இந்த வீதி கிட்டத்தட்ட 4 கி.மீ நீளம் கொண்டதாகும். யுத்த சூழ்நிலையின் போது இவ் வீதி பற்றைகள் மூடி போக்குவரத்திற்கு ஏற்ற வீதியாக இருக்கவில்லை. அதுமட்டுமன்றி இராணுவ முகாம்கள் அமைந்திருந்தமையால் இந்த வீதியை மக்கள் பயன்படுத்த அஞ்சினர்.

மாற்றுப்பாதைகளின் ஊடாகவே தமது தேவைகளை நிறைவேற்றினர். இராணுவத்தினர் இப்பகுதியை விட்டு வெளியேறிய பின்பு தான் மக்கள் இந்த வீதியை போக்குவரத்திற்குப் பயன்படுத்தினர்.

மேலும் பற்றைகள் மூடியிருந்தமையால் வாகனங்கள் பயணிக்க முடியாத நிலைகாணப்பட்டது. சைக்கிள், மோட்டார் சைக்கிள் போன்றவையே பயணிக்க கூடியதாக இருந்தது.

அதுமட்டுமன்றி வழிப்பறிகளும் திருடர் தொல்லைகளும் அதிகரித்துக் காணப்பட்டன. இந்நிலைமை தொடர்பாக இப்பகுதி மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டு சென்றமையைத் தொடர்ந்து பிரதேச செயலகத்தின் மூலம் இவ்வீதியை மூடி இருமருங்கிலும் காணப்பட்ட பற்றைகள் அகற்றப்பட்டன.

தற்போது பாடசாலை மாணவர்கள், அரச உத்தியோகத்தர்கள், வியாபாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் இவ்வீதியை அதிகம் பயன்படுத்துகின்றனர். வீதி புனரமைப்பு செய்யப்பட்டமையால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்கின்றனர்.

இவ்வீதியைப் புனரமைக்குமாறு வேண்டுகோள் விடுத்தும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே அதிகளவானோர் பயன்படுத்தும் இவ்வீதியை விரைவாகப் புனரமைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கையெடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர். (5-103)

# முள்ளிப்பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினைக்குத் தீர்வு



(யாழ்ப்பாணம்)

அரியாலை, முள்ளி பகுதி மக்களது வேண்டுகோளுக்கு இணங்க அப் பகுதி மக்களின் அடிப்படை தேவையான குடிநீர் பிரச்சினைக்கான தீர்வை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி நிறைவு செய்து கொடுத்துள்ளது.

குறித்த பகுதி மக்கள் தமது பகுதிக்கான குடிநீரை பெற்றுக்கொள்வதில் பல அசௌகரியங்களை நாளாந்தம் எதிர்கொண்டு வருவதால் தமது பகுதியில் பொதுக் கிணறு ஒன்றை அமைத்து தருமாறு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நல்லூர் பிரதேச நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த பிரச்சினை தொடர்பில் கட்சியின் நல்லூர் பிரதேச நிர்வாக செயலாளர் அம்பலம் இரவீந்திரதாசன் தலைமையிலான குழுவினர் நேரில் சென்று நிலைமைகளை அவதானித்ததுடன் அப்பிரச்சினையின் முக்கியத்துவம் தொடர்பில் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கும் கொண்டுசென்றிருந்தனர்.

இதனடிப்படையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் உடனடியாக நிறைவு செய்து கொடுக்கப்பட வேண்டும் என்ற கட்சியின் நிலைப்பாட்டிற்கு அமைய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குறித்த பகுதி மக்களது குடிநீருக்கான தீர்வாக கிணறு ஒன்று புனரமைக்கப்பட்டு மக்களது பாவனைக்காக வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது கட்சியின் நல்லூர் பிரதேச நிர்வாக செயலாளர் அம்பலம் இரவீந்திரதாசன் மற்றும் கட்சியின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

# பயனாளிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு அறுகுவெளிப் பகுதியில் மக்கள் பங்களிப்புடன் உப்பளம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பயனாளிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டம் கடந்த 22 ஆம் திகதி சாவகச்சேரிப் பிரதேச சபை பிரதித் தவிசாளர் செ. மயூரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் உப்பளம் அமைப்பதற்கென வட்டார ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மாற்றுத் திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் வறுமை நிலைக் குடும்பங்கள் ஆகியவற்றிலிருந்து பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டவர்களும் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அதேவேளை தனங்கிளப்புப் பகுதியில் 1000 ஏக்கர் காணி தரிசு நிலமாகக் காணப்படுகின்ற நிலையில் முதற்கட்டமாக 500 ஏக்கர் காணியில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-10)

# நீர் வழங்கல் திட்டத்திற்கு வரணியில் அடிக்கல் நாட்டல்

(வரணி)

தென்மராட்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட வரணி கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் ஒருபகுதி மக்களுக்கு தேவையான குடிநீரினை வழங்குவதற்கு தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களம் நடவடிக்கையெடுத்துள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த புதன்கிழமை வட வரணி சூழாமுறிவு முருகன் ஆலயத்திற்கு அருகில் இடம் பெற்றது.

தென்மராட்சி பிரதேச செயலாளர் அடிக்கல்லினை நாட்டிவைத்தார். இந்த நிகழ்வில் குடிநீர் வழங்கல் திணைக்கள அதிகாரிகள், கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன் மூலம் கிராமமக்களின் குடிநீர்த்தேவை ஓரளவு பூர்த்தி செய்யப்படும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (5-103)

# மாற்றுத்திறனாளிகள் வந்துசெல்ல அலுவலகங்களில் வசதியில்லை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைமை அலுவலகத்திற்குள் மாற்றுத் திறனாளிகள் வந்து செல்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென உப தவிசாளர் செ.மயூரன் முன்மொழிவினை சமர்ப்பித்துள்ளார்.

சபையின் அமர்வு அண்மையில் நடைபெற்ற போது உபதவிசாளர் மாற்றுத் திறனாளிகள் பற்றிக் கருத்து தெரிவிக்கையில், நாட்டில் சமாதானம் வேண்டி அண்மையில் மாற்றுத் திறனாளி ஒருவர் நாட்டில் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அவரை கொடிகாமம் நகரப் பகுதியில் வரவேற்ற போது பல அலுவலகங்களில் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் அனுகுமுறைகள் மேற்கொள்ளப்படவில்லையென கவலை தெரிவித்திருந்தார்.

மாற்றுத் திறனாளிகள் பிரதேச சபை அலுவலகத்திற்குள் வந்து செல்லக் கூடிய வகையில் வசதிகளை மேற்கொள்ளப்படாமல் இருப்பது வேதனையளிக்கிறது. சபையின் தலைமை அலுவலகம் உப அலுவலகங்கள் போன்றவற்றில் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தக்கூடிய வகையில் வசதிகளை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இந்த முன் மொழிவு சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்டதென தவிசாளர் தெரிவித்தார். (5-10)

# முன்பள்ளியின் விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் அமரர்கள் சுப்பிரமணியம் நகுலேஸ்வரி ஞாபகார்த்த குட்டிச்சுட்டி முன்பள்ளியின் விளையாட்டு விழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் முன்பள்ளி முன்றலில் (இருபாலை வீதி கோண்டாவில் கிழக்கு) தலைவர் து.சுதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண நன்னடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்பு சேவைகள் திணைக்கள ஆணையாளர் தி. விஸ்வரூபன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை அதிபர் கணிதச் சுடர், ச. வாமதேவன், ஊர்காவற்றுறை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் உ.வதனாஜ், ஜே/119 கோண்டாவில் வட கிழக்கு கிராம உத்தியோகத்தர் எஸ். விஜிதன், நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ரேகாலினி கபில் நாத் ஆகியோர் கலந்து கொள்வர். (5)




# மகளிர் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ் தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் "மகளிர் மகாநாடு" எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (5-60)

# 'மென்தகடு' ஓவியக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நாளை 27 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி வரையான காலப்பகுதியில் பல்கலைக் கழகத்தின் புதிய கலைப் பீடக் கட்டடத் தொகுதியிலுள்ள கலைக் கூடத்தில் நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் "மென்தகடு" எனும் தலைப்பிலான ஓவியக்காட்சி ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்காட்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைத் துறையின் சித்திரமும் வடிவமைப்புத்துறையில் பட்டத்தைப் பூர்த்தி செய்தவரும் வளர்ந்து வரும் ஓவியருமாகிய கிருஷ்ணப்பிரியா தர்மகிருஷ்ணனின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இக்காட்சியானது நாளை 27 ஆம் திகதி மாலை 2 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு நாளை மறுதினம் 28 மற்றும் எதிர்வரும் முதலாம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணி வரை இடம்பெறவுள்ளது.

ஓவியத்துறை மற்றும் காண்பியத்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொள்வதன் மூலம் பயன்பெறமுடியும் என நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி தா.சனாதனன் தெரிவித்துள்ளார். (5)

# புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

அரியாலை அபிவிருத்திச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு நேற்று முன்தினம் அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் தலைவர் சு.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெற்றது.

இதில் வரும் மூன்று ஆண்டுகளுக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக முன்னாள் கணக்காளர் சண்முகரட்ணம், செயலாளராக முன்னாள் பிரதம நூலகர் ச.தனபாலசிங்கம், பொருளாளராக முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் திருமதி விமலராணி சிவம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5)

# தாயின் இறப்பைத் தாங்காமல் மகள் உயிர் மாய்த்த சோகம்

(யாழ்ப்பாணம்)

தாயின் இறப்பைத்தாங்க முடியாத மகள் தவறான முடிவெடுத்து உயிர்துறந்துள்ளார்.

கைதடி மத்தி குமரநகரைச் சேர்ந்த கணேசலிங்கம் அருட்சியா (வயது 21) என்ற இளம் பெண்ணே நேற்றுக்காலை 6 மணியளவில் தற்கொலை செய்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, குறித்த பெண்ணின் தாயார் கடந்த வாரம்சுகயீனமுற்ற நிலையில் மரணமடைந்ததாகவும் தாயின் இறப்பையடுத்து குறித்த பெண் மன உளைச்சலுக்குள்ளாகிய நிலையில் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (5-10-11)

# ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி ஆரோகண அரங்க கல்லூரியின் மூன்றாம் ஆண்டு நிறைவும் ஆற்றுகை நிகழ்வுகளும் இன்று 26 ஆம் திகதி செவ்வாய் கிழமை பிற்பகல் 6 மணியளவில் அளவெட்டி ஆரோகண அரங்கில் ஆரோகண அரங்க கல்லூரி இயக்குநர் து.அயூரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விவசாயப் பிரதி அமைச்சருமான அங்கஜன் இராமநாதன், சிறப்பு விருந்தினர்களாக யா/மகாஜன கல்லூரி அதிபர் ம.மணிசேகரம், செயற்திறன் அரங்க இயக்குநர் தே.தேவானந், கௌரவ விருந்தினராக நில அளவையாளர் சி.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# கந்தபுராண விரிவுரை

(யாழ்ப்பாணம்)

சுவாமி சிதாகாசானந்தா வால்நல்லூர்சின்மயா மிஷன் வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் நடத்திவரும் கந்தபுராண விரிவுரை இன்று மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை சின்மயா மிஷன் ஞானவேல் ஆச்சிரமத்தில் (இல.700, பருத்தித்துறை வீதி, நல்லூர்) நடைபெறுகின்றது. இதில் "உங்களை வெல்ல எவராலும் முடியாது" என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறும். (5)

# கற்றல் உபகரணம் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

மந்துவில் வடக்கு சக்தி சிறுவர் கழகத்தைச் சேர்ந்த 34 சிறுவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் சமுர்த்தி உத்தியோகத்தர் த.கிருபாகரன் தலைமையில் இடம்பெற்றது.

மட்டுவிலைச் சேர்ந்த கோ.மகேஸ்வரனின் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந் நிகழ்வில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (5-10-30)

## சிறந்த உற்பத்தியாளர்களுக்கு தரச்சான்றிதழ்

உள்ளூர் கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கோடு (GMP) தரச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கைத்தொழில் வாணிப அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

உள்ளூர் கைத்தொழில் துறையின் வினைத்திறனை உயர்வடையச் செய்தல், உணவுப் பாதுகாப்பை விருத்தி செய்யும் நோக்குடன் 2019 ஜனவரி முதலாம் திகதி வருடாந்த உற்பத்தி 250 மில்லியனுக்குக் குறைந்த மற்றும் 50 இற்கு குறைந்த ஊழியர்எண்ணிக்கையை கொண்ட கைத்தொழிற்சாலைகள் விண்ணப்பிக்க முடியும்.

தெரிவு செய்யப்படும் துறைகளாக வாசனைப் பொருள் உற்பத்தி உணவு மற்றும் பான வகைகள் , இனிப்புப் பண்டங்கள் மற்றும் பேக்கரி உற்பத்தி, தேங்காய் சார் உற்பத்திகள், பால்சார் உற்பத்திகள் மற்றும் இறைச்சி, மீன் உற்பத்திகளுக்குள் தெரிவு செய்யப்படும் கைத்தொழில் உற்பத்தியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா வரை சான்றிதழ்கட்டணம் செலுத்தப்படும்.

இத்திட்டத்தில் இணைந்து கொள்ள விரும்பும் உள்ளூர் கைத்தொழில் உற்பத்தியாளர்கள் யாழ். மாவட்ட செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (இ-10)

# கூட்டு ஒப்பந்தத்தை இனி மாற்றியமைக்க முடியாது

(ஹற்றன்)

கைச்சாத்திடப்பட்டுள்ள கூட்டு ஒப்பந்தத்தை இனி மாற்றி அமைக்க முடியாது என்று முதலாளிமார் சம்மேளனம் அறிவித்துள்ளது.

அதன் செயலாளர் லலித் ஒபேசேகர விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 28ஆம் திகதி பெருந்தோட்ட நிறுவனங்கள் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இதில் 700 ரூபாய் அடிப்படை வேதனத்துடன், 50 ரூபாய் மேலதிக கொடுப்பனவையும் சேர்த்து மொத்த சம்பளமாக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 750 ரூபாய் வழங்கப்படும் என்று தீர்மானிக்கப்பட்டது.

எனினும் இந்த தொகைக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் பெருந்தோட்டத்துறையினருக்கு புதிய வேதனத்தொகையை வழங்குவதற்கான எந்த நடவடிக்கைகளையும் தற்போது செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டியதில்லை என்று லலித் ஒபேசேகர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## அறை வாடகைக்கு

வெள்ளவத்தை கப்டன் லேனில் படிக்கும், உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு மட்டும்.

தொடர்பு:

077 548 8247,
076 768 5819

(5611)



இணுவில் திருப்பதி

அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய

## இலட்சார்ச்சனை விழா 2019

### 22.02.2019-03.03.2019 வரை

கோவிந்தன் அடியார்களே!

வேண்டுவார்க்கு வேண்டுவன தந்தருளும் வண்ணம் கோவில் கொண்டிருக்கும் நித்திய கல்யாண மூர்த்தியாக அருள்பாலிக்கும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நிகழும் விளம்பி வருடம் மாசித் திங்கள் 10ஆம் நாள் (22.02.2019) தொடக்கம் மாசித்திங்கள் 19ஆம் நாள் (03.03.2019) திருவோண நட்சத்திரம் கூடியுள்ள நன்னாள் வரை இலட்சார்ச்சனை நடைபெற திருவருள் கூடியுள்ளது. தச அவதார மூர்த்தியான எம்பெருமானுக்கு பத்து ஆச்சாரியர்கள் ஒன்றுகூடி எம்பெருமானுக்கு இக்கைங்கரியம் நடைபெறவுள்ளதால், அடியார்கள் யாவரும் இவ்வாலயத்திற்கு வந்து, இந்த அர்ச்சனையிலும், தினமும் நடைபெறும் மகாயாகத்திலும் கலந்து கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

**தினமும் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி 7.00 மணிக்கு நிறைவடையும்**

இன்றைய தினம்

05 ஆம் நாள் (26.02.2019) சந்தான கோபால ஹோமம் - பிள்ளைப்பாக்கியம் பெறுவதற்க

06 ஆம் நாள் (27.02.2019) இலட்சுமி ஹோமம்/தன ஆகர்ஷண லக்சுமி ஹோமம்- ஸ்ரீசூக்த ஹோமம் - செல்வம் பெறுவதற்க

07ஆம் நாள் (28.02.2019) நாராயண சுத்த ஹோமம், புருஷ சுத்த ஹோமம் - சர்வசித்தி

08 ஆம் நாள் (01.03.2019) சம்பரண சுத்த ஹோமம்-நாட்டில் உள்ள குழப்பங்கள் நீங்க

09 ஆம் நாள் (02.03.2019) விஷ்ணு சகஸ்ரநாம ஹோமம் - சர்வ சித்தி

10 ஆம் நாள் (03.03.2019) பகவத் கீதா ஹோமம் - சர்வசித்தி பெறல், மகா பூர்ணாகுதி, தாரா ஹோமம், மாலை 2.00 மணிக்கு பகவத் கீதா ஹோமம் ஆரம்பமாகி மாலை 6.00 மணியளவில் பூர்ணாகுதியும் விஷேட பூஜையும் தொடர்ந்து திருவேங்கடேஸ்வரப் பெருமானுடன் கும்ப வீதியுலா இடம் பெற்று கும்ப சம்புரோட்சணம் நடைபெறும்.

**முக்கிய குறிப்பு:** விஷேட ஹோமங்கள் நடைபெறுவதால் அடியார்கள் தங்களின் வேண்டுதலுக்கேற்ப ஹோமத் திரவியங்களை ஆலயத்திற்கு சமர்ப்பிக்க முடியும். தொடர்புகளுக்கு ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இல. :
021 224 2300, 077 725 2476

ஆலய தர்மகர்த்தா
ச.கணேசலிங்கம்

(7659)



## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 1<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:B.Sc(QS), HND, NDES Civil, Quantity Surveyor, Quatar<br>எதிர்பார்ப்பு:A/L , பட்டதாரி<br>தொ.இ: B/9375 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 91 1/2 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில்<br>தொ.இ: G/2547 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: உத்திராடம் 3<br>கி.பா: 27 செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: HNDE, Sight Engineer<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ: B/9377 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 1<br>கி.பா: 33<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:BIT பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: Engineer, Doctor, Bank, சைவபோசணம்<br>தொ.இ: G/2549 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா: 101சூரி செவ் 7 இல்<br>உயரம்: 154cm<br>தகைமை/தொழில் தனியார் தொழில் UK<br>எதிர்பார்ப்பு:O/L,AL, உள்நாடு, வெளிநாடு<br>தொ.இ: B/9380 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>கி.பா: 45 3/4சூரி செவ் 7 இல்<br>தகைமை/தொழில்: BIT பட்டதாரி, AAT Data Entry Operator அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer, உயர் கல்வி, தொழில் தகமை<br>தொ.இ: G/2573 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>உயரம்: 5'4"<br>தகைமை/ தொழில்: HNDA பட்டதாரி Technical Officer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி ஆசிரியர், வங்கி, எழுதுவினைஞர்<br>தொ.இ: B/9381 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 34 3/4செவ் 2 ல்உயரம்: 5'2"தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: அரச தொழில், வெளிநாடு<br>தொ.இ: G/2586 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## இணுவில் இந்துவின் வாழ்த்துக்கள்

யாழ். பல்கலைக் கழகத்தில் 22.01.2019 அன்று நடைபெற்ற 34 ஆவது பட்டமளிப்பு விழாவில் பட்டங்கள் பெற்ற எமது பாடசாலை ஆசிரியர்களை வாழ்த்துவதோடு



திருமதி.
கலைவாணி உருத்திரன்
PGDE Merit Pass



திருமதி.
தர்சினி கிறிஸ்ரி நிரஞ்சன்
PGDE Distintion Pass



திருமதி.
கல்பனா ராஜ்குமார்
PGDE Distintion Pass

வே.சேந்தன்-SLTES-III ஆசிரியர் கல்வியியலாளர் சேவை-தரம்-III

ஆசிரிய கல்வியியலாளர் சேவை தரம் III (SLTES-III) இல் பட்டம் பெற்ற வேலும் மயிலும் சேந்தன் ஆசிரியர் அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
இணுவில் இந்துக் கல்லூரி, இணுவில்.

(7636)



## லொறி, லாண்ட் மாஸ்ரர் ஏல விற்பனைக்கான கேள்வி கோரிக்கை

NPHT 9896 இலக்கமுடைய நல்ல நிலையிலுள்ள லொறி RK 80102226 இலக்கமுடைய லாண்ட் மாஸ்ரர் விற்பனைக்கு உண்டு. பெற விரும்புவோர் வாரத்தின் ஐந்து (சனி, ஞாயிறு தவிர்ந்த) நாட்களும் 8.30 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரையும் கீழ்க்காணும் முகவரியில் பார்வையிட முடியும் என்பதோடு கேள்வி கோர விரும்புவோர் தங்கள் கேள்வி கோரிக்கையினை மூடு தபாலில் இட்டு, இடது பக்க மேல் மூலையில் லொறி, லாண்ட் மாஸ்ரர் எனத் தவறாது குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ எமக்குக் கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:
பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்,
நெல்லியடி, கரவெட்டி. 021 226 3263

(சி-5617)

# போர்த்துக்கீசர் - ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணப் பட்டினம் - ஒரு பார்வை

13



கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.

### ஒல்லாந்தர் காலத்தில் நெறிமுறைப்படுத்தப்பட்ட தேசவழமைச் சட்டம்

முடியாட்சி முறையின் கீழ் ஆளப்பட்டுவந்த யாழ்ப்பாண இராச்சியத்தில், சட்டம், ஒழுங்கு முதலியவை எழுத்தில் இல்லாத ஆனால், குறைந்தது மூன்று, நான்கு நூற்றாண்டுகளாகவாவது நடைமுறையில் இருந்து வளர்ந்த ஒரு சட்டமுறை இருந்திருக்கிறது. கி.பி. 1620 இல் போர்த்துக்கீசர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றித் தங்கள் நேரடி ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்த பின்னரும், அவர்கள், யாழ்ப்பாணத்தின் உள்ளூர் முதலியார்கள் ஊடாகவே மக்களைக் கட்டுப்படுத்தி வந்தமையால் பழைய நடைமுறைகளே யாழ்ப்பாணத்தில் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டன.

18 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், யாழ்ப்பாண இராச்சியத்தின் குடிகளைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டங்களை எழுத்து மூலமாகத் தொகுக்கும் பொறுப்பு, அன்றைய டச்சு ஆளுநர் கோர்னெலிஸ் ஜோன் சைமன்ஸ் **(Cornelis Joan Simons)** என்பவரால் யாழ்ப்பாணத்தில் திசாவை பதவி வகித்த கிளாஸ் ஈசாக்ஸ் **(Class Issaksz)** என்பவருக்கு வழங்கப்பட்டது. அவர், யாழ்ப்பாணத்து முதலியார்கள் (உதாரணம்: டொன் பிலிப் வில்லைவராச முதலியார் , டொன் அந்தோனி நாராயணன், டொன் வாஸ் முதலியார், டொன் பிரான்சிஸ்கோ அருளம்பல முதலியார் போன்றோர். அந்தக்காலத்தில் அரசில் பதவிவகிப்பதாயின் உத்தியோகத்தர்கள் டச்சு நாட்டுப் பெயர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்) 12 பேரின் உதவியுடன் நாட்டின் வழமைகளைத் தொகுத்தார்.

இதுவே தேசவழமைச் சட்டம் எனப்படுகின்றது. ஜூன் 4, 1707 ஆம் ஆண்டில் ஒல்லாந்த அரசினால் யாழ்ப்பாணத்துக்கு உரிய சட்டமாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இச்சட்டம் டச்சு மொழியில் எழுதப்பட்டுத் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

ஒல்லாந்தர் உள்ளூர் பிரச்சினைகளில் ஈடுபடாமல் ஆதிக்க வகுப்பின் மூலம் ஆட்சியைக் கட்டுப்படுத்தும் தந்திரத்துக்கு மையவே தேசவழமைச் சட்டத்தை அப்போதைய யாழ்ப்பாண ஆதிக்க வகுப்பின் ஆளுமைகளைக் கொண்டு தொகுத்தனர். பின்னர் ஆங்கிலேயரால் 1806 ஆம் ஆண்டு சட்ட மூலமாக்கப்பட்டது. இச்சட்டமானது பின்னர் 1869 இலும் பின் 1911 இலும் கடைசியாக 1948 இலும் திருத்தியமைக்கப்பட்டது. இச்சட்டம் உடைமை உரிமைகள் பற்றியும் திருமணம் பற்றியும் விபரமான வரையறைகளை விபரிக்கின்றது.

இலங்கையில் பொதுவான சட்டமான பொதுச்சட்டக் கோவைக்கு மேலதிகமாக உள்ள மூன்று சட்டங்களில் தேசவழமைச் சட்டமும் ஒன்று. ஏனையவை இரண்டும் கண்டிச் சட்டம் இஸ்லாமியச் சட்டம் ஆகியவையாகும். கண்டிச் சட்டமானது கண்டி வாழ் பௌத்தர்களுக்கும், இஸ்லாமியச் சட்டமானது இலங்கை வாழ் இஸ்லாமியர்களுக்கும், தேசவழமைச் சட்டமானது வட மாகாணத்தில் (யாழ்பாணத்தில்) வாழும் மக்களுக்கும் மாத்திரமே இயல்புடையதாகிறது.

தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமான பெண் அசையா ஆதனம் தொடர்பாக எந்த உறுதியையும் தனது கணவனுடன் சேர்ந்தே (கணவரின் சம்மதத்துடன்) எழுத வேண்டும் என்பது கட்டாய விதியாகும். அது அவளது தனிப்பட்ட சொத்தாக இருந்தாலும் சரி, தேடிய தேட்டப் பங்கு அல்லது சீதனம், நன்கொடை யாவற்றுக்கும் இது பொருந்தும்.

எனினும் 1911 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்படி சில காரணங்களை நிரூபித்து மாவட்ட நீதிமன்றின் அனுமதியைப் பெற்றபின்னர் கணவரின் சம்மதமின்றி அவளது அசையா ஆதனத்தையும் கைமாற்ற முடியும்.

திருமணமான ஆண் தான் திருமணம் செய்வதற்கு முன்னர் வாங்கிய அறுதி ஆதனத்தையும் அவனுக்கு நன்கொடை, முதுசொம், உரிமைவழி வந்தடைந்த ஆதனத்தையும் கைமாற்றம் செய்ய முழு உரிமையுடையவன். அதே போல் திருமணத்தின் பின் வாங்கிய தேடிய தேட்டத்தில் சரி அரைப்பங்கை தன் விருப்பப்படி எதுவும் செய்யலாம்.

குடியியல் வழக்கு ஒன்றில் தேசவழமைக்குட்பட்ட திருமணமானபெண் ஒருவர் அவளது கணவனுடன் இணைந்தே வழக்காளியாகவோ எதிராளியாகவோ தோன்ற முடியும். மேலும், குற்றவியல் வழக்கிற்கு இது பொருந்தாது.

ஆதனங்கள் தொடர்பான தேசவழமைச் சட்ட ஏற்பாடுகள்: தேசவழமைச் சட்டத்தின் கீழ் ஆதனங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது.

- முதுசொம்
- சீதனம்
- தேடிய தேட்டம்.
- உரிமை

### முதுசொம்

ஒருவரது பெற்றோர் இறப்பதால் அல்லது பெற்றோர் வழி மூதாதையர் இறப்பதால் வழிவழியாக ஒருவரை வந்தடையும் ஆதனமே "முதுசொம்" எனப்படும். கணவனுடைய முதுச ஆதனத்தில் மனைவிக்கோ அல்லது மனைவியினுயை முதுச ஆதனத்தில் கணவனுக்கோ எவ்வித உரிமையும் கிடையாது. இறந்த ஒருவரின் முதுச ஆதனம் அவரது பிள்ளைகளையே சென்றடையும். அவரது வாழ்க்கைத்துணை அவ் ஆதனத்தில் உரிமைகோரமுடியாது. முதுச ஆதனத்தை விற்று வரும் பணத்தில் வாங்கும் ஆதனமும் முதுசம் ஆதனமேயாகும்.

### சீதனம்

முறையான திருமணம் செய்து கொள்ளும் பெண்ணுக்கு திருமணத்தை முன்னிட்டு கொடுக்கப்படும் ஆதனமே சீதனமாகும். திருமணத்திற்கு முன்னரோ திருமணத்தன்றோ அல்லது திருமணத்தின் பின்னரோ சீதனம் கொடுக்கப்படலாம். சீதன ஆதனமானது சீதன உறுதி மூலமே கொடுக்கப்படும். சீதன ஆதனம் மனைவிக்கு மட்டுமே உரிய தனிச்சொத்தாகும். சீதனம் கொடுக்கப்பட்டால் அதன்பின் எக்காரணம் கொண்டும் அதனை கை மீட்க முடியாது. சீதனத்தைப் பெற்றுக்கொண்ட பெண் அந்த ஆதனத்தை கைமாற்றம் செய்யாமல் இறந்தால் மட்டுமே அவளது பிள்ளைகளை அது சென்றடையும். பிள்ளைகள் இன்றி இறப்பாராயின் சீதனத்தை யார் கொடுத்தார்களோ அவர்களை அவ் ஆதனம் மீளச்சென்றடையும். அவர்களும் இறந்திருப்பின் அவளது சகோதரர்களுக்கு சமபங்காக சென்றடையும்.

அசையா ஆதனத்தை சீதனமாக பெற்றுக்கொண்ட பெண் அதன்பின் அவளது பெற்றோர் இறந்தபின் அவர்களது மேலதிக சொத்தில் பங்கு கோரமுடியாது. ஆனால் அசையா ஆதனத்தை சீதனமாகப் பெறாது நன்கொடையாக பெற்றுக்கொண்ட பெண் பெற்றோர் இறந்த பின் அவர்களது சொத்தில் பங்கு கோர முடியும்.

மேலும் சீதன உறுதி எழுதப்படும்போதும் நன்கொடை உறுதி எழுதப்படும் போதும் அசையா ஆதனத்தைக் கொடுப்பவர் தங்களுக்கு சீவிய உரித்தை வைத்துக் கொண்டு அதனை உறுதியில் தெளிவாகக் காட்டி எழுத முடியும்.

### தேடிய தேட்டம்

திருமணம் நிலைத்திருக்கும் காலத்தில் கணவனால் அல்லது மனைவியால் அல்லது இருவரும் சேர்ந்து விலை கொடுத்து வாங்கும் ஆதனம் தேடிய தேட்டம் என அழைக்கப்படும். தேடிய தேட்டத்தில் அரைவாசிப்பங்கு கணவனுக்கும் மிகுதி அரைவாசி மனைவிக்கும் சொந்தமாகும். கணவன் தன் தேடிய தேட்டப் பங்கை தன் விருப்பப்படி கைமாற்றமுடியும்

ஆனால் மனைவி தேசவழமைச் சட்டத்திற்குட்பட்ட திருமணமானபெண் என்பதால் கணவனுடன் சேர்ந்தே தன் தேடிய தேட்டப் பங்கை கைமாற்ற முடியும். தேடிய தேட்டமுடைய குடும்பத்தில் கணவன் அல்லது மனைவி ஒருவர் இறந்தால் இறந்தவருக்குரிய பங்கில் அரைப்பங்கு அதாவது முழு ஆதனத்தின் கால் பங்கு வாழ்க்கைத்துணைக்கும் மீதி அதாவது முழு ஆதனத்தின் கால்பங்கு இறந்தவரின் பிள்ளைகளுக்கு சமபங்காக சென்றடையும். பிள்ளைகள் இல்லாவிடின் இறந்தவரின் பெற்றோர் சகோதரர்களுக்கு உரிமை வழியாக சென்றடையும்.

எனவே உயிருடனிருக்கும் வாழ்க்கைத்துணைக்கு முக்கால்(3/4) பங்கு சொந்தமாகி விடும். பிள்ளைகளுக்கு கால்(1/4) பங்கு சொந்தமாகும். தேடிய தேட்டம் பிள்ளைகளை சென்றடையும் போது அது முதுசொம் என்ற பெயரைப் பெறும்.சீதனம் வாங்கித் திருமணம் செய்த பெண் பிள்ளைகளுக்கு இந்த பங்கைப்பெற தகுதியில்லை.

### உரிமை ஆதனம் அல்லது மலட்டுச்சொத்து

பெற்றோர் அல்லது மூதாதையர் தவிர்ந்த உறவினர் ஒருவர் இறக்கும் போது வழி வழியாக ஒருவரை வந்தடையும் ஆதனம் உரிமை(அடிநிலை) ஆதனம் அல்லது மலட்டுச்சொத்து எனப்படும். உரிமை வழியாக ஒரு ஆதனத்தைப் பெறுபவருக்கு அது அவரது தனிப்பட்ட ஆதனமாக அமையும் என்பதோடு அவர் அதனை தன் விருப்பப்படி கைமாற்றம் செய்யமுடியும். இது பெரும்பாலும் சொரியல் பங்காகவே இருக்கும்.

1947 இல் 58இல் யாழ்ப்பாண விவாக உரிமைகள் மற்றும் உரிமைகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் தேசவழமை சட்டத்துக்குட்பட்டவர்கள் யாதொரு பிரதேசத்தில் இருப்பினும் அவர்களின் சொத்து இச்சட்டத்தின் கீழ் செல்லுபடியாகும். இச்சட்டத்தின்படி காணி விற்பனையின்போது அந்த காணிக்கண்மையிலுள்ள நபருக்கு முதலில் அழைப்பு விடுக்கும் அவசியம் கூறப்பட்டிருக்கின்றது.

இச்சட்டம் ஆள்சார் சட்டமாகவும் **(Personal law)**, இடம்சார் **(Geographical Law)** சட்டமாகவும் தொழிற்படுகின்றது. சுதேச சட்டங்களில் இவ்விரு வகையான ஆளுகைகளையும் உடைய சட்டம் தேசவழமை மட்டுமே! நபர்சார் சட்டம் எனில் யாழ்ப்பாணத் தமிழர்கள் இலங்கையில் எங்கு வசித்தாலும் (வட மாகாணத்திற்கு உள்ளேயும் வெளியேயும்) அவர்கள் தேசவழமையால் ஆளப்படுவார்கள். இடம்சார் சட்டம் என்பது வடமாகாண நிலங்கள் யாவும் இச்சட்டம் மூலம் ஆளப்படும். அந்நிலங்கள் யாருக்கும் சொந்தமாக காணப்படலாம்.உதாரணமாக சிங்களவர், முஸ்லிம் நபர்கள் யாராவது காணியை வடமாகாணத்தில் கொண்டிருந்தாலும் அவர்கள் அக்காணி தொடர்பில் தேசவழமையினால் ஆளப்படுவார்கள். இது இடம்சார் ஆளுகை எனப்படும்.


பேரினவாதிகள் கூறி வருகின்றதைப் போன்று எந்தவொரு இலங்கைப் பிரஜையும் தனி உடைமையாகவுள்ள எந்தச் சொத்தையும் வாங்குவதை தேசவழமை தடைசெய்யவில்லை. அத்துடன் இச் சட்டம் தமிழர்களுக்கு எந்தவிதமான பிரத்தியேகமான சலுகையையும் வழங்கவில்லை. ஒன்றுக்கும் அதிகமானவர்களின் கூட்டு உடைமையான காணியையோ, சொத்தையோ வெளியார் வாங்குவதைத் தடுப்பதே தேசவழமையின் நோக்கமாகும். கூட்டு உடைமையாகவுள்ள சொத்தின் ஒரு பகுதியை வெளியார் வாங்க அனுமதிக்கப்படும் போது தகராறுகளுக்கு இடமேற்படுகிறது என்பதே இதன் பின்னணியில் உள்ளவாதமாகும்.

(முற்றும்)






கிளிநொச்சி





முல்லைத்தீவு





வவுனியா





மன்னார்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரியும் நேற்று ஆரம்பிக்கப்பட்ட ஜெனிவா மனித உரிமைகள் சபை அமர்வை முன்னிறுத்தியும் வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் அந்தந்த மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்த கவனயீர்ப்புப் போராட்டம்,முழு கடையடைப்பு என்பனவற்றிற்கு பல்வேறு தரப்பினரும் தமது ஆதரவுகளை வழங்கியிருந்தனர். இந்நிலையில்,

**கிளிநொச்சி**

கிளிநொச்சி நகர் உள்ளிட்ட பகுதிகளில் நேற்றையதினம் மக்களின் நடமாட்டம் மிகவும் குறைவடைந்ததுடன் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

சேவை சந்தையில் கறுப்பு கொடிகள் கட்டப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்ட்டது. பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தராமையால் வெறிச்சோடி காணப்பட்டதுடன், எவ்வித கற்றல் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை.

இதேவேளை கிளிநொச்சி அரச பேருந்துகள் சாலையில் தரிக்க விடப்பட்டிருந்த இதேவேளை தனியார் பேருந்துகளும் சேவையில் ஈடுபடவில்லை.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, முள்ளியவளை, ஒட்டுசுட்டான் மாங்குளம்,மல்லாவி ஆகிய நகர்ப்பகுதிகளில் வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட அனைத்தும் மூடப்பட்டு ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு வழங்கப்பட்டது. தனியார் மற்றும் அரச பேருந்துகள் சேவைகளில் ஈடுபடவில்லை. அதேவேளை பாடசாலைகளுக்கு மாணவர்கள் வராமையால் கல்வி செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

**வவுனியா**

வவுனியா நகர் முழுமையாக ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் வர்த்தகர்கள் தமது அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி ஹர்த்தாலுக்கு ஆதரவை வழங்கியிருந்தனர். இதேவேளை உள்ளூர் பேருந்து சேவைகள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்ததுடன் வெளியூருக்கான சேவைகள் இடம் பெற்றிருந்தன.

ஆட்டோக்கள் சேவையில் ஈடுபடவில்லை. அத்துடன் புகையிரத கடவை காபபாளர்களும்தமதுசேவையை புறக்கணித்திருந்தனர். பாடசாலைகளுக்கு குறைந்தளவான மாணவர் களே வருகை தந்திருந்தனர்.அரச திணைக்களங்கள் வழமை போன்று நடவடிக்கைகளை முன் னெடுத்திருந்தன.

**மன்னார்**

மன்னார் பஸார் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. தமிழ், முஸ்லிம் வர்த்தகர்கள் ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

மன்னாரில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகள் இடம் பெறவில்லை.

போக்குவரத்து சேவைகள் இல்லாமையினால் அதிகளவிலான மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லை.

அரச மற்றும் தனியார் அலுவலகங்களுக்கும்பணியாளர்கள் சமூக மளிக்கவில்லை. இத னால் மன்னார் முழுவதும் இயல்பு நிலை பாதிப்புக்கப்பட்டதுடன் மன்னாரில் பூரண ஹர்த்தால் அனுஷ்ரிக்கப்பட்டது.

இதேவேளை அனைத்து உணவகங்களும் மூடப்பட்டு இருந்தது.

(2-281-283-250)




பன்றிக்கெய்தகுளம் புகையிரத பாதையில்

## உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தி பாதுகாப்பான கடவை திறந்து வைப்பு

(குருமன்காடு)

வவுனியா, ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் அம்பாள் வீதியிலுள்ள புகையிரதப் பாதைக்கு அமைக்கப்பட்ட பாதுகாப்பு இரு பக்க கடவைகளும் நேற்றுக் காலை 9 மணி யளவில் புளியங்குளம், ஓமந்தை, கனகராஜன் குளம், நெளுக்குளம், பூவரசன் குளம், நெடுங்கேணி ஆகிய ஆறு பகுதி பொலிஸ் நிலையங்களின் உதவி பொலிஸ்அத்தியட்சகர் டபிள்யூ. ஜ.ஆர். பொன்சேகாவினால்



உத்தியோகபூர்வமாக திறந்து மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடவையில் 16. 09.2018 வீதியைக் கடக்க முற்பட்ட கார் ஒன்றில் பயணித்த 8பேரில் 4பேர் புகையிரதம் மோதியதில் உயிரிழந்தனர்.

நேற்றைய தினம் புகையிரக்கடவையில் உயிரிழந்த நான்கு பேருக்கு அஞ்சலி செலுத்தி மங்கல விளக் கேற்றலுடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந் நிகழ்வில் ஓமந்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுரேஸ் த சில்வா, தமிழ் தெற்கு பிரதேச சபை உறுப்பினர் திருமதி கோகிலகுமார் அஞ்சலி, ஆலய நிர்வாக உறுப்பினர்கள், கிராம அலுவலகர், கிராம அமைப்புக்கள், மாதர் அமைப்பு, கிராம மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

ஈஷி மிஷன் ஆலயத்தின் அனுசரணையில் பிரதான பிஷப் பி.எம். இராஜசிங்கத்தினால் குறித்த புகையிரத கடவைக்கு பாதுகாப்பான கடவை திறந்து வைக்கப்பட்டது. (2-250)

## மன்னாரில் சட்டத்தரணிகளும் ஹர்த்தாலுக்கு பூரண ஆதரவு

(மன்னார்)

மீண்டும் இலங்கை அரசாங்கத்திற்கு இரண்டு வருட கால அவகாசம் கொடுக்கக் கூடாது எனவும் காணமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் சர்வதேச சமூகம் தலையிட்டு காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனும் கோரிக்கையின் அடிப்படையில்வடக்கு மாகாணம்தழுவிய ரீதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று திங்கட்கிழமை கிளிநொச்சியில் முன்னெடுத்த கவனயீர்ப்பு போராட்டத்திற்கு மன்னார் மாவட்ட சட்டத்தரணிகள் பூரண ஆதரவை வழங்கியிருந்த னர்.

குறிப்பாக மன்னார் நீதவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் நேற்றையதினம் எந்த வழக்குகளிலும் ஆஜராவில்லை.தமிழ்,முஸ்லிம் சட்டத்தரணிகள் அனைவரும் ஒட்டுமொத்தமாக நீதிமன்ற செயற்பாடுகளில் கலந்து கொள்ளாது பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர்.

நீதிமன்ற செயற்பாடுகள் வழமை போன்று இடம்பெற்ற போதும் வழக்கில் ஈடுபடுவோர் வருகை தந்த போதும் சட்டத்தரணிகள் ஆஜராகாமையால் அநேக வழக்குகள் தவணையிடப்பட்டன.(2-285)

## வாழ்வாதார உதவிகள் வழங்கிவைப்பு



(மன்னார்)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும் தேசிய ஒருமைப்பாடு அரச கருமமொழிகள் சமூக மேம்பாடு இந்துசமய விவகார அமைச்சருமான மனோ கணேசனின் நிதியொதுக்கீட்டின் கீழ் நானாட்டான் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் இருந்து பொருளாதர ரீதியில் தேவையுடையவர்களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நானாட்டான் பிரதேச செயலாளர் ஸ்ரீஸ்கந் தகுமார் தலைமையில் நேற்று நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பயனாளிகளுக்கு சுய தொழில் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு தேவையான தையல் இயந்திரம் மற்றும் சைக்கிள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வில் தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் இந்து விவகார அமைச்சினது மன்னார் மாவட்ட அமைப்பாளர் நாகரூபன் கலந்து கொண்டிருந்தார். (2-285)

# ஐ.நா விசாரணை மேற்கொள்ள வேண்டும்; அரசிற்கு கால அவகாசம் வழங்கக் கூடாது

## காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளினால் மகஜர் கையளிப்பு



(கிளிநொச்சி)

காணாமலாக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் போராட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக ஆரம்பமாகியது. குறித்த போராட்டம் வீதி மறியல் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது. இதன் போது ஏ9 பிரதான வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

தொடர்ந்து ஏ9 வீதியை முடக்கியவாறு காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சுமார் 6 கிலோ மீற்றர்கள் நடந்து இரணைமடு சந்தியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அலுவலகம் வரை நடந்து சென்றனர். இதன் போது ஏ-9 ஊடான போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஐ.நா. அலுவலகத்திற்கு முன்பாக திரண்ட மக்கள் காணாமல் போன தமது உறவுகள் தொடர்பில் ஐ.நா. விசாரணை மேற்கொள்ள வேண்டும் , மீண்டும் அரசுக்கு காலஅவகாசம் வழங்க கூடாது என தெரிவித்தும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தொடர்ந்து ஐ.நா. அலுவலகத்திற்கு சென்ற காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சார்பில் எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும், மதத் தலைவர்களும் ஐ.நா. செயலாளருக்கான மகஜரை ஐ.நா. அலுவலகத்தின் பிரதிநிதி ஒருவரிடம் கையளித்தனர்.

போராட்டத்தில் சர்வ மத தலைவர்கள், அரசியல்வாதிகள், யாழ் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஐ.நா.மனித வுரிமை உயர் ஆணையர் மிசேல் பசலேவிற்கு காணாமற்போனவர்களின் தமிழ் அன்னையர் வேண்டுகோள் அடங்கிய மகஜர் ஒன்றை கையளித்தனர்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

எதிர்வரும் 2019 மார்ச் மாதம் ஐ.நா. மனிதவுரிமைப் பேரவை அமர்வுக்கு முன்னதாக எங்கள் துயரத்தை உங்களுக்குக் கவனப்படுத்துவதற்காக இதனை எழுதுகிறோம்.

முதலாவதாக, இப் போதுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பன்னாட்டுத் தூதியல் சமுதாயத்துடன் நெருங்கிப் பேசும் வாய்ப்பைப் பெற்றுள்ள போதிலும் எங்களைப் போன்ற பாதிப்புற்ற தமிழர்களுக்காக வாய் திறந்து பேசுவதில்லை என்பதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறோம். எங்களுக்கு நீதி பெற்றுத் தருவதாக உறுதியளித்து அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் இப்போது அவர்கள் பன்னாட்டு நீதிக்கு முகங்கொடுக்க வேண்டிய தேவையிலிருந்து இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

போர் முடிவுற்ற பின்னர் எங்கள் குடும்பத்தினர் பலரை இலங்கை பாதுகாப்புப் படையினரிடம் கையளித்தோம். அவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராது என்று தரப்பட்ட வாக்குறுதிகளை நம்பியே அவர்களை ஒப்படைத்தோம். ஆனால் பத்தாண்டு கழிந்து விட்ட நிலையிலும் எங்களால் கையளிக்கப்பட்டவர்களைப் பற்றி அரசாங்கத்திட மிருந்து பதிலே இல்லை.

எங்கள் தாய்மார்கள் சிலர் மன அழுத்தாலும் வருத்தத்தாலும் மடிந்து போய் விட்டனர். அவர்களில் பலர் மாரடைப்பால் இறந்துள்ளனர்.

தமிழ்ப் பகுதிகளில் ஈராண்டுக் காலமாகத் தொடர்ந்து அறப் போராட்டங்களும் பட்டினிப் போரட்டங்களும் நடத்தி வருகிறோம்.

எங்கள் அன்புக்குரிய உறவுகளுக்கு என்ன நேரிட்டது என்று தெரியாத மன வலியோடுதான் தொடர்ந்து வாழ்கிறோம். உண்ணவோ உறங்கவோ முடியாமல், எதிலும் கவனஞ்செலுத்த முடியாமல் தவித்துக் கொண்டிருக்கி றோம்.

அவர்கள் உயி ரோடிருக்கிறார்களா? எங்கள் குழந்தைகள் என்ன ஆனார்கள்? , எங்கள் புதல்வியர் பாலி யல் வல்லுறவுக்கு ஆளாக்கப்பட்டனரா?, அவர்களைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கின்ற னரா? எங்கள் அன்புக்குரியவர்களைத் தேடிக் கொடுங்கள் என்று பன்னாட்டுச் சமுதாயத்திடம் கையேந்தி னோம்.

எங்கள் பணிவான வேண்டுகோள் இதுதான்:

இலங்கை விரிக்கும் "உண்மையும் மீளிணக்கமும்" போன்ற வலையில் விழுந்து விடாதீர்கள், இலங்கைக்கு எவ்விதக் கூடுதல் கால அவகாசமும் கொடுத்து விடாதீர்கள். கால நீட்டிப்புத் தருவது தமிழ்ப் பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ள இலங்கை பாதுகாப்புப் படைகள் தங்கள் உரிமைமீறல்களைத் தொடர்ந்து செய்யவும், முக்கியமான போர்க்குற்ற சான்றுகளை அழிப்பதற்கும் உதவுவதாகி விடும். மேலும், கூடுதல் கால அவகாசம் கொடுப்பது தமிழர்களுக்கு நிரந்தரமாக நீதியை மறுப்பதாகி விடும்.

இலங்கையை அனைத்துலகக் குற்றவியல் நீதிமன்றத்தின் அல்லது இலங்கைக்கென்றே அமை க்கப்படும் சிறப்புப் பன்னா ட்டுக் குற்றத் தீர்ப்பாயத்தின் பார்வைக்கு அனுப்புங்கள்.

போரினால் பாதிப்புற்றவர்களின் துயரம் குறித்தும், மனிதவுரிமை மனித நேயம் தொடர்பிலான மற்ற சிக்கல்கள் குறித்தும் கண்காணித்து ஆறு மாதத்துக்கொரு முறை மனிதவுரிமைப் பேரவைக்கு அறிக்கை அளிப்பதற்கென இலங்கைக்கென்றே சிறப்பு அறிக்கையாளரை அமர்த்துங்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

## வவுனியா நகரசபை மாதாந்த அமர்வு இன்று

(குருமன்காடு)

வவுனியா நகரசபையின் மாதாந்த அமர்வு நேற்றையதினம் தவிர்க்கமுடியபத காரணத்தினால் நடைபெறவிருந்த நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை இடம் பெறும் என சபையின் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்,

நேற்றையதினம் சபையின் மாதாந்த அமர்வு நடைபெறவிருந்தநிலையில், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் கிளிநொச்சியில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அவர்களது நியாயமான கோரிக்கைக்கு வ்வுனியா நகரசபை ஆதரவு வழங்கியிருந்த நிலையில் நடைபெறவிருந்த மாதாந்த அமர்வை இடைநிறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை குறித்த அமர்வை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது என அவர் தெரிவித்தார். (2-250)




## சிலாபத்துறையில் 6வது நாளாகவும் நிலமீட்புப் போராட்டம் தொடர்கின்றது



(மன்னார்)

மன்னார் சிலாபத்துறை பகுதியில் கடற்படையினரால் கையகப்படுத்தி வைக்கப்பட்டுள்ள பொது மக்களின் பூர்வீக காணியை விடுவிக்கக்கோரி கடந்த 20 ஆம் திகதி புதன்கிழமை தொடக்கம் சிலாபத்துறை மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் போராட்டமானது நேற்று திங்கட் கிழமையுடன் ஆறாவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

1990 ஆம் ஆண்டு இப்பகுதி மக்கள் புலம்பெயர்ந்த பின்னர், கடற்படையினர் குறித்த பகுதியிலிருந்த மக்களின் சுமார் 36 ஏக்கர் பூர்வீக காணியை ஆக்கிரமித்து அதில் முகாம் அமைத்து செயற்பட்டு வருகின்றனர்.

புலம்பெயர்ந்த மக்கள் அவ்விடத்தில் மீள்குடியேறி வருகின்றபோதும் இக்காணிகளுக்கு சொந்தமான பூர்வீக 218 குடும்பங்கள் மீள்குடியேற முடியாது வருவதால் அக் காணிகளை விடுவிக்கக் கோரியே தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின் றனர்.

இக் காணியை விடுவிக்கக்கோரி பல தரப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்கான ஒழுங்கான பதில் இதுவரை கிடைக்கப் பெறாமையாலே சிலாபத்துறை கடற்படை முகாமுக்கு முன்பாக தங்கள் காணியை விடுவிக்கக்கோரி தங்கள் தொடர் போராட்டத்தை நேற்று ஆறாவது நாட்களாக முன்னெடுத்துச் செல்கின்றனர்.

போராட்டத்துக்கு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் மன்னார் சமூக பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டு நிறுவனம் (மெசிடோ) ஆகிய அமைப்புக்கள் ஆதரவுகளை வழங்கி வருவதுடன் அரசியல் தலைவர்களும் மதப் பெரியார்களும் சென்று இவர்களின் போராட்டங்களுக்கு தங்கள் ஆதர[illegible]ளையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-285)

## இராணுவ அதிகாரி உயிரிழந்த இடத்தில் குடும்பத்தினர் மரக்கன்றுகள் நாட்டி அஞ்சலி செலுத்தினர்



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் காட்டுப் பகுதிக்குள் ஊடுருவிய சமயத்தில், விடுதலைப்புலிகளின் முறியடிப்பு அணிகளின் தாக்குதலில் உயிரிழந்த இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி தளபதியான லெப்.கேணல் லலித் ஜெயசிங்கவின் நினைவாக கடந்த 23 ஆம் திகதி முல்லைத்தீவில் மரக் கன்றுகள் நடப்பட்டன.

முல்லைத்தீவு ஒட்டு, சுட்டான் காட்டு பகுதியில் லலித் ஜெயசிங்க உயிரிழந்த இடத்தில்- அவரது மனைவி மகள், பெற்றோரால் மரக் கன்றுகள் நடப்பட்டன. அடர்ந்த காட்டுக்குள் ஜி.பி. எஸ் துணையுடன் சுமார் 2.7 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே அவர் கொல்லப்பட்ட இடத்தை இந்த குழு அடைந்தது.

மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் 4 ஆவது புலனாய்வு படையணி என்பவற்றின் வழிகாட்டலில் ஜெயசிங்கவின் அஞ்சலி நிகழ்வு நடந்தது.

படைத்தரப்பினர் அவர் உயிரிழந்த இடத்திற்கு வழிகாட்டிச் சென்றனர். சம்பவம் நடந்த இடம் ஆழ ஊடுரு வும படையணியினர் புலிகளின் பகுதிக்கு சென்று தங்கியிருக்கும் தரிப்பிடமாக இருந்ததால் அதன் புவியியல் அமைவிடம் ஜி.பி.எஸ் மூலம் சுலபமாக கண்டறியப்பட்டிருந்தது. அடர்ந்த காட்டுக்குள் ஜெயசிங்க உயிரிழந்த இடத்தில் மௌன அஞ்சலி செலுத்தி சில மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. (2-281)

போதைப்பொருள் தடுப்பு மாநாட்டில் பங்கேற்க

# பொலிஸ்மா அதிபர் பூஜித சிங்கப்பூருக்குப் பயணம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர சிங்கப்பூருக்கு சென்றுள்ளார்.

24ஆவது ஆசிய - பசுபிக் செயற்பாட்டு போதைப்பொருள் தடுப்பு மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் அங்கு சென்றுள்ளார்.

குறித்த மாநாடு இன்று 26 ஆம் திகதி முதல் எதிர்வரும்



3ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் 50இற்கும் மேற்பட்ட நாடுகள் கலந்து கொள்கின்றன.

இந் நிலையில், பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட குழுவினர் நேற்றுமுன்தினம் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றனர். (இ-7)

# இலங்கையில் தொடரும் குள்ள மனிதர்களின் அட்டகாசம்

பெண்களை இலக்கு வைப்பது ஏன்?

(அம்பாறை)

இலங்கையின் பல பகுதிகளில் அச்சுறுத்தலாக மாறியுள்ள குள்ள மனிதர்கள் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை, அநுராதபுரம், குளியாப்பிட்டியைத் தொடர்ந்து மஹவிலச்சிய பொலிஸ் பிரிவின் பல இடங்களில் இரண்டு மர்ம மனிதர்களின் நடமாட்டம் காணப்பட்டதாக பெண்கள் சிலர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந் நிலையில் நேற்று முன்தினம் தமது வீட்டிற்கு அருகில் இரண்டிற்கு குள்ள மனிதனை அவதானித்ததாக சியம்பலாகஸ்வெவ பெண்கள் தந்திரிமலை பொலிஸாருக்கு அழைப்பேற்படுத்தி தெரியப்படுத்தியுள்ளனர்.

உடனடியாக அந்தப் பகுதிக்கு பொலிஸார் சென்ற போதிலும் அவ்வாறான குள்ள மனிதர்களை அவதானிக்க முடியவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, அண்மையில் இந்த குள்ள மனிதர்களின் தாக்குதலால் இரண்டு பெண்கள் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் இதனைக் கண்டுபிடிக்கும் தீவிர முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# கொக்கெய்ன் பயன்படுத்தும் எம்.பிக்கள் தொடர்பான சாட்சிகள் என்னிடமும்

ஐ.தே.கவின் முன்னாள் அமைப்பாளர்

(கொழும்பு)

அமைச்சரவையில் மட்டுமல்ல பாராளுமன்றத்திலும் கொக்கெய்ன் போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் உள்ளதாகவும், இவர்களின் இரத்த பரிசோதனை அறிக்கையில் இல்லையென வந்தால், அவர்களுக்கு தொடர்பு இருக்கின்றது என்பதை நிரூபிக்க புகைப்படங்களுடன் ஆதாரங்களை முன்வைக்கத் தயாராகவுள்ளதாக நீர்கொழும்பு தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி முன்னாள் அமைப்பாளர் ரொய்ஸ் பிரணாந்து தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்க கூறியது அமைச்சரவையில் இருப்பதாக, நான் கூறுகின்றேன். பாராளுமன்றத்தில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கொச்சிக்கடை வீடுகளுக்கு வந்து போதை மாத்திரைகளை உட்கொண்டு விட்டு கூத்தாடும் அரசியல்வாதிகளின் காட்சிகள் தன்னிடம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவர்கள் தொடர்பிலான பெயரை வெளியிடுவதில் அவசரப்பட மாட்டேன். பொறுமையாக இருக்கின்றேன். நானும் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் அல்லவா எனவும் ரொய்ஸ் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மாலைதீவில் பேராதனை பல்கலைக்கழக கிளை

(கொழும்பு)

பேராதனை பல்கலைக்கழகத்தின் கிளையொன்று மாலைதீவில் நிறுவப்படும் என்றும் அதற்கான ஏற்பாடுகள் தொடர்பான ஆவணங்கள் பரிசீலனைக்காக சட்டமா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் அந்த பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் உபுல் பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

பட்டதாரி மாணவர்களுக்கான ஆராய்ச்சி கருத்தரங்கொன்றில் உரையாற்றிய உப வேந்தர் வெளிநாட்டு மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்திடமிருந்து பட்டங்களைப் பெறுவதற்கு வசதிபட படுத்திக் கொடுப்பதற்காகவே மாலைதீவில் கிளை அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

மேலும் பேராதனை பல்கலைக்கழகத்தில் அனுமதிபெற முடியாமல் போகும் இலங்கை மாணவர்களும் மாலைதீவு கிளையில் சேர்ந்து அதன் பட்டங்களைப் பெறமுடியும் என்று தெரிவித்தார்.

விவசாயப் பட்டதாரிகள் பட்டமளிப்புக்கு முன்னதாகவே தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுவிடுகிறார்கள். இது விவசாயக்கல்வியின் முக்கியத்துவத்தையும் அதன் எதிர்கால வாய்ப்புகளையும் வெளிக்காட்டுகிறது என்றும் பேராசிரியர் திஸாநாயக்க மேலும் தெரிவித்தார். (இ-7)

# டின்னர் போத்தல் வெடித்து பத்து வயதுச் சிறுவன் பலி





(புலஸ்திபுர)

பொலநறுவை - புலஸ்திபுர பிரதேசத்திலுள்ள வீடொன்றில் டின்னர் அடைக்கப்பட்டிருந்த போத்தல் ஒன்று வெடித்ததில் 10 வயதுச் சிறுவன் உயிரிழந்துள்ளார்.

இதன்போது காயமடைந்த 16 வயதுச் சிறுவன் ஒருவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த போத்தலை உடைக்க முற்பட்ட போதே நேற்று இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

## குறை'களை' பதிகம் 24

### வீதியின் புனரமைப்பு எப்போது?

பரந்து நீண்ட பிரதேசமாம் தென்மராட்சியில்
அல்லாரை வெள்ளாம் போக்கட்டி ஊரெல்லை வீதியை
எல்லோரும் பாருங்கள் எம்மூரின் அவலத்தை
குண்டுமுண்டு குழியுமுண்டு கூரான கற்களுமுண்டு

மண்ணும் கல்லுமே எங்கும் நிறைந்திருக்கும்
நடக்கவும் முடியாதீ வாகனங்கள் ஓடவுமியலாது
மாரியில் இடையிடையே வெள்ளமும் நிற்பதுண்டு
மாணவர்கள் வெள்ளத்தில் விழ்ந்தெழுந்தகதையுமுண்டு

அரச ஊழியர்களும் அடிசறுக்கிய நிகழ்வுமுண்டு
பிரதேச சபையினரிடம் பலர் சென்று கேட்டதற்கு
காசில்லையென்ற கதைசொல்லி கைவிரித்து விடுவார்கள்
தேர்தல் காலங்களில் தேன் சிந்தச் சொல்வார்கள்


எங்களுக்கு வாக்களித்தால் எல்லாம் நிறைவேறும்
என்று நாற்பது வருடமாய் சீர் திருத்தமேதுமில்லை
இப் பகுதி மக்கள் தினமும் கேட்கும் கேள்வியிது
இவ் வீதியின் புனரமைப்பு எப்போது நடைபெறும்

சி.காசிப்பிள்ளை
அல்லாரையூர்

அன்பு வாசகர்களே!
இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# இந்த ஆண்டில் சிறந்த பொருளாதார வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது

மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டில் சிறந்த பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

அரசியல் நெருக்கடிகளால் பொருளாதார வளர்ச்சி வேகம் மூன்று சதவீதம் வரை வீழ்ச்சி கண்டதாகவும் அவர் தெரிவித்தார். இலங்கையின் தற்போதைய பொருளாதார வளர்ச்சி தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடலில் மத்திய வங்கி ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் பணவீக்கத்தை நான்கு சதவீதத்திற்கும் 6 சதவீதத்திற்கும் இடைப்பட்ட மட்டத்தில் பேண முடிந்திருக்கின்றது. ரூபாவின் பெறுமதி ஸ்திரத்தன்மையில் இருப்பதாகவும் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி மேலும் தெரிவித்தார். (இ-7)

# டிபெண்டர்-மோ.சைக்கிள் விபத்து மகிந்தானந்தவின் மகன் கைது!





(பம்பலப்பிட்டி)

கொழும்பு-பம்பலப்பிட்டியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பொரள்ளை பொலிஸ் நிலைய போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரியை டிபெண்டர் ரக வாகனத்தில் மோதிவிட்டுத் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயின் மகன் ரனிஷ்க அளுத்கமகேயே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் டிபெண்டர் வாகனத்தின் சாரதி மற்றும் உரிமையாளர் ஆகியோரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# வானைப் பிளந்த கோஷம்- அரசே பதில் கூறு! சர்வ




















வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதியை பெற்றுத் தரக்கோரி கதறிய உறவுகளால் நேற்று கிளிநொச்சி நகர் கண்ணீரால் நனைந்துடன் சர்வதேசத்தி
னெடுக்கப்பட்ட இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமானது. அங்கிருந்து
பட்டவர்களின் உறவினர்களின் தொடர் போராட்டம் ஆரம்பித்து இரண்டு வருடங்களை முன்னிட்டும் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என்ற கோரிக்கையை முன்
பிரமுகர்கள்,சிவில் சமூக அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கங்கள், பொதுமக்கள் உட்பட ஆயிரக்கணக்

# வதேசமே நீதி வழங்கு! -கண்ணீரில் நனைந்த தேசம்



















சத்திடமும், அரசிடமும் நீதி கோரி அவர்கள் எழுப்பிய கோசங்களால் விண்ணதிர்ந்தது. வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன்
து பேரணியாக சென்று ஏ-9 வீதி 155 ஆம் கட்டையில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்தில் மகஜரும் கையளிக்கப்பட்டது. வலிந்து காணாமல் ஆக்கப்
முன்வைத்தும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்தில் வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத் தலைவர்கள், அரசியல்
னக்கானோர் கலந்து கொண்டனர்.

(9-271-281-312)

# மலையக மக்கள் முகத்தில் புன்னகையைக் காண இந்தியா விரும்புகின்றது

## அந்நாட்டுத் தூதுவர் தரண்ஜித் சிங் சந்து



(பொகவந்தலாவ)

கடன் அல்லாது முற்றிலும் மானிய உதவியுடன் வெளிநாடுகளில் இந்தியா மேற்கொண்டுள்ள செயற்றிட்டங்களில் மிகப் பெரிய அபிவிருத்தித் திட்டம் இலங்கையில் செய்யப்பட்டு வருகின்றது.

இந்தியா,இலங்கைக்கு உறவுகளைக் கொண்ட அண்டை நாடாகும். இந்தியா இலங்கையில் அமைக்கின்ற மொத்த வீடுகள் கிட்டதட்ட 63 ஆயிரம் ஆகும். இதற்கென 350 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் அல்லது 5000 கோடி இலங்கை ரூபாய் மானிய உதவியுடன் இவ் வீடுகள் கட்டப்படுகின்றன. இவற்றுள் 47 ஆயிரம் வீடுகள் கட்டியமைக்கப்பட்டுள்ளன என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் நிதியொதுக்கீட்டில் மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சின் மூலம் பொகவந்தலாவ பிரிட்வெல் தோட்டத்தில் நிர்மாணிக்கப்பட்ட 155 தனி வீடுகள் அடங்கிய "வீ.கே. வெள்ளையன் புரம்" புதிய கிராமம் கையளிக்கும் நிகழ்வும், பயனாளிகளுக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்வும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அழகிய மலைப்பிரதேசத்திற்கு மீண்டும் வருகை தந்து இந்த இனிய விழாவிலும் பங்கேற்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். 2017 ஆம் ஆண்டு மே மாதம் பாரத பிரதமர் மோடி நோர்வூட் மைதானத்திற்கு வந்தபோது அவருக்கு அளித்த வரவேற்பு இன்னும் எனது மனதில் பசுமையாக தங்கியிருக்கின்றது.

இந்த திட்டத்தின் செயற்பாட்டை திரும்பிப் பார்க்கின்ற பொழுது ஒரு சிறந்த பயணமாக இருக்கின்றது. சென்ற ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதன் முதலில் இந்திய வீட்டுத் திட்டத்தின் மூலம் டன்சினன் வீட்டுத்திட்டம் கையளிப்பு செய்யப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதமர் ரணிலும் பங்குபற்றினார். இந்தியப் பிரதமர் மோடியும் காணொலி மூலம் உரையாற்றினார். சென்ற மாதம் டயகம மேற்கு தோட்டத்தில் 150 வீடுகள் கையளிக்கப்பட்டன. நீங்கள் அனைவரும் தனி வீடுகள் ஊடாக காணிகளுக்கும் சொந்தக்காரர்களாகியுள்ளீர்கள்.

எல்பொட, லெஜர்வத்தை உள்ளிட்ட மேலும் பல தோட்டங்களில் இந்திய வீடுகள் கட்டப்பட்டு விரைவில் கையளிக்கப்படவுள்ளன. இன்று இந்திய வீட்டுத்திட்டம் அல்லாது மாதிரி கிராமங்கள் திட்டம் ஊடாக 1200 வீடுகள் தென் மாகாணத்திலும் கட்டப்படுகின்றன.

எமது இரு நாட்டிற்கும் இடையே உள்ள முக்கிய உறவுப் பாலமாக மலையக மக்களாகிய நீங்கள் இருக்கின்றீர்கள். எத்தகைய சோதனைகளிலும் மன தைரியத்துடன் நீங்கள் இருப்பதை நாங்கள் காண்கின்றோம்.

இன்று இலங்கை தேயிலை உலகப் புகழ் பெற்றதாக விளங்குகின்றது என்றால் அதற்கு உங்களுடைய பங்களிப்பே காரணமாகும். இலங்கை அரசாங்கம் உங்கள் விலை மதிக்க முடியாத பங்களிப்புக்கு அங்கீகாரத்தை அளிக்கின்றது. இதை நாம் திடமாக நம்புகின்றோம்.

நம்மிடையேயான தொடர்பு இன்று நேற்று நடந்தது அல்ல. நீங்கள் அறிவீர்கள் 1923 ஆம் ஆண்டு கொழும்பில் இந்திய தூதரகம் அமைப்பதற்கு முன்பே கண்டியில் இணை தூதரகம் அமைக்கப்பட்டது. இது உங்களின் முன்னோர்கள் பயன் பெறுவதற்காகவே செயற்படுத்தப்பட்டது.

1947ஆம் ஆண்டு சிவட் எனப்படுகின்ற தோட்ட தொழிலாளர்கள் கல்வி நிலையத்தையும், மலையக மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கவும் ஆரம்பிக்கப்பட்டது. நம்முடைய பந்தம் காலம் காலமாக வளர்ந்தே வந்துள்ளது.

டிக்கோயாவில் ஆதார வைத்தியசாலை உங்களுக்காக வழங்கியுள்ளோம். கண்டி மற்றும் பண்டாரவளையில் ஆங்கில கல்வி பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா எல்பொட, ஹற்றன் உள்ளிட்ட பகுதிகளில் தொழில் பயிற்சி கூடங்கள் தோட்ட பாடசாலைகளில் அறிவியல் ஆய்வுகூடங்கள், பெருந்தோட்ட குழந்தை காப்பகங்கள் ஆகியவையும் அமைக்கப்பட்டுள்ளன.

1990 இலவச அம்புலன்ஸ் மத்திய, ஊவா மற்றும் சப்ரகமுவ உள்ளிட்ட தோட்டப் பகுதிகளில் அண்மையில் விரிவுபடுத்தப்பட்டது. புஸ்ஸலாவ சரஸ்வதி மத்திய கல்லூரியில் புதிய கட்டடமும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் பல்கலைக்கழகங்களிலே உள்ள மிகப் பெரிய அரங்கம் மாத்தறையில் உள்ள ருகுணு பல்கலைக்கழகத்தில் கடந்த வருடம் இந்திய நிதி உதவியுடன் அமைக்கப்பட்டது.

உங்கள் ஒவ்வொரு வருடைய முகத்திலும் புன்னகையை காண வேண்டும் என இந்தியா விரும்புகின்றது. இதன் முயற்சியாகவே நாம் இலங்கை முழுவதும் பல்வேறு மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

70 வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் நலன் சார்ந்த இத்தகைய திட்டங்களை செய்து வருகின்றன. அதே வேளை 20 வீதத்திற்கும் மேற்பட்ட திட்டங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் மானிய முறையில் இந்திய மக்களால் உங்களுக்கு வழங்கப்படுகின்றது. இன்னும் ஒரு வாரத்தில் நீங்கள் எல்லோரும் புதிய வீடுகளிலேயே மகா சிவராத்திரி பண்டிகையை கொண்டாடுவீர்கள்.

இந்திய உயர்ஸ்தானிகராக ஒவ்வொரு முறையும் உங்களை சந்திக்கும் போது மிகவும் மனம் நெகிழ்கின்றேன்.

நானும் உங்களைப் போல மலைப் பகுதியில் பிறந்தவன் என்பதால் அதைப் பிரத்தியேகமாக உணர்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மதுபானப் போத்தல் ஒன்றை வாங்கவே எம்.பி.க்களிடம் பணம் இல்லை- துஷார



(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொக்கெய்ன் பயன்படுத்தும் அளவுக்கு பணம் இல்லையெனவும், வாகனத்துக்கு டீசல் அடிப்பதற்கே எம்.பி.க்களிடம் பணம் இல்லாது கஷ்டப்படுகின்றார்கள் எனவும் ஐ.தே. கவின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்தார்.

எமக்கு கமிஷன் எடுப்பதற்காவது இந்த அரசாங்கம் விட்டுவிடுவதில்லை. இவ்வாறிருக்கும் நிலையில் மது பான போத்தல் ஒன்றை கொள்வனவு செய்வதற்கே எம்மிடம் பணம் இல்லாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலநறுவையில் நேற்று முன்தினம் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கணவர்கள் கவனிக்க!

ஒரு நண்பர் அவசர அவசரமாக ஓடிவந்தார்.

என்ன சேர் ஆகிவிட்டது என்று விசாரித்தேன்.

எல்லாம் இந்த இன்று ஒரு தகவலாலே வந்த அவஸ்தை என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை!

அவரே கொஞ்ச நேரத்திலே தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு சொல்ல ஆரம்பித்தார்.

'சேர்! எங்க வீட்டிலே சண்டைக்கு வருவார்கள் சேர்! அது என்ன.. எப்ப பார்த்தாலும் எங்களையே குறைத்து பேசுகின்றீர்கள் 'என்றார்.

' அப்படி என்ன சேர் குறைத்து பேசிவிட்டோம் ' என்றேன்.

'அது இல்லை சேர்! கணவன்மார்கள் மனைவிமார்களிடம் பயந்து நடக்கிறது மாதிரி சொல்கிறீர்களே! அப்படி என்ன நாங்கள் உங்களை மிரட்டிக் கொண்டா இருக்கின்றோம்! பயந்து கொண்டு தானே நடந்து கொள்கின்றோம் என்கிறார்கள்! '

" இப்பொழுது என்ன சேர் செய்வது என்றேன் "

"சமயம் கிடைக்கின்றபொழுதெல்லாம் கணவன் மார்களைப் பற்றியும் கொஞ்சம் கிண்டலாக ஏதாவது சொல்லி வைங்க சேர். "அப்பொழுது தான் அவர்களுக்கு திருப்தியாக இருக்கும். எங்களுக்கும் தைரியமாக இருக்கும் என்றார்.

பொதுவாக எங்கள் ஊரிலே எல்லாம் கணவன்-மனைவிக்குள்ளே சண்டை வருவதும் சகஜம்.. அது சரியா போய்விடுவதும் சகஜம்..

சில சமயம் குடும்பத் தகராறு நீதிமன்றம் வரைக்கும் போய்விடுவதும் உண்டு!

எங்கள் ஊர்ப் பெண்கள் அமைதியை விரும்புகின்றவர்கள்.. சமாதானத்தை விரும்புகின்றவர்கள்.. அதனாலே தான் அவர்களைப் பற்றி கிண்டலுக்காக கொஞ்சம் குறைத்து சொன்னால் கூட நாங்கள் " என்ன அவ்வளவு மோசமாவா நடந்து கொள்கின்றோம் "என்று கேட்க ஆரம்பித்துவிடுவார்கள்!

ஆனால் ஜப்பானில் இருக்கின்ற பெண்கள் இதற்கு நேர்விரோதம்! அவர்களுக்கு இருக்கின்ற பெரிய குறை என்ன தெரியுமா?

'எங்களுடைய வீட்டுக்காரர் அடிக்கடி எங்ககிட்ட சண்டையே போடமாட்டேன் என்கின்றார். அதை நினைத்தால் எங்களுக்கு வருத்தமாயிருக்கின்றது! "அப்படி என்று புலம்புறார்களாம்.

கொஞ்ச நாளைக்கு முன்னாடி ஜப்பானில் ஒரு இன்சூரன்ஸ் கம்பனி ஒரு ஆய்வு நடத்தியது!

கல்யாணமான பெண்கள் 3800 பேரை சந்தித்து அவர்களிடம் கேள்வியெல்லாம் கேட்டார்கள்..

அதிலேயிருந்த அவர்கள் எல்லாம் என்ன நினைக்கிறார்கள் என்று தெரிய வந்தது!

இதிலே 30 சதவீத பெண்கள் சொன்ன ஒரு விடயம் என்ன தெரியுமா?

மாதத்திலே எப்பவாவது ஒரு நாள்தான் நாங்கள் எங்கள். கணவனோட சண்டை போட முடியுது அப்படி என்று மிகவும் ஏக்கத்தோடு சொன்னார்களாம்.

இருபது சதவீதம் பேர் மட்டும் வாரத்திலே ஒரு நாளாவது கணவனோடு சண்டை போடுவார்களாம்..

சரி அது எல்லாம் இருக்கட்டும்.

சம்சாரத்திடம் பாராட்டு பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்ற கணவன்மார்களுக்கு சில அனுபவ பூர்வமான ஆலோசனைகள்,

முதலிலே மனைவியை கௌரவமாக நடத்துங்கள்..

இராத்திரியிலே எங்கே போகின்றீர்கள்.. எப்ப வருவீர்கள்.. அதையெல்லாம் தெளிவாக சொல்லிவிட்டு வெளியிலே புறப்படுங்கள்!

ஆடம்பரச் செலவையெல்லாம் குறைத்துக் கொள்ளுங்கள்... சம்பாதிக்கின்றதுக்கு நீங்களா மட்டும் இருந்தால்... அவர்களுக்கும் கொஞ்சம் பாக்கெட் மணி கொடுங்க.உங்கள் பிரச்சினை எதுவாக இருந்தாலும் சரி... அவர்களிடம் அதைப் பற்றி பேசுங்கள்..

அவர்கள் பிரச்சினையை உங்களிடம் சொன்னால் அதை மனதார கேளுங்கள்.. அதையெல்லாம் என்கிட்ட சொல்லாதே என்று விட்டு வெளியிலே புறப்பட்டு போகாதீர்கள்!குழந்தைகள் சம்பந்தமா எல்லாம் அவங்க பார்த்துக் கொள்ளுவார்கள் என்று நினைக்காதீர்கள்...

குழந்தைகள் பற்றிய சிந்தனை உங்களுக்கு மிகவும் அவசியம்...

குழந்தை தான் கவலையில்லாமல் திரிகிறது.. அதற்காக நீங்களும் அதே மாதிரி திரிந்தால் எப்படி? வருங்காலத்திற்கு கொஞ்சம் பணம் சேர்த்து வைக்க வேண்டும் அப்படி என்கிற நினைப்பு உங்களுக்கு வேண்டும்.

ஒருத்தரை ஒருத்தர் பிரிந்து ஊருக்கு போற பொழுதும் சரி அல்லது திரும்பி வந்து சந்திக்கிற பொழுதும் சரி.. அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

" ஏன் அதற்குள் திரும்பி வந்துவிட்டாய் இன்னும் 10 நாட்கள் இருந்துவிட்டு வரக்கூடாதா? "என்று கேட்கக் கூடாது!

இப்பொழுது நான் சொன்னதையெல்லாம் கொஞ்ச நாள் கடைப்பிடித்துப் பாருங்கள்.. அப்புறம் வீட்டிலே உங்களுக்கு பாராட்டு வந்து குவியும்! உங்களுக்கே ஆச்சரியமாக இருக்கும்.

முக்கியமாக அவர்கள் என்ன சொன்னாலும் சரி.. நீங்கள் கொஞ்சம் புத்தி சாலித்தனமாக பதில் சொல்ல வேண்டும்.

விபரம் தெரியாத கணவனுக்கும் விபரம் தெரிந்த கணவனுக்கும் என்ன வித்தியாசம் என்று ஒரு பெரியவர் சொல்லியிருக்கின்றார்.விபரம் தெரியாதவன் வாயைமூடு ! என்று மனைவியை திட்டுவானாம்! விபரம் தெரிந்தவன் நீ அமைதியா இருக்கிறபொழுது எவ்வளவு அழகாக இருக்கின்றாய் தெரியுமா? அப்படி என்பானாம்!

நீங்களும் இப்படி இருந்து பாருங்கள். அப்படியும் உங்களுக்கு நல்ல பெயர் கிடைக்கவில்லை என்றால் சொல்லுங்கள்... நானும் உங்க கட்சியிலே சேர்ந்து கொள்கின்றேன்.

# இராகு-கேது பெயர்ச்சி - 2019

## 13.02.2019 – 31.08.2020

## ஐந்தில் வரும் இராகு அள்ளிக் கொடுக்கும்

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

கடந்த 1 1/2 ஆண்டு காலமாக உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகுவும் 12 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேதுவும், பெப்ரவரி 13 ஆம் திகதி பெயர்ச்சியாகிறார்கள். இந்தப் பெயர்ச்சியால் நீங்கள் அனுபவித்து வந்த வேதனை அகன்று, வெற்றிப் படிக்கட்டில் ஏறப் போகிறீர்கள். பொருளாதாரத்தில் உச்சத்தை அடைவீர்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் இராகு பகவான், புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்திலும், பிறகு திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும், மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்திலுமாக இனி வரும் 1 1/2 ஆண்டுகள் சஞ்சாரம் செய்வார். அதே போல கேது பகவான், உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்திலும் பூராடம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்திலும் மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்திலும் சஞ்சரிக்கப் போகிறார்.

இந்த நட்சத்திரப் பாதசார அடிப்படையிலும் குருப்பெயர்ச்சி மற்றும் குருவின் அதிசார காலம், சனியின் வக்கிர இயக்க காலத்திற்கு ஏற்பவும், சுய ஜாதகத்தின் தசாபுத்திப் படியும் உங்களுக்கு உரிய பலன்கள் நடைபெறும்.

### இலாபம் தரும் ஐந்தாமிடத்து இராகு!
### உறவு பலம் தரும் இலாப ஸ்தான கேது!

இதுவரை உங்கள் இராசிக்கு 6 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த இராகு பகவான், இப்பொழுது பஞ்சம ஸ்தானத்திற்கு வந்து, நெஞ்சம் மகிழும் சம்பவங்களை நடத்தி தரப் போகிறார். பிள்ளைகள் வழியில் சுப விரயங்கள் உருவாகும். இல்லத்தில் பல சுப காரியங்கள் நடைபெற முயற்சி எடுப்பீர்கள். வாசல் தேடி வந்த வரன்கள் முடிவாகும். கோவில் கோவிலாக வழிபட்டதற்கு, அதற்கான பலன்களை இப்போது இராகு அள்ளித் தரப் போகிறார். பூர்வ புண்ணியத்தின் வலிமையால் தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். திடீரென வரும் மாற்றங்கள், நல்ல மாற்றமாக அமையும். வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை சந்தித்து முக்கிய முடிவெடுப்பீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். வெளிநாட்டு வாய்ப்புகள் எதிர்பார்த்தது போல அமையும். அதே நேரத்தில் 5 ஆம் இடத்தில் இராகுவோ, கேதுவோ சஞ்சரித்தால் அதை 'சர்ப்ப தோஷம்' என்பார்கள். எனவே தோஷம் அகன்று, தொடர்ந்து நன்மை கிடைக்க நாகசாந்தி பரிகாரங்களைச் செய்யுங்கள்.

இதுநாள் வரை விரய ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த கேது, இப்பொழுது இலாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். எனவே பூமியால், பொருளால், புத்திரர்களால் என பல வழியிலும் இலாபம் வந்து கொண்டே இருக்கும். வாழ்க்கைத் துணைக்கு கூட படித்த படிப்பிற்கேற்ற வேலை கிடைத்து வருமானம் வந்து சேரும். அதே வேளையில் லாப ஸ்தானத்திற்கு வரும் கேது, அங்கு குரு வீட்டில் சஞ்சரிப்பதால் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. இந்த காலத்தில் ஆன்மீகம் சம்பந்தமான ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளைகளின் படிப்பு சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும்.

உங்களை விட்டுப் பிரிந்து சென்ற பிள்ளைகள் மீண்டும் வந்திணைவர். வீடு வாங்கும் யோகம், புதிய வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

இதற்கிடையில் 13.3.2019 முதல் 17.5.2019 வரை, விருச்சிக இராசியில் இருக்கும் குரு, தனுசு இராசிக்கு அதிசார கதியில் வருகிறார். இது உங்களுக்கு ஒரு பொற்காலமாகும். பல நன்மைகள் வந்து சேரும் காலம் இது. புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். தகராறு செய்தவர்கள் தானாக விலகுவர். பகல், இரவாகப் பாடுபட்டதற்கு ஏற்ற பலன் கிடைக்கும்.

### குரு சாரத்தில் இராகு சஞ்சாரம்
### (13.2.2019 முதல் 19.8.2019 வரை)

புனர்பூசம் நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் போது, மிகுந்த நற்பலன்கள் வந்து சேரும். குடும்ப முன்னேற்றம் கூடும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். முக்கியப் புள்ளிகளால் உதவி கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். அலுவலகப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். உலா வரும் கிரகத்தால் உள்ளத்தில் மகிழ்ச்சி கூடும் நேரம் இது.

### சுய சாரத்தில் இராகு சஞ்சாரம்
### (20.8.2019 முதல் 29.4.2020 வரை)

திருவாதிரை நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் குழப்பங்கள் ஏற்படும். ஒருவர் மாற்றி ஒருவர் உங்கள் மீது குறை சொல்வர். புதிய இடத்திற்கு மாறுதல் கிடைத்தும் போக முடியாத சூழ்நிலை உருவாகும். பிள்ளைகளின் திருமணம் கைகூடுவது போல் வந்து தட்டிப் போகும். வேலை வாய்ப்பு தாமதமாகும். பஞ்சாயத்துக்கள் பலனின்றி போகலாம். வீடு மாற்றும் எண்ணம் அதிகரிக்கும். புது முயற்சிகள் செய்கின்ற பொழுது, குடும்ப உறுப்பினர்களை ஆலோசித்துச் செய்வது நல்லது.

### செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சாரம்
### (28.4.2020 முதல் 31.08.2020 வரை)

மிருகசீரிடம் நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் இராகு சஞ்சரிக்கும் பொழுது, உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாக செய்து முடிப்பீர்கள். படித்து முடித்தவர்களுக்கு வேலை கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் போது நண்பர்கள் கூட்டு சேர்வர். உணவில் கட்டுப்பாடு அவசியம்.

### சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம்
### (13.2.2019 முதல் 16.04.2019 வரை).

உத்தராடம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, திருமண முயற்சிகளில் இருந்த தடை அகலும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். அரசியல்வாதிகளால் அனுகூலம் உண்டு. பக்கத்து வீட்டாரின் பகை மாறும். பாசமிக்க உறவினர்கள் நேசக்கரம் நீட்டுவர். ஒரு சிலருக்கு நல்ல வேலை கிடைக்கும். நிலுவையில் இருந்த தொகை வந்து சேரும்.

### சுக்கிர சாரத்தில் கேது சஞ்சாரம்
### (17.4.2019 முதல் 23.12.2019 வரை)

பூராடம் நட்சத்திரக் காலில் சுக்ர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, பயணங்களால் பலன் கிடைக்கும். நண்பர்கள் பக்கபலமாக இருந்து உதவுவர். பணப்புழக்கம் அதிகரிக்கும். சுக்கிரன் உங்கள் இராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதி என்பதால் பெற்றோரின் பிரியம் கூடும். வீடு வாங்க வேண்டும் என்ற விருப்பம் நிறைவேறலாம். சொத்துக்கள் வாங்கும் யோகமும் சொந்தங்களின் ஆதரவும் கிடைக்கும் நேரம் இது.

### சுய சாரத்தில் கேது சஞ்சாரம்
### (24.12.2019 முதல் 31.08.2020 வரை)

மூலம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, செல்வாக்கு அதிகரிக்கும். செல்வநிலை உயரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். நீதிமன்ற தீர்ப்புகள் சாதகமாக வரும். மாமன், மைத்துனர் வழியில் இருந்த விரிசல்கள் அகலும். நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த அரசு வழி வேலை இப்பொழுது கிடைக்கும். வாங்கிய பூமியை கொடுத்துவிட்டோமே என்று ஏங்கியவர்களுக்கு, இப்பொழுது புதியதாக இடம் வாங்கும் யோகம் உண்டு. உங்களின் நிர்வாகத் திறமை




பளிச்சிடும். வெளிநாடு சென்று படிக்க வேண்டுமென்று நினைத்தவர்களுக்கு, அந்த ஆசை நிறைவேறும்.

அரசியல் பிரமுகர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும் நேரமிது.

### வழிபாடு!

5 ஆம் இடத்து இராகு அதிர்ஷ்ட வாய்ப்புகளை அள்ளிக் கொடுக்கவும், 11 ஆம் இடத்து கேது பணவரவைப் பெருக்கிக் கொடுக்கவும், விஸ்வரூப ஆஞ்சநேயரை சனிக்கிழமை தோறும் வழிபட்டு வாருங்கள். பௌர்ணமி அன்று மலைவலம் வருவதன் மூலமும், நந்தியம் பெருமானை வழிபடுவதன் மூலமும் வரும் துயரங்கள் விலகிப் போகும்.



### கவனம் தேவைப்படும் காலம்

இராகு- கேது பெயர்ச்சி நிகழ இருக்கிறது. அதன்படி தனுசு இராசிக்கு கேது பெயர்ச்சியாகிறார். அங்கு ஏற்கனவே இருக்கும் சனியோடு இணைந்து சஞ்சாரம் செய்ய உள்ளார். அப்படி சஞ்சாரம் செய்யும் வேளையில் 8.5.2019 முதல் 3.9.2019 வரையான காலகட்டத்தில் சனி வக்கிரம் அடைகிறார். இந்த நேரத்தில் கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது. குடும்ப உறுப்பினர்கள் உங்கள் மீது குறை சுமத்துவர். பணி புரியும் இடத்தில் அதிகாரியின் நிர்பந்தத்தின் பேரில் செயல்களைச் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

பயணங்களால் அலைச்சல் அதிகரிக்கும். பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நடைபெறாமலேயே போகலாம். எந்த ஒரு வேலையையும் ஒருமுறைக்கு இருமுறை செய்யும் சூழ்நிலையும் அதனால் விரயங்களும் ஏற்படும்.

இக்காலத்தில் குலதெய்வ வழிபாடும், சுய ஜாதகப்படி தசாபுத்திக்கேற்ற தெய்வ வழிபாடுகளையும் மேற்கொள்ளுங்கள்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்த இராகு-கேது பெயர்ச்சியின் விளைவாக குடும்பத்தில் மகிழ்ச்சி யும், சுபிட்சமும் ஏற்படும். உற்றார், உறவினர்களின் ஆதரவு கிடைக்கும்.

கணவன்- மனைவிக்குள் கனிவும் பாசமும் கூடும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலம் பிணக்குகளில் இருந்து விடுபடலாம்.


பிள்ளைகளின் கல்வித் தகுதி உயரும். அவர்களின் கல்யாண வாய்ப்புகளை காலாகாலத்தில் செய்து முடிக்க ஏற்பாடு செய்வீர்கள்.

பெற்றோர் வழியில் பிரியமும் ஆதரவும் கிடைக்கும். உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தைக் கண்டு ஆச்சரியப்படுவர்.

கற்ற கல்வியை விட பெற்ற அனுபவத்தின் மூலமே உங்களுக்கு பெருமை கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டு சுயதொழில் செய்ய முன்வருவர்.


புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வியாழக்கிழமை தட்சிணாமூர்த்தி வழிபாட்டையும்இராகு-கேது பரிகாரங்களையும் செய்து கொள்ளுங்கள். (தொடரும்)

# யாழிலும் நேற்று பூரண ஹர்த்தால்





யாழ்ப்பாணம்









சாவகச்சேரி







நெல்லியடி



(படங்கள்:-9, 10, 30, 60, 89, 102, 105, 106,111 செய்தியாளர்கள்)



யாழ்.பல்கலைக்கழகம்



கைதடி





கொடிகாமம்





பருத்தித்துறை



நெடுந்தீவு



மந்திகை



வேலணை



இனுவில்



சுன்னாகம்



தெல்லிப்பழை




மல்லாகம்

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

180



“ கால்ட் வெல்லின் (1814-1891) The comparative Grammer of Dramma (1856 திருத்தப்பட்ட 1875 மறுபதிவு) இந்தோ ஆரியன் மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையிலான ஒப்பீட்டில் திராவிட மொழிகளின் முக்கியத்துவம் பற்றிய கருத்தில் பெருமளவு பங்காற்றியுள்ளது. தமிழ்மொழிக்கு மகத்தான வரலாறு உண்டெனும் கருத்தில் கால்ட்வெல் மட்டும் தனி யொருவராக இருக்கவில்லை ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

இதனால் ஒரு புதிய சகாப்தம் உருவாயிற்று. இந்த அறிஞர்கள் தமிழ்க் கலாசாரத்தின் பிரதான நீரோட்டத்தின் அங்கமாகத் தம்மைக் கருதியதுடன் எவ்வளவுக்கு அக் கலாசாரத்திலிருந்து பெற்றுக் கொண்டனரோ அதேயளவுக்கு கொடுப்பவர்களாகவும் செயற்பட்டனர்.

இச் சந்தர்ப்பத்தில் தமிழ் ஆய்வுகளுக்கும் கலாசாரத்திற்கும் கிறிஸ்தவ மிஷனரிமார் ஆற்றிய பங்கைத் தெளிவுபடுத்துவது அவசியமாகும். கலாசார விழிப்புணர்வு இந்து இயக்கமாக ஆரம்பித்திருந்தும் பிரதானமாக சைவ அறிஞர்களினால் வழிநடத்தப்பட்டிருந்தும் அதன் லட்சணம் 19 ஆம் நூற்றாண்டில் மாற்றத்திற்கு உள்ளாகியிருந்தது.

கால்ட்வெல் (Caldwell), பேசிவல் (Percival), பவர் (Bower), போப் (Pope), எலிஸ் (Ellis) போன்ற கிறிஸ்தவ அறிஞருக்கு வழங்கப்பட்ட மதிப்பும் இந்த அறிஞர்களின் பிரயாசைகளும் அவர்களைப் பிரதான நீரோட்டத்தினுள் இணைத்திருந்தன.

பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலுமிருந்த உள்ளூர் கிறிஸ்தவ அறிஞர்கள் உதாரணமாக எல்.டி. சுவாமிக்கண்ணுபிள்ளை, ஞானப்பிரகாச அடிகளார், ரி.ஐஸக் தம்பையா போன்றோர் தமிழ் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றினர்.

குறிப்பாக கால்ட் வெல்லின் *(1814-1891)* The comparative Grammer of Dramma *(1856 திருத்தப்பட்ட 1875 மறுபதிவு)* இந்தோ ஆரியன் மொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் இடையிலான ஒப்பீட்டில் திராவிட மொழிகளின் முக்கியத்துவம் பற்றிய கருத்தில் பெருமளவு பங்காற்றியுள்ளது.

தமிழ்மொழிக்கு மகத்தான வரலாறு உண்டெனும் கருத்தில் கால்ட்வெல் மட்டும் தனியொருவராக இருக்கவில்லை. திராவிட மேன்மையை முன்வைத்த வேறு ஐரோப்பிய மிஷனரிமாரும் இருக்கவே செய்தனர். ஆனாலும் கால்ட் வெல்லின் ஒப்பியல் இலக்கணம் (Comparative Grammar) அதற்கு சிகரம் வைத்தது போல் விளங்கியது.

தமிழரின் மொழி சம்பந்தமான நவீன உணர்வின் ஊற்று இக் காலகட்டத்திற்கு உரியதாகும். மேற்குறிப்பிட்ட இந்த முன்னேற்றங்களும், பார்வைகளும் இலங்கையிலும் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழ்மொழி ,தமிழ்க் கலாசாரம் என்பன பற்றியதோர் ஆழமான அக்கறை பல்வேறு வகையில் வெளித்தோன்ற ஆரம்பித்திருந்தது.

இவற்றைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமாகப் பல சங்கங்களும் சபைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் தோன்றியமையும் இந் நிகழ்வுகளில் ஒன்றாகும்.

இந்த இலக்கிய விருத்தி காலத்தில் இருந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் தமிழ் மொழியையும் கலாசாரத்தையும் முன்னேற்றுவதில் மிக முக்கியமான பணியாற்றின.

இலங்கையிலும் தமிழ் நாட்டிலுமுள்ள தமிழர் மத்தியில், இத் தகவல்களைப் பரப்புவதில் இந்தச் சக்திகள் பிரதான பாத்திரத்தை வகித்தன. 1897 இல் முதலில் வெளியிடப்பட்ட சித்தா ந்த தீபிகை (The tamilian Antiquary) 1907 ஆகிய சஞ்சிகைகள், தமிழ்மொழி கலாசாரம் என்பவற்றின் மீது மக்கள் மத்தியில் வளர்ந்து வந்த ஈடுபாட்டைக் காட்டுகின்றன. இவ்விரண்டு சஞ்சிகைகளிலுமே இலங்கைத் தமிழ் அறிஞர்கள் முனைப்புடன் ஈடுபட்டிருந்தனர்.

பத்திரிகைகள் வெளியிடுவதில் இலங்கைத் தமிழர் மத்தியிலும் தீவிரமான ஆர்வம் காணப்பட்டது. இவ்வ்கையில் நிறுவப்பட்ட அதிமுக்கிய சைவத் தமிழ் பத்திரிகைகள் இலங்கை நேசன் (1877), சைவ உதய பானு (1880), இந்து ஒகன் (1889) இதன் தமிழ்ப் பதிப்பான இந்து சாதனம் என்பனவாகும்.

இலங்கையில் சைவத் தமிழ்க் கலாசாரத்தை மேம்படுத்துவதில் இவை முக்கிய பங்கை வகித்தன. சித்தாந்த தீபிகையின் பத்திராதிபரான ஜே.எம். நல்லசுவாமி, நாவலரினதும் (The Tamil Antiquary) யின் பத்திராதிபராயிருந்த டி. சவரிராஜப் பிள்ளை என்ற கிறிஸ்தவரினதும் தீவிர நேசராகவிருந்தார் என்பது குறிப்பிடக் கூடியதாகும்.

இவ்விரு அறிஞர்களுமே தமிழ் ஆய்வுகளை மேம்படுத்துவதில் ஆர்வம் மிகுந்தவராக இருந்தனர். கிறிஸ்தவ மிஷனரிமாரினதும், சாதாரண கிறிஸ்தவர்களினதும் தமிழ் ஆய்வுகளின் பாலான ஈடுபாடு இதுவரை மதத்தில் செலுத்தப்பட்ட அவர்களது கவனம் இப்போது மொழியிலும்,இலக்கியத்திலும் செலுத்தப்பட்டது என்பதைக் காட்டுகின்றது.

சைவசமயத்திற்கு இதுவரை வழங்கப்பட்டிருந்த முக்கியத்துவம் முன்பிருந்ததைவிடக் குறைந்தது. சைவத்தமிழ் இலக்கிய மலர்ச்சியுடன் நாம் கருத்திற் கொள்ள வேண்டிய வேறு வகையான வெளியீடுகளும் இருக்கவே செய்தன.

இவற்றில் முதன்மையானவை இலங்கைத் தமிழரின் வரலாறு பற்றியவையாகும். கல்வி பெற்ற தமிழர் தமது கடந்த காலத்தை அறிவதற்கும் குடியேற்ற ஆட்சியிலான தமது சமகால நிலைமையை முன்னரை விடச் சிறப்பாக விளங்கிக் கொள்ளவும் இவை உதவின.

1845 இல் மோணிங் ஸ்ரார் வரலாற்று எழுத்தாக்கங்களையிட்டுக் கருத்துத் தெரிவிக்கையில் வரலாற்று ரீதியான எழுத்தாக்கப் பாரம்பரியம் தமிழர், சிங்களவர் மத்தியிலெழுந்த தேசியவுணர்வுக்கு ஓரளவு ஆழமான அறிவைத் தந்திருக்கும் எனக் குறிப்பிட்டிருந்தது.

(தொடரும்)

ஐ.தே.க. எம்.பி காவிந்தவுக்கு

# எதிர்ப்பு தெரிவித்து துண்டுப் பிரசுரங்கள்



ஐக்கிய தேசியக் கட்சியின் நீர்கொழும்பு புதிய தொகுதி அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன நேற்று முன்தினம் தனது கட்சிக் காரியாலயத்தில் பணியை ஆரம்பித்துள்ளார்.

இந்நிலையில் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து முன்னாள் தொகுதியமைப்பாளர் ரோயிஸ் பெர்னாண்டோ துண்டுப் பிரசுரங்களை விநியோகித்துள்ளார்.

நேற்று முன்தினம் நீர்கொழும்பு தொகுதியமைப்பாளர் காரியாலயத்தை காவிந்த ஜெயவர்த்தன திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அலுக்கோசு பதவிக்கு வெளிநாட்டுப் பிரஜையை நியமிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)


அலுக்கோசு பதவிக்கு வெளிநாட்டுப் பிரஜையொருவரை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

மரணதண்டனையை நிறைவேற்றும் அலுக்கோசு பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், நேற்றுடன் அதற்கான காலக்கெடுமுடிவடைந்துள்ளது.

எனினும், இதுவரையில் கிடைத்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை தொடர்பாக சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார். அதற்கமைய, வெளிநாட்டவரை அலுக்கோசு பதவிக்கு நியமிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இறுதியாக 1976 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலை யில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மக்களின் பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கான சதியே ரஞ்சனின் கருத்து- வாசுதேவ



(கொழும்பு)

கொக்கெய்ன் பயன்படுத்தும் அமைச்சர்கள் தொடர்பிலான செய்தி மக்களை அரசாங்கத்தின் செயற்பாடுகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்பும் ஒரு சதி நடவடிக்கையேயாகும் என மகிந்த அணி பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தச் செய்தி உண்மையா? பொய்யா? என்பதை விடவும் இதனைப் பரப்புவதற்கான நோக்கம் இதுவாகும் என ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் வாசுதேவ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இறக்குமதி செய்யப்படும் பால்மா தொடர்பிலான செய்தி, போதைப்பொருள் கடத்தல்காரர் மாகந்துரே மதூஷ் குறித்த செய்திகள் என்பவற்றின் பரபரப்பு குறைந்து இப்போது அமைச்சர்களின் கொக்கெய்ன் செய்தி இடம்பிடித்துள்ளது.

தேர்தல் வருகின்றது. இதனைத் தேர்தல் வருடம் என்று ஜனாதிபதி வர்ணித்துள்ளார். கடந்த தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா? மக்களுக்கு அரசாங்கத்தினூடாக நிறைவேற்ற வேண்டிய கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா? புதிய அரசியல் யாப்பு மாற்றம் போன்ற அம்சங்கள் என்பன பற்றிய பேச்சு ஊடகங்களில் குறைந்துள்ளது. ஊடகங்களில் வராதுவிடின் மக்களிடமும் அது அழிந்து மறைந்து போகும் என்பதே யதார்த்தமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 45000 ஆண்டுகளுக்கு முன் அதிநவீன தொழில்நுட்பம்!

## இலங்கையில் பிரமிக்கவைக்கும் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

45000 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக் காடுகளில் வாழ்ந்த ஹோமோ சேப்பியன்கள் எனப்படும் ஆதி மனிதர்கள் தொடர்பான பிரமிக்க வைக்கும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சேப்பியன்கள் உயர் தொழில்நுட்பங்கள் மற்றும் அதிக அறிவுடன் வாழ்ந்தார்கள் என ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

அவுஸ்திரேலியாவின் Griffith பல்கலைக்கழக மாணவர்களும் கொழும்பு ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்து மேற்கொண்ட ஆய்வில் இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக இந்த ஆய்வில் ஒக்ஸ்போட் மற்றும் குயின்ஸ்லாந்து மாணவர்களும் இணைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சேப்பியன்கள் குரங்குகளை வேட்டையாடி உணவாக உட்கொண்டமைக்கான ஆதாரங்களும் இந்த ஆய்வில் கிடைத்துள்ளது.

இலங்கையில் ஆதி மனிதர்கள் வாழ்ந்ததாக கண்டுபிடிக்கப்பட்ட பாஹியங்கலை காட்டுப் பகுதியில் இந்த ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காட்டுக்குள் வேட்டையாடுவதற்காக அவர்கள் பயன்படுத்திய எலும்புகள் மற்றும் கல்லினால் செய்யப்பட்ட நூதனமான ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

குரங்குகளின் வேகத்திற்கமைய அதனை வேட்டையாடுவது சாதாரண விடயமல்ல. எனினும் அதனைப் பிடித்து உணவாக்கியமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஆய்வினை மேற்கொண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தக் காலத்தில் எதிர்பார்த்ததை விடவும் சேப்பியன்கள் அறிவுத்திறன் மிக்கவர்களாக இருந்தார்கள் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கையில் காணப்பட்ட காலநிலையின் அடிப்படையில் மலைக்காடுகளில் யாரும் வாழ்ந்திருக்க முடியாது என்ற நிலை காணப்பட்டது.

எனினும் புதிய ஆய்வின் மூலம் மலைக்காடுகளில் ஆதி மனிதர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1654

### சாந்தன்

தகுதி பார்த்து யாரிடமும் பழகாதே... உன் இறுதிச் சடங்கில் தகுதியுள்ளவன் கை கட்டி நிற்பான், தகுதியில்லாதவன் உன்னைச் சுமந்து செல்வான்



### குமரேசன்

காத்திருக்கக் கற்றுக்கொள்... எல்லாவற்றிற்கும் உரிய ஒரு நேரம் இருக்கிறது... அவசரப்படுவதால் நிம்மதி தொலையுமே தவிர நன்மை எதுவும் கிடைக்கப் போவதில்லை




### மாதவன்

ஆன்ட்டி பாகுபலி சீடி இருக்கா? இந்தா சீமராஜா சீடி... இதுல பாகுபலி, பத்மாவதி, புலி முருகன், சிறுத்தை எல்லாமே இருக்கு



### பத்மினி

ஒருவேளை டெய்லர் அவசரத்தில் டேப்பை சேர்த்து வைச்சு தைத்திருப்பாரோ?



### இளவரசன்

அன்புக்காக ஏங்கி அவமானப்படுவதை விட அநாதையாகவே வாழ்ந்து விடலாம்



### ராகவன்

மகன்களைப் பெற்ற அம்மாக்களுக்கு மட்டுமே தெரியும்.. அவனை மளிகைக் கடைக்கு அனுப்பினா மீதி காசு வராது என்று...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிரியாவில் கண்ணிவெடியில் சிக்கி 25 பேர் உடல் சிதறி உயிரிழப்பு

(டமாஸ்கஸ்)

**சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் முன்னர் வைத்திருந்த கண்ணிவெடியில் நேற்று முன்தினம் பஸ் சிக்கிய விபத்தில் 25 பேர் உடல் சிதறிப் பரிதாபமாக உயிரிழந்தனர்.**



சிரியாவின் பல பகுதிகளில் முன்னர் ஆதிக்கம் செலுத்தி வந்த ஐ.எஸ். பயங்கரவாதிகள் இராணுவத்தினரால் அடித்து விரட்டப்பட்டனர்.

அவர்களில் சிலர் ஈராக்-சிரியா எல்லைப் பகுதிகளில் தலைமறைவாக வாழ்ந்து வருகின்றனர்.

முன்னர் சில பகுதிகளில் அவர்கள் மறைத்து வைத்திருந்த கண்ணிவெடிகளில் சிக்கி பொதுமக்கள் அடுத்தடுத்து பலியாகி வருகின்றனர்.

அவ்வகையில், சிரியாவின் மத்திய பகுதியில் உள்ள சலாமியே பகுதியில் நேற்று பயணிகளை ஏற்றிச்சென்ற ஒரு பஸ் கண்ணிவெடியில் சிக்கியதில் 25 பேர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதே பகுதியில் இருவாரங்களுக்கு முன்னர் கண்ணிவெடியில் சிக்கி 7 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (7)

# சவுதியில் முதன்முறையாக தூதராக பெண் நியமனம்

(றியாத்)

சவுதி அரேபியாவின் அமெரிக்காவுக்கான தூதராக முதன் முறையாக பெண் ஒருவரை அந்நாட்டு அரசாங்கம் நியமித்துள்ளது.



அந்தவகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சவுதி அரேபியாவின் அமெரிக்க தூதுவராக இளவரசி ரீமா பிண்ட் பண்டர் பின் சுல்தான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அமெரிக்காவுக்கான தூதராக, சவுதி பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மானின் இளைய சகோதரர் காலித் பின் சல்மான் கடமையாற்றினார்.

ஆனால் தற்போது அவர் சவுதி அரேபியாவின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார்.

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலைக்குப் பின்னர் அமெரிக்கா - சவுதி இடையேயான உறவு பாதிக்கப்பட்டது. இதை சரி செய்யும் முகமாகவே தூதர்களின் நியமனங்கள் மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. (7)

# நைஜீரியாவில் தேர்தல் கலவரம் ஒரே நாளில் 16 பேர் பலி!



(லாகோஸ்)

நைஜீரியா நாட்டின் பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதி பதவிக்கு நடைபெற்ற தேர்தலின்போது ஏற்பட்ட மோதல்களில் ஒரேநாளில் 16 பேர் உயிரிழந்தனர்.



ஆபிரிக்கா கண்டத்தில் அதிகமான மக்கள்தொகை கொண்ட நைஜீரியா நாட்டின் பாராளுமன்றத்தின் 360 கீழ்சபை மற்றும் 109 மேல் சபை உறுப்பினர்கள் பதவிக்கும் ஜனாதிபதி பதவிக்கும் சேர்த்து நேற்று முன்தினம் தேர்தல் நடைபெற்றது.

இந்த தேர்தலில் அந்நாட்டின் வரலாற்றில் முன்னர் எப்போதும் இல்லாத அளவுக்கு ஜனாதிபதி பதவிக்கு மட்டும் 73 பேர் போட்டியிட்டனர்.

இந்த தேர்தலில் ஜனாதிபதி முஹம்மது புஹாரி தலைமையிலான அனைத்து முன்னேற்றவாதிகள் காங்கிரஸ் கட்சிக்கும் பிறகட்சிகளுக்கும் இடையே கடுமையான போட்டி நிலவியது.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டு பலமுறை தள்ளிவைக்கப்பட்ட இந்த தேர்தல் தொடர்பாக கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் இருந்து ஏற்பட்ட மோதல்களில் 200இற்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்குப்பதிவின் போது பல இடங்களில் வாக்குச்சாவடிகள் தீயிட்டு கொளுத் தப்பட்டன. ஆளுங்கட்சியை சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

போர்னோ, யோபே, கோகி, லாகோஸ் உள்ளிட்ட மாநிலங்களில் நேற்று முன்தினம் ஏற்பட்ட மோதல்களில் மொத்தம் 16 பேர் கொல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது. (7)

# கொலம்பியாவுடனான இராஜதந்திர உறவு முறிவு

## வெனிசுவெலா அறிவிப்பு

(கராகஸ்)

கொலம்பியாவுடனான இராஜதந்திர உறவுகளைத் துண்டித்துக் கொள்வதாக, வெனிசுவெலா அறிவித்துள்ளது.

இது குறித்த அறிவிப்பை கடந்த சனிக்கிழமை அந்நாட்டு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ வெளியிட்டுள்ளார்.

வெனிசுவெலாவில் ஏற்பட்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியை அடுத்து, அங்கு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன.

அரசியல் ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டுள்ள வெனிசுவெலாவிற்கான மனிதாபிமான உதவிகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில், அந்நாட்டு எதிர்க்கட்சி தலைவர் ஜுவான் கெய்டோவால் எல்லைகள் திறக்கப்பட்டன.

இந்நிலையில், தமது நாட்டுக்கு சர்வதேசத்தின் உதவிகள் தேவையில்லை எனத் தெரிவித்து வெனிசுவெலா மற்றும் கொலம்பியா, பிரேஸில் எல்லைகளை மூடுமாறு ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து, அந்நாட்டு எதிர்க்கட்சியினரால் முன்னெடுக்கப்பட்டுள்ள எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இதுவரை 4 பேர் கொல்லப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (7)

# நிக்கோலஸ் மதுரோவின் பதவிக்கு விரைவில் ஆபத்துக் காத்திருக்கிறது

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

வெனிசுவெலாவின் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவின் பதவிக்கு விரைவில் ஆபத்துக் காத்திருப்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மைக் போம்பியோ தெரிவித்தார்.



வெனிசுவெலாவில் அதிகரித்துவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நிக்கோலஸ் மதுரோவுக்கு சர்வதேச அளவில் நெருக்கடி அதிகரித்துள்ளது.

இதனையடுத்து நிகோலஸ் மதுரோவின் அரசுக்கு ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் பொதுமக்கள் கொல்லப்பட்ட விவகாரம் வருத்தம் அளிப்பதாகவும், வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அமைச்சர் மைக் போம்பியோ வலியுறுத்தியுள்ளார்.

மேலும், வெனிசுவேலாவின் எல்லைப் பிரதேசங்களில் அரசு ஆதரவாளர்கள் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதாகவும், வெனிசுவெலா மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்வதே எமது ஒரே நோக்கம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (7)

# இந்தியாவைப் பகைப்பது மிகவும் ஆபத்தானது

## முஷரப் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

இந்தியாவைப் பகைத்துக் கொள்வது மிகவும் ஆபத்தான விடயம் என பாகிஸ்தானின் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷரப் குறிப்பிட்டுள்ளார்.



இந்தியாவிற்கு பதிலடி வழங்கத் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் குறிப்பிட்டுள்ள நிலையில் அபுதாபியில் ஊடகங்களுக்கு வழங்கிய விசேட பேட்டியொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அண்மையில் புல்வாமாவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தினையடுத்து இந்தியா-பாகிஸ்தான் நாடுகளுக்கு இடையிலான உறவு மீண்டும் அபாயக் கட்டத்தை அடைந்துள்ளது.

குறித்த தாக்குதல் இந்தியாவை கடும் சீற்றத்திற்கு உள்ளாக்கி இருக்கின்றது.

இந்தச் சம்பவத்தினை மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் கையாளவேண்டும்.

அதனைவிடுத்து பாகிஸ்தான் அரசாங்கம் கடுமையான தொனியில் இந்தியா போர் தொடுத்தால் நாமும் பதிலடித் தாக்குதல்களை மேற்கொள்வோம் எனக் கூறியிருப்பது ஏற்புடையதல்ல.

போர் என்று வந்தால் அது பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு பாதகமாகவே அமையும். அதாவது பாகிஸ்தான் ஒரு அணுகுண்டினை வீசினால் இந்தியா 20 குண்டுகளை வீசி பாகிஸ்தானை முழுமையாக அழித்துவிடும்" என முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷரப் மேலும் தெரிவித்தார். (7)

# விமானக்கடத்தல் முறியடிப்பு சந்தேக நபர் சுட்டுக்கொலை

(டாக்கா)

பங்களாதேஷில் போயிங் 737 எனும் பயணிகள் விமானத்தினைக் கடத்த முயன்ற ஒருவரை அந்நாட்டு பாதுகாப்புப் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். குறித்த விமானத்தின் விமானிகள் மற்றும் அதில் பயணித்த 142 பயணிகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக சிட்டகாங் விமான நிலைய அதிகாரி சாஹில் மிராஜ் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

வெடிகுண்டு மூலம் விமானத்தை வெடிக்க வைக்கப் போவதாகவும் தன்னிடம் பங்களாதேஷ் பிரதமர் பேச்சுவார்த்தைகள்ள மேற்கொள்ள வேண்டுமெனவும் குறித்த தாக்குதல்தாரி தெரிவித்திருந்ததாகவும் அதிகாரி தெரிவித்துள்ளார்.

8 நிமிடங்களுக்கு மேலாக இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் குறித்த தாக்குதல்தாரி சுட்டுக்கொலை செய்யப்பட்டதுடன், தாக்குதலிற்குப் பயன்படுத்திய பிஸ்டல் ரக கைத்துப்பாக்கியினையும் பங்களாதேஷ் பொலிஸார் கைப்பற்றியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (7)

# அசாமில் கள்ளச்சாராயத்தில் விஷம்;
# உயிரிழப்பு 150 ஆக உயர்வு

(சென்னை)

**இந்தியாவின் அசாம் மாநிலத்தில் விஷச் சாராயம் குடித்து உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையானது 150 ஆக அதிகரித்துள்ளது.**

அசாம் மாநிலம் கோல்ஹாட் மாவட்டத்தில் உள்ள சல்மாரியா தேயிலை தோட்டத்தில்ஏராளமானோர்வேலை பார்த்து வருகின்றனர். கடந்த வியாழக்கிழமை இரவு பெண் தொழிலாளர்கள் உட்பட ஏராளமானோர் விஷச் சாராயம் வாங்கி அருந்தினர்.

இதனால் விஷச் சாராயம் அருந்திய பெண்கள் உட்பட 30 பேர் உயிரிழந்ததுடன் மேலும் 300 இற்கும் மேற்பட்டோர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந் நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த மேலும் பலர் உயிரிழந்துள்ளமையினால் உயிரிழந்தோரின் தொகை 150 ஆக உயர்வடைந்துள்ளது.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் 10 க்கும் அதிகமானோரை கைதுசெய்துள்ளனர். (7)

## முதன்முறையாக ஆஸ்கர் விருதை தட்டிச் சென்ற மெக்சிகன் திரைப்படம்

(லொஸ் ஏஞ்சல்ஸ்)

ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில் வரலாற்றிலேயே முதன் முறையாக இந்த ஆண்டு சிறந்த வெளிநாட்டு படமாக மெக்சிகோ நாட்டின் ரோமா திரைப்படம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் 91ஆவது ஆஸ்கர் விருது வழங்கும் விழா நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு பிரிவுகளில் விருதுகள் அறிவிக்கப்பட்டு வருகிறது. காலை 7 மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்ச்சி தொகுப்பாளர் இன்றி நடந்து வருகிறது.

இந்த ஆண்டிற்கான சிறந்த வெளிநாட்டு மொழி படமாக மெக்சிகோ நாட்டின் 'ரோமா' திரைப்படம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த திரைப்படம் 1970களில், நடுத்தர பணிப்பெண்களின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்டதாகும். இதுவே ஆஸ்கருக்கு பரிந்துரைக்கப்பட்ட 8ஆவது மெக்சிகன் திரைப்படம் ஆகும்.

இத்திரைப்படத்தில் கிளியோ எனும் கதாபாத்திரம், கியூரோனின் வீட்டில் பணிபுரிந்த லிபோரியாவின் உண்மைக் கதையை மையமாகக்கொண்டு எடுக்கப்பட்டதாகும். (7)

## வெனிசுவெலாவில் தொடரும் வன்முறைகள் இதுவரையில் 25 பேர் உயிரிழப்பு



(கராகஸ்)

வெனிசுவெலா - பிரேசில் எல்லைப் பகுதியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களில் குறைந்தது 25 பேர் உயிரிழந்துள்ளதாக வெனிசுவெலா நகராட்சி மேயர் குறிப்பிட்டுள்ளார்.

உணவு மற்றும் மருந்து பொருட்கள் உள்ளிட்ட உதவி பொருட்களை பெற எல்லையைத் தாண்டும் முயற்சியில் வெனிசுவெலா மக்கள் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதோடு, துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டனர். இதனால் அங்கு ஏற்பட்ட வன்முறைகளையடுத்து இதில் 14 வயது சிறுவன் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

பிரேசில் எல்லைப் பகுதியான கிரான் சபா எனும் பிரதேசத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவங்களிலேயே மேற்படி உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கடந்த வாரம், கிரானை சபாவின் நகராட்சியில் உள்ள சாண்டா எலெனா டி யுயெரின் பகுதியின் எல்லையை மீண்டும் திறக்கக் கோரி வெனிசுவெலா மக்கள் ஆர்ப்பாட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.


எனினும் குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வெனிசுவெலாவின் பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்ததாகச் செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும் குறித்த உயிரிழப்புக்களை மறுத்த கிரான் சபாவின் மேயர் எமிலியோ கோன்சலஸ், அவ்வாறான உயிரிழப்புச் சம்பவங்கள் எதுவும் தமது நாட்டு வைத்தியசாலையில் பதிவாகவில்லை என ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வெனிசுவெலா நாட்டின் எல்லைகளை மூடி வெளிநாடுகளில் இருந்துவரும்உணவுப்பொருட்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களைக்கூட அந்நாட்டிற்குள் அனுமதிக்க வெனிசுவெலா ஜனாதிபதி தொடர்ந்தும் மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## குழந்தைகளைத் தங்களின் பாலியல் இச்சைக்கு உட்படுத்துபவர்கள் சாத்தானின் கருவிகள்

### போப் பிரான்சிஸ் தெரிவிப்பு



(வத்திக்கான்)

குழந்தைகளைத் தங்களின் பாலியல் இச்சைக்கு உட்படுத்தும் பாதிரியார்கள் சாத்தானின் கருவிகள் என்று போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாகப் பேசிய போப், "குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை என்பது மனித பலிக்குச் சமமானது. ரோமன் கத்தோலிக்க தவாலயங்களில் பாதிரியார்களால் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு பாலியல் வன்முறைக்கும் சரியாகப் பாடம் கற்பிக்கப்படும்.

இது தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட தேவாலயங்கள், ஏற்கனவே பிரச்சினையில் சிக்கியிருந்தால் தீவிர கவனம் கொடுத்து விசாரிக்கப்படும்.

முன்னொரு காலத்தில் சில கலாசாரங்களில் கொடூரமான மத நடைமுறைகள் இருந்ததை நினைத்துப் பார்க்கிறேன். சில சடங்குகளில் மனிதர்கள் பலி கொடுக்கப்படுவர். குழந்தைகளை பலி கொடுக்கும் நிகழ்வுகளும் இருந்தன.

குழந்தைகள் மீதான வன்முறை என்பது சமூகத்தின் அனைத்துக் கலாசாரங்களிலும் பெரும்பான்மையாகப் பரவியிருக்கிறது. இதில் காவலர்களாக இருக்க வேண்டிய பாதிரியார்களே குழந்தைகளுக்கு எதிரானவர்களாக மாறுகிறார்கள். அவர்கள் சாத்தானின் கருவிகள்.

இதில் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஆதரவாக நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார் போப் பிரான்சிஸ்.

முன்னதாக, ஐக்கிய அரபு அமீரகத்தில் இருந்து திரும்பி வரும்போது ஆயர்களும் பாதிரியார்களும் கன்னியாஸ்திரிகளைப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கியது உண்மைதான் என போப் பிரான்சிஸ் ஒப்புக்கொண்டது குறிப்பிடத்தக்கது. (7)

## விவசாயிகளை சமாதானப்படுத்தும் நோக்கில் வாக்குக்கு லஞ்சம் கொடுக்கும் திட்டம்

### மத்திய அரசு மீது சிதம்பரம் குற்றச்சாட்டு



(சென்னை)

விவசாயிகளை சமாதானப்படுத்தும் நோக்கில் நிதியுதவி திட்டத்தின் மூலம் வாக்குக்கு லஞ்சம் கொடுப்பது, பாஜகவின் நம்பிக்கையற்ற முயற்சியைக் காட்டுகிறது என்று காங்கிரஸ் சிரேஷ்ட தலைவர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசு தாக்கல் செய்த இடைக்கால பட்ஜெட்டில், விவசாயிகளுக்காக 'பிரதம மந்திரி விவசாய நல நிதி" என்ற புதிய திட்டம் அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின்படி, 2 ஹெக்டேயருக்கும்குறைவாக நிலம் வைத்திருக்கும் குறுசிறு விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6,000 நிதியுதவி வழங்கப்படும். இந்த உதவித் தொகை 3 தவணைகளாக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தப்படும். இதன்மூலம் நாடு முழுவதும் 12 கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகள் பயன் பெறுவார்கள் என அறிவிக்கப்பட்டது.

முதல் கட்டமாக கடந்த ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி முதல் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதி வரை கணக்கிட்டு முதல் தவணையாக ரூ.2,000 நிதியுதவியை விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்த முடிவு செய்யப்பட்டது.


இந்த திட்டத்தை பிரதமர் மோடி உத்தரப் பிரதேசத்தின் கோரக்பூரில் நேற்று முன்தினம் தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக ப.சிதம்பரம் தனது டுவிட்டர் பக்கத்தில் கூறுகையில், "வாக்குக்கு லஞ்சம் அளிக்கும் திட்டத்தை பிரதமர் மோடி தொடங்கி வைத்துள்ளார். தேசத்தின் விவசாயிகளை கடனிலும், கடுமையான வேதனையிலும் தள்ளிவிட்டு, நம்பிக்கையற்று சமாதானப்படுத்தும் முயற்சியில் குடும்பத்துக்கு நாள் ஒன்றுக்கு ரூ.17 மட்டும் வழங்குகிறது.

கட்டுமானத்துறைக்கு ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டுள்ளது. இந்த ஞானம் எங்கிருந்தது. பன்மடங்குடன் கூடிய அதிக வரி இருக்கிறது என்று நாங்கள் கூறினோம். ஜிஎஸ்டி வரியை கேலிக்கூத்தாக மாற்றிவிட்டார்கள்" எனத் தெரிவித்தார். (7)

## புல்வாமா தாக்குதல் தொடர்பான ஆதாரங்களை அளித்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்போம்

### மோடியிடம் இம்ரான் வேண்டுகோள்





(இஸ்லாமாபாத்)

அமைதிக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள், புல்வாமா தாக்குதல் தொடர்பாக ஆதாரங்களை அளித்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்போம் என்று பிரதமர் மோடிக்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ராஜஸ்தானில் நடந்த தேர்தல் பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானை தாக்கிப் பேசியதற்குப் பின்பு இந்த அறிக்கையை பாகிஸ்தான் அரசு வெளியிட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் பிரதமர் மோடி பேசுகையில், "பாகிஸ்தான் பிரதமராகப் பொறுப்பேற்றபோது என்னிடம்பேசிய இம்ரான் கான், வறுமையையும், கல்வியறிவின்மையையும் பிராந்தியத்திலிருந்து ஒழிக்க வேண்டும் என்றார். பதான் மண்ணின் மகன்கள் மரியாதையும், சத்தியத்தையும் காப்பாற்றுபவர்கள்.

தீவிரவாதத்துக்கு எதிராக உலகம் திரண்டிருக்கிறது. தீவிரவாத செயல்களைச் செய்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கிறோம். தகுந்த நேரத்தில் பதிலடி கொடுக்கப்படும். பொறுமை காக்க மாட்டோம். தீவிரவாதத்தை எப்படி அழிக்க வேண்டும் என்பது தெரியும்" எனத் தெரிவித்தார்.

இதையடுத்து, பிரதமர் இம்ரான் கானின் அலுவலகம் நேற்று வெளியிட்ட அறிவிப்பில்கூறியிருப்பதாவது,

"பிரதமர் இம்ரான் கான் அளித்த வாக்குறுதியின்படி நடப்பார். புல்வாமா தாக்குதலில் உரிய, நம்பத்தகுந்த ஆதாரங்களை அளித்தால் உடனடியாக விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும். பிரதமர் மோடி அமைதிக்கு ஒரு வாய்ப்பளிக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையே கடந்த 19ஆம் திகதியும் இதே போன்ற அறிக்கையை பாகிஸ்தான் அரசு வெளியிட்டு இருந்தது. அதில், புல்வாமா தாக்குதலை நடத்தியதாகக் கூறப்படும் ஜெய்ஷ் இமுகமது தீவிரவாத அமைப்புக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். உரிய ஆதாரங்களை அளித்தால் நடவடிக்கை எடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட பதில் அறிக்கையில், "புல்வாமா தாக்குதலை பாகிஸ்தானில் உள்ள ஜெய்ஷ் இ முகமது தீவிரவாத அமைப்பும், அதன் தலைவர் மசூத் அசாரும் செய்துள்ளார்கள் என்பது தெரியும்.

இதுவே நடவடிக்கை எடுப்பதற்குப் போதுமான ஆதாரம். ஆனால், ஆதாரங்கள் கேட்பது பாகிஸ்தான் நடவடிக்கை விருப்பமில்லாமல் இருப்பதைக் காட்டுகிறது" எனத் தெரிவிக்கப்பட்டது. (7)

மனதில் இறைவன் உறைகிறான்;
அவன்தான் மனச்சான்று.

~ மினாண்டர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்கள் விடும் கண்ணீரை சர்வதேசம் கண்டுகொள்ள வேண்டும்

இந்த உலகம் தர்மத்தின் வழியில் இயங்குவதற்கான ஒழுங்குபடுத்தலைக் கொண்டது.

தர்மம் சிதைவுற்றால், தர்மத்துக்கு அழிவு ஏற்பட்டால் இந்த உலகப் பிரபஞ்சத்தை பிரளயத்துக்கு உட்படுத்த இறைவன் கட்டளையிடுவான் என்பதே அனைத்துச் சமயங்களும் போதிக்கும் உபதேசமாகும்.

சமயக் கருத்துக்கள், இன்றைய அறிவியலும் அரசியல் இராஜதந்திரமும் இணைந்து கொண்டுள்ள உலகுக்கு ஒவ்வாதவை என்று யாரேனும் கூறலாம்.

எனினும் அதுபற்றி நாம் எந்தக் கவலையும் கொள்ளவில்லை.

ஏனெனில் விதியை வெல்லுவேன் என்று ஒருவன் கூறுவானாயின் அதுவும் விதிவசப்பட்டது என்று கவியரசர் கண்ணதாசன் கூறி வைத்துள்ளார்.

ஆக, உலகப் பிரபஞ்சத்தின் ஆலாவர்ணங்களை மட்டும் வேடிக்கை பார்ப்போர்; தர்மத்தை – நீதியை – உண்மையை மறந்து போவதும், தாம் நினைப்பதே சரியானது என்ற முடிவில் இருப்பதும் தவிர்க்க முடியாததே.

எனினும் இந்த உலகுக்கு அறத்தை உரைத் தெய்வப் புலவன் வள்ளுவனார் கூறிய குறட்பாக்கள் எஞ்ஞான்றும் பிழைத்தவையல்ல என்பதால், வள்ளுவன் வழியில் தர்மத்தின் ஒழுங்கு நிலையை அவதானிப்பதே பொருத்துடையதாகும்.

அந்த வகையில் இந்த உலகம் முழுவதையும் அழிக்கவல்ல ஆயுதம் ஒன்று உள்ளது என்கிறார் வள்ளுவர்.

அந்த ஆயுதம் எதுவென்றால், அப்பாவி மக்கள் அல்லல்பட்டு ஆற்றாது அழுகின்ற கண்ணீர்தான் இந்த உலகத்தை அழிக்கவல்லதாகும்.

உலகத்தை அழித்தல் என்ற வார்த்தைப் பிரயோகம் செல்வத்தை தேய்க்கும் என்பதாக வள்ளுவரால் முன்மொழியப்பட்டுள்ளது என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

ஆக, இன்று இலங்கைத் திருநாட்டில் தமிழ் மக்கள் விடுகின்ற கண்ணீர் பற்றி யாரும் கவனிப்பதாகவோ கவலை கொள்வதாகவோ தெரியவில்லை.

பிள்ளைகளை, பெற்றவர்களை, உறவுகளை இழந்து நிற்கின்றவர்கள் விடுகின்ற கண்ணீர் ஒருபுறம்.

காணாமல்போனவர்களைத் தேடித் தேடி இன்று வருவார், நாளை வருவார் என்று காத்திருந்து காத்திருந்து உடம்பில் இருக்கின்ற குருதியெல்லாம் கண்ணீராய் கலைந்து ஓடும் அளவில்; காணாமல்போன தங்கள் உறவுகளைத் தேடுகின்றவர்கள் தம் ஊனுருகி அழுகின்ற கண்ணீர் மறுபுறமாக இருக்க,

இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் இலங்கை நமது நாடு; பௌத்தத்துக்கே இங்கு முன்னுரிமை; சிங்களம்தான் எங்கள் நாட்டின் மொழி என்பதாகக் கர்ச்சிக்கின்றனர்.

கடவுளே! புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றுவதாகக் கூறுகின்றவர்கள் தமிழ் மக்களை வதைத்ததை புத்தபிரான் ஒரு போதும் ஏற்க மாட்டார்.

எனவே தமிழ் மக்கள் விடுகின்ற கண்ணீர் வலி தந்தவர்களை நீச்சயம் தேய்க்கும் என்பதில் அவநம்பிக்கை எதுவுமில்லை.

எனினும் தமிழ் மக்கள் விடுகின்ற கண்ணீரை, அவர்களின் துன்பத்தை சர்வதேச சமூகம் கண்டுகொள்ள வேண்டும்.

இதிலிருந்து விலகுவது தர்மத்தை சிதைப்பதாகும். தர்மம் சிதைந்தால் இறைவனின் கட்டளை என்னவாகும் என்பதை ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

# உலகின் பல பகுதிகளில் மனித உரிமை விடயம் வீழ்ச்சியடைந்தும்

## மனித உரிமையை நிலைநாட்டும் விடயத்தில் நம்பிக்கை இழக்கவில்லை – ஐ.நா செயலாளர்

உலகின் பல பகுதிகளில் மனித உரிமை விடயங்கள் வீழ்ச்சி கண்டுள்ளபோதும், மனித உரிமையை நிலைநாட்டும் விடயத்தில் தான் நம்பிக்கை இழக்கவில்லை என ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் 40ஆவது அமர்வு ஜெனிவாவில் நேற்று திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

இதல் ஆரம்ப உரையை நிகழ்த்திய ஐ.நா. செயலர் மேற குறித்தவாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, நெருக்கடிகளை தடுத்து, பதற்றங்களை தணித்து, நிலையான அபிவிருத்தி மற்றும் சமாதானத்தை ஏற்படுத்த மனித உரிமையே வழி வகுககின்றது என்றும் ஐ.நா. செயலாளர் குறிப்பிட்டார்.

மனித உரிமையை நிலைநாட்ட நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளபோதும் அதனை பாதுகாக்கவும் சமூக நீதிக்காகவும் வலிமையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என ஐ.நா. செயலர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, குடியேற்ற வாசிகள் தமது உரிமை தொடர்பில் இன்று உரக்கப் பேசும் நிலை ஏற்பட்டுள்ளமை, ஊடகவியலாளர்கள் அச்சமின்றி பணியாற்றும் நிலை ஏற்பட்டுள்ளமை மற்றும் பெருமளவான நாடுகள் மரண தண்டனையை அமுல படுத்தாமல் உள்ளமை என்பன சிறந்த விடயங்கள் என ஐ.நா. செயலர் மேலும் தெரிவித்தார்.

அத்தோடு, பெண்கள் சுயாதீனமாக செயற்படும் நிலை, வறுமை நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை போன்ற விடயங்களையும் சுட்டிக் காட்டினார்.

எனினும், மனித உரிமை விடயங்களில் சில சவால்கள் காணப்படுவது குறித்து கரிசனை கொண்டுள்ளதாக குறிப்பிட்ட ஐ.நா. செயலர், பிரிக்க முடியாத மற்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட சிவில், அரசியல், சமூக மற்றும் கலாசார உரிமை தொடர்பில் கவனஞ் செலுத்துவது அவசியம் எனக் குறிப்பிட்டார்.

இதேவேளை தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பேச்சு சுதந்திரத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தப்பட்டதாகவும், உலகளவில் இடம்பெறும் தாக்குதல்கள், வன்முறைகள் என்பன குறித்தும் ஐ.நா. செயலர் தமது உரையில் கரிசனை வெளியிட்டார். குறிப்பாக கடந்த மூன்று வருட காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களும் மனித உரிமை செயற்பாட்டாளர்களும் கொலலப்பட்டுள்ளனர் என சுட்டிக் காட்டினார்.

கடந்த 2018ஆம் ஆண்டு மாத்திரம் சுற்றுச் சூழலியலாளர்கள் நால்வர் கொல்லப் பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில், அவ்வாறானவர்களை பாதுகாப்பதற்கு கூடுதல் நடவடிக்கை எடுப்பதோடு, பொறுப்புக் கூறுதல் அவசியம் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இறுதியாக, இன்று உலகை அச்சுறுத்தும் காலநிலை மாற்றம் தொடர்பாக தமது உரையில் சுட்டிக்காட்டிய ஐ.நா. செயலர், உலகில் 90 வீதத்திற்கும் அதிகமானோர், அசுத்தமான காற்றையே சுவாசிப்பதாக சுட்டிக் காட்டினார்.

இதனால் ஒவ்வொரு வருடமும் சுமார் 7 மில்லியன் மக்கள் உயிரிழப்பதாகவும் அவர்களில் 600,000 பேர் குழந்தைகள் என்றும் சுட்டிக் காட்டினார்.

இந் நிலையில், காலநிலை மாற்றம் தொடர்பான ஏதுவான செயற்பாடுகளை உலக நாடுகள் செயற்படுத்துவது அவசியம் என ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரெஸ் தமது உரையில் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மிகவும் ஆபத்தானது

### திஸ்ஸ விதாரண தெரிவிப்பு

பயங்கரவாத தடைச் சட்டத்தை அமுல்படுத்தி பொலிஸ் ஆட்சியை ஏற்படுத்த அரசாங்கம் திட்டுமிட்டு வருகின்றது. அதனால் குறித்த சட்டமூலத்தில் திருத்தங்கள் மேற்கொண்டே பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனத உரிமை பேரவைக்கு வாக்குறுதி அளித்திருந்தது. தற்போது ஜெனிவாவில் மனத உரிமை பேரவை கூட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 25 ஆம திகதிவரை இடம்பெறுகின்ற இந்த கூட்டத்தில் இலங்கை விவகாரம் தொடர்பாகவும் குறிப்பிட்ட ஒரு தினத்தில் விவாதிக்கப்பட இருக்கின்றது.

அந்த தினத்துக்கு முன்னர் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி இதற்கு பதிலாக பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தை கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகின்றது.

மேலும் அரசாங்கம் தயாரித்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமானது மிகவும் ஆபத்தானதாகும். அதன் உள்ளடக்கங்களில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் சாதாரண சட்டத்துக்கும் அப்பாற்பட்டதாகவே காணப்படுகின்றன.

இந்த சட்டமூலம் அமுல்படுத்தப்பட்டால் பொலிசுக்கு அதிகாரங்கள் அதிகரிக்கின்றன. இதன்மூலம் அரசாங்கம் பொலிஸ் ஆட்சியை ஏற்படுத்துவதற்கான மறைமுக முயற்சியாகவும் இருக்கலாம். அதற்கான சாத்தியமும் உள்ளதாகவும் சுட்டிக் காட்டினார். (ம-3)

## மோ.சைக்கிளுடன் துவிச்சக்கரவண்டி மோதி விபத்து - இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கரவண்டியும் மோதியதில் இருவர் படுகாயமடைநதுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் சாவகச்சேரியில் இடம் பெற்றுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் மற்றும் துவிச்சக்கர வண்டியில் சென்ற குடும்பஸ்தர் ஆகியோர் காயமடைந்துள்ளனர். இது தொடர்பாக மேலும தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் சாவகச்சேரிப் பகுதியில் உள்ள உணவகத்தில் உணவருந்திய பின்னர் ஏ9 வீதியால் சென்றுள்ளார்.

சங்கத்தானைப் பகுதியில் திடீரென ஒவ்வாமை ஏற்பட்டு வாந்தி மற்றும் தலைச்சுற்றல் ஏற்பட்டதாகவும். இதன்போது நிலை தடுமாறி மோட்டார் சைக்கிளைச் செலுத்தியவாறே வீதியின் மறுதிசைக்குச் சென்று வீதியால் வந்த துவிச்சக்கர வண்டியுடன் மோதி பின்னர் மதிலுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதில் சாவகச்சேரி - அரசடிப் பகுதியைச் சேர்ந்த 35 வயதான இளைஞன் ஒருவரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ம-30)

சித்திரவதைக்கு எதிராக

## அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

சித்திரவதைகளுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று, சர்வதேச உண்மைக்கும், நீதிக்குமான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

இலங்கை அரசாங்கம் சித்திரவதைகளுக்கு எதிராக பூச்சிய சகிப்புத்தன்மையை கொண்டிருப்பதாக அறிவித்துள்ளது.

ஆனால் இந்த குற்றச்சாட்டுக்களை உடைய அதிகாரிகள் பலரது பெயர்கள் ஐக்கிய நாடுகளின் சித்திரவதைக்கு எதிரான அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (ம-3)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- நம்மைப் பற்றி எண்ணாத நேரத்தில் மட்டுமே, உண்மையான வாழ்க்கையை அனுபவிக்கிறோம்.
- துன்பப்புள்ளியாக தோன்றும் இந்த மனிதப்பிறவியே, மகான்களைப் பொறுத்தமட்டில் பயிற்சிப் பள்ளியாக அமைந்து நெறிப்படுத்துகிறது.
- தியாகம் செய்யுங்கள். பிறரின் உள்ளத்தை வெல்லும் சக்தி தியாகத்திற்கு மட்டுமே உண்டு.
- கோழையும், முட்டாளும் விதி என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆனால், ஆற்றல் மிக்கவனோ விதியை நானே வகுப்பேன் என்று சபதம் செய்வான்.
- முதலில் உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். பிறகு கடவுளிடம் நம்பிக்கை வையுங்கள். இதன் மூலம் எதையும் சாதிக்கும் வல்லமை பெறுவீர்கள்.
- அன்பின் மூலமாகவே கடமை இனிதாக முடியும். சுதந்திரமான நிலையில் மட்டுமே அன்பு தன் பூரணத்தன்மையுடன் பிரகாசிக்கும்.
- உங்களின் பலவீனத்தை எண்ணுவதால் பலன் சிறிதும் விளையாது. பலவீனத்திற்குப் பரிகாரம் பலத்தை நினைப்பது-மட்டுமே

அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட கரப்பந்தாட்டத் தொடர்

# புத்தூர் வளர்மதியை வீழ்த்தி சம்பியனாகியது ஆவரங்கால் மத்தி



ஆவரங்கால் மத்தி அணி



புத்தூர் வளர்மதி அணி

அரியாலை சுதேசிய திருநாள் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் யாழ்.மாவட்ட ரீதியான கரப்பந்தாட்ட தொடரின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் அரியாலை திருமகள் சன சமூக நிலையமைதானத்தில் நடைபெற்றது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப்போட்டியில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகத்தினை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது.

பலத்த போராட்டத் திற்கு மத்தியில் 3:2 என்ற ரீதியில் வீழ்த்தி நூற்றா ண்டு விழாவின் சம்பியனாகியது ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம். (க)

# கலைவாணி வைரவிழா வெற்றிக்கிண்ணம்; இறுதிக்குள் நுழைந்தது வல்வை அணி



கம்பர்மலை கலாவாணி சனசமுக நிலைய 60 ஆண்டினை முன்னிட்டு வடமராட்சி, பருத்தித்துறை லீக் இலிருந்து அழைக்கப்பட்ட 16 கழகங்களுக்கு இடையிலான 7 நபர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியினை நடத்தி வருகின்றது.

கடந்த 24 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் நவிண்டில் கலைமதி அணியினுடனான போட்டியில் வல்வை அணியானது 3-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று லீக் சுற்றுக்கு தகுதி பெற்றது. வல்வை அணி சார்பாக ப.பிரசாந் 2 கோல்களையும், ச.பிரசாந் ஒரு கோலையும் பெற்றுக் கொடுத்தனர்.

ஆட்டநாயகனாக வல்வை அணியைச் சேர்ந்த ச.பிரசாந் தெரிவு செய்யப்பட்டார். (க)

# பெண்களுக்கான பூப்பந்தாட்டம் பரு.பிரதேச செயலகம் சம்பியன்



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு பிரிவு நடத்தும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வுகளின் வரிசையில் பெண்களுக்கான பூப்பந்தாட்ட தொடர் கடந்த 23 ஆம் திகதி சங்கானை உள்ளக அரங்கில் நடைபெற்றது.

தொடரின் இறுதிப் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியினை 3:0 ரீதியில் வீழ்த்தி மாவட்ட சம்பியன் ஆகியது பருத்தித்துறை பிரதேச செயலக அணி. (க)

# நல்லூர் பிரதேச செயலக அணியை வென்று மகுடம் சூடியது உடுவில் பிரதேச செயலக அணி



யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப்பிரிவு நடத்தும் பிரதேச செயலகங்களுக்கு இடையிலான மாவட்ட மட்ட விளையாட்டு நிகழ்வுகளின் வரிசையில் ஆண்களுக்கான பூப்பந்தாட்ட தொடர் கடந்த 24 ஆம் திகதி அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக அரங்கில் நடைபெற்றது.

தொடரின் இறுதிப்போட்டியில் நல்லூர் பிரதேச செயலக அணியினை 3:0 ரீதியில் வீழ்த்தி மாவட்ட சம்பியன் ஆகியது உடுவில் பிரதேச செயலக அணி. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# ஓய்வின் பின் விவசாயம் இங்கிலாந்து வீரர் அறிவிப்பு



இங்கிலாந்து கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனி, தனது ஓய்வுக்கு பின்னர் விவசாயத்தில் ஈடுபட உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது 33 வயதாகும் இங்கிலாந்து கால்பந்து நட்சத்திரம் வெய்ன் ரூனி, டி.சி யுனைடெட் கிளப் அணியில் 2021 ஆம் ஆண்டு வரை விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வெய்ன் ரூனி தனது ஓய்வுக்கு பிறகு விவசாயத்தில் களமிறங்க முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, தனது 20 மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள Cheshire மேன்சனில் விவசாய கொட்டகை அமைக்க அனுமதி கோரியுள்ளார் எனத் தெரிய வந்துள்ளது.

அந்த கொட்டகையில் அவர் ட்ரக்டர் மற்றும் வைக்கோலை நிரப்பி வைக்க உள்ளார் எனத் தெரிகிறது. பண்ணையில் வைக்கோலை நிரப்பி வைக்க விரும்பும் ரூனி, விலங்குகளை கொண்டு விவசாயம் செய்ய உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வெய்ன் ரூனி மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடி பல வெற்றிகளைப் பெற்றுத் தந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

**அன்பு வாசகர்களே!**

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

**உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்**

# நான்கு பந்தில் நான்கு விக்கெட் ரஷித்கான் படைத்த சாதனை



சர்வதேச இருபது-20 கிரிக்கெட்டில் தொடர்ந்து 4 பந்துகளில் 4 விக்கெட் வீழ்த்தி ஆப்கானிஸ்தான் சுழற்பந்து வீச்சாளர் ரஷித்கான் உலக சாதனை படைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான்-அயர்லாந்து அணிகள் இடையிலான 3 ஆவது மற்றும் கடைசி இருபது-20 போட்டி டேராடூனில் நடந்தது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அயர்லாந்து, பந்துவீச்சை தெரிவு செய்தது.

அதன்படி முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 7 விக்கெட் இழப்புக்கு 210 ஓட்டங்கள் குவித்தது. முகமது நபி 36 பந்துகளில் 81 ஓட்டங்கள் குவித்தார். பின்னர் ஆடிய அயர்லாந்து அணி 8 விக்கெட் இழப்புக்கு 178 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

ஆப்கானிஸ்தானின் சுழற்பந்து வீச்சாளர் ரஷித்கான் 4 ஓவர்களில் 27 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். இதில் ஹாட்ரிக் விக்கெட்டுகளை வீழ்த்திய அவர், 4 ஆவது பந்திலும் ஒரு விக்கெட் எடுத்தார்.

இதன்மூலம், சர்வதேச இருபது-20 கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ந்து 4 பந்துகளில் 4 விக்கெட்டுகள் வீழ்த்தியவர் என்ற உலக சாதனையைப் படைத்தார்.

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்கா, 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ண தொடரின் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் 4 பந்துகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (க)

# போதை தொடர்பான அறிக்கை பிரதமர் ரணிலிடம் ஒப்படைப்பு





(கொழும்பு)

போதைப்பொருள் பாவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குற்றம்சாட்டி இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்த கருத்து தொடர்பான விசாரணைக் குழுவின் அறிக்கை பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கை நேற்று திங்கட்கிழமை ஒப்படைக்கப்பட்டுள்ளதாக அவைத்தலைவர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சரின் இந்த கருத்து தொடர்பான விசாரணைகளை மேற்கெரள்ள ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையிலான கூட்டத்தின் போது, லக்ஷ்மன் கிரியெல்ல தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க குறித்த குழுவின் முன்னிலையில் வாக்குமூலம் வழங்கியிருந்தார். இது தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த அறிக்கையின் பிரதி ஒன்றினை குற்றத்தடுப்பு பிரிவினருக்கும் வழங்கவுள்ளதாக லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (ம-3)

# சட்டவிரோதமாக மண் அகழ்வு வவுனியாவில் இருவர் கைது

(வவுனியா)

வவுனியாவில் சட்டவிரோதமாக மண் அகழ்வில் ஈடுபட்டு கடத்த முற்பட்டவர்கள் விசேட அதிரடிப் படையின் அதிரடி நடவடிக்கையினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கல்கமுவ பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலுக்கு அமைவாக குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது அப்பகுதிக்கு சென்ற மடுகந்தை விசேட அதிரடி படையினர் மண் அகழ்வில் ஈடுபட்ட பெக்கோ இயந்திரம் மற்றும் டிப்பர் வாகனம் என்பவற்றை கைப்பற்றியுள்ளனர்.

குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இருவரை கைதுசெய்த விசேட அதிரடி படையினர் இரட்டை பெரியகுளம் பொலிஸாரிடம் அவர்களை ஒப்படைத்துள்ளனர்,

கைது செய்யப்பட்டவர்கள் இன்று நீதிமன்றில் ஆயர்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-3)

## ஐ.நா.வதிவிடப்...

காணி விடுவிப்பு சம்பந்தமான மகஜர்களை ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதியிடம் உலகத்தமிழ் மாணவர் ஒன்றிய அமைப்பாளர் கந்தசாமி ராகுலன் கையளித்தார்.

நேற்று ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப்பிரதிநிதியை கொழும்பில் சந்தித்த உலகத்தமிழ் மாணவர் ஒன்றிய அமைப்பாளர் கந்தசாமி ராகுலன் மற்றும் அவரது குழுவினர் ஐ.நா. தொண்டர் அமைப்பின் ஊடாக காணாமலாக்கப்பட்டோருக்கான மற்றும் கேப்பாப்புலவு காணி விடுவிப்பு சம்பந்தமான மகஜர்களை கையளித்தார்.

இதே வேளை நேற்று ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் கிளிநொச்சியில் காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் இணைந்து கவனஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்நிலையில் அவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வட பகுதி முழுவதும் பூரண ஹர்தால் அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## முள்ளியவளை...

பிரிவுக்குட்பட்ட ஹீச்சிராபுரம் பகுதியில் தனியார் காணியில் வெடிக்காத நிலையில் வெடி பொருள் ஒன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது

காணி உரிமையாளர் வெடி பொருள் இருப்பதை முள்ளியவளை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை தொடர்ந்து பொலிஸார் குறித்த வெடிபொருளை பார்வையிட்டதுடன் இன்று நீதிமன்றில் அனுமதி பெற்று அகற்றுவதாக தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவடடத்தில் வெடிபொருட்கள் அகற்றிய பகுதியாக உறுதிப்படுத்தி மக்களை குடியேற்றிய போதிலும் தொடர்ச்சியாக வெடிபொருட்கள் மீட்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-281)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மகிந்த தேசப்பிரிய யாழ் விஜயம்

## இன்று ஊடகவியலாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ்ப்பாண மரவட்ட ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்ட செயல்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

இந்தச் சந்திப்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய மற்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் எம்.எம். மொகமட், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் எஸ்.இரத்தினஜீவன் எச்.ஹூல் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளதாக யாழ்.மாவட்ட பிரதி தேர்தல்கள் ஆணையாளர் த.அகிலன் அறிவித்துள்ளார். (ம-3)

# போதைப் பொருள் ஒழிப்பிற்கு 19ஆவது திருத்தமே உதவியது

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

போதைப் பொருளுக்கு எதிரான பொலிஸாரின் நடவடிக்கைக்கு 19 ஆவது அரசியலமைப்பு திருத்தமே பெரிதும் உதவியாக இருக்கின்றது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு 19 ஆவது திருத்தத்தின் விளைவாக எந்தவொரு அரசியல் தலையீடுமின்றி பொலிஸ் சுதந்திரமாக செயற்பட முடிந்தது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

புளத்சிங்கள பகுதியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். 19ஆவது திருத்த சட்டம் கடந்த சில நாட்களில் விமர்சிக்கப்பட்டது.

ஆனால் 19ஆவது திருத்தம் இல்லாவிட்டால், போதைப் பொருட்கள் மீதான நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டிருக்க முடியாது என பிரதமர் கூறினார். இலங்கையின் வரலாற்றில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய ஹெரோயின் போதைப் பொருள் (294.49KG) கடந்த வார இறுதியில் கொழும்பில் கார் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

# திருகோணமலையில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று திங்கட்கிழமை மீனவர்களினால் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கும்புறுபிட்டி பெரிய கரைசைக் களப்பை விடுவிக்கக் கோரி மீனவர்கள் நேற்று ஆர்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த கரைசைப் பகுதியினை நீண்ட காலமாக அப்பகுதி மீனவர்கள் தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருந்தனர்.

எனினும் யுத்தம் முடிவடைந்ததும் அங்குள்ள சுமார் 1800 ஏக்கர் கரைசைக் காணியை தனியார் கம்பனிக்கு மீனவர்களின் எதிர்ப்பையும் மீறி அரசாங்கம் உப்பு உற்பத்திக்காக வழங்கியிருந்தது.

களப்பு தொழிலை நம்பி அதில் ஈடுபடும் 1000 மீனவத் தொழிலாளர்கள் உள்ளனர். இக்களப்பு பகுதிகளில் இறால், நண்டு, மீன்பிடி போன்றவற்றை ஜீவனோபாயமாக மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் முறையற்ற வகையில், 1805 ஏக்கர் மக்களின் காணி எடுக்கப்பட்டிருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவற்றில் 450 ஏக்கர் காணி உப்பளத்திற்கும், 37 ஏக்கர் காணி தொழிற்சாலைக்கும் வழங்கப்பட்டுள்ளது. ஏனைய 1318 ஏக்கர் காணி கடலின் களப்புகளில் சிறு கடல் தொழில் செய்யும் தொழிலாளர்களின் மீன், நண்டு வளர்ப்புகளுக்கென ஒதுக்கப்பட்டது.

இந்நிலையில் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதால் குறித்த களப்பை விடுவிக்குமாறு மீனவர்கள் கோரியிருந்த போதிலும் அதற்கான தீர்வானது இது வரை எட்டப்படவில்லை.

இந்நிலையில் கடந்த நவம்பரில் பிரதேச செயலாளரின் கோரிக்கைக்கிணங்க குறித்த நிறுவனத்திற்கு கும்புறுபிட்டி களப்பு பகுதியில் நீண்ட கால குத்தகையில் வழங்கப்பட்ட காணியிலிருந்து 1000 ஏக்கர் களப்பு பகுதியை விடுவிப்பதாக வாக்குறுதியளிக்கப்பட்டது.

எனினும் பல மாதங்கள் கடந்தும் எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத நிலையில், தமக்காக ஒதுக்கப்பட்ட காணியைப் பெற்றுத்தருமாறு கோரி மக்கள் இப்போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (ம-3)

# 19ஆவது திருத்தத்தை புறக்கணிக்க எதிர்த்தரப்பினர் எடுக்கும் முயற்சிக்கு

## இடமளிக்க முடியாது – ஐ.தே.க

(கொழும்பு)

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை புறக்கணிக்க எதிர்தரப்பினர் எடுக்கும் முயற்சிக்கு இடமளிக்க போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

இந்த அரசியலமைப்பு திருத்தம் ஐக்கிய தேசிய கட்சியின் நலனுக்காக கொண்டுவரப்படவில்லை என்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.




நாட்டு மக்களின் மத்தியில் ஜனநாயகத்துக்கு எதிரானதும் மக்களின் உரிமைகளை ஊழல் செய்யும் வகையில் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது என்ற வகையில் கருத்துக்களை உருவாக்கவே முயற்சிக்கின்றனர்.

ஆயினும் 19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் ஐக்கிய தேசிய கட்சியின் நலனுக்காக கொண்டுவரப்படவில்லை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ம-3)

**சுபிரி வாசனா**
திகதி 2019/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 1407
இலக்கம் | வெற்றி இலக்கம் | முதல் போனஸ் இலக்கம் | இரண்டாவது போனஸ் இலக்கம்
09 | 29 44 60 62 | 33 | 41
தேசிய லொத்தர் சபை

**மெகா பவர்**
திகதி 25/02/2019
சீட்டிழுப்பு இலக்கம் 349
வெற்றி எழுத்து | சுப்பர் இலக்க | வெற்றி இலக்கங்கள்
Z | 14 | 07 09 35 80

**மஹஜன சம்பத**
திகதி 2019/02/25
சீட்டிழுப்பு இலக்கம் 3863
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
E | 8 6 8 1 2 2
தேசிய லொத்தர் சபை

**கொவிசெத**
திகதி 2019.02.25
சீட்டிழுப்பு இலக்கம் 2046
ஆங்கில எழுத்து | வெல்லப்பட்ட இலக்கங்கள்
N | 31 52 71 75
தேசிய லொத்தர் சபை

## காணாமல் ஆக்க...

போராட்டம் ஒன்று தாயக உறவுகளினால் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சியில் ஐ.நா அலுவலகம் நோக்கிய வடகிழக்கு இணைந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக எமது குரலையும் உலக அரங்கில் ஓங்கி ஒலிக்கச் செய்வோம், கால நீடிப்பு வேண்டாம்,

சர்வதேச பிரத்தியேக விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நேற்று காலை 10மணியளவில் டவுனிங்ஸ் வீதியில் ஒன்றிணைந்த லண்டனில் புலம் பெயர்ந்து வசித்து வரும் தாயக உறவுகள் வெஸ்மினிஸ்டர் தொடருந்து நிலையத்திற்கு அருகில் காலை 10மணி முதல் பிற்பகல் 12மணி வரையும் தமது போராட்டத்தினை மேற்கொண்டனர். (ம-3)

## ஒன்பது இந்திய...

மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 9 இந்திய மீனவர்களும் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களிடமிருந்து மீன் மற்றும் மீன்பிடி படகுகள் இரண்டு என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ் கடல் வள பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## கிளிநொச்சியில்...

வித்துள்ளனர்.

இதனை அவதானித்த ஒலிபெருக்கி அறிவிப்பாளர்கள் பதாதைகள் படங்களைச் சுமந்தவாறு பேரணியாக வந்த காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இடைப்பட்ட பகுதியில் குறித்த குழுவினரை நிற்காது பின்னகர்ந்து செல்லுமாறு அறிவுறுத்தி வந்தனர்.

இதனையடுத்து அடாவடியில் ஈடுபட்ட குறித்த குழுவினர் போராட்டத்தை முன்னின்று வழிநடத்திச் சென்ற முச்சக்கரவண்டியினை இடைமறித்து அதில் பயணித்த அறிவிப்புச் செய்தவர்களுடன் கடுமையாக வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதோடு ஒலிபெருக்கிச் சாதனத்தின் மின்சார இணைப்பு வயர்களையும் அறுத்துச் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த ஊடகவியலாளர்கள் அதனைப் புகைப்படம் மற்றும் வீடியோவில் பதிவுசெய்ய முற்பட்டபோது ஊடகவியலாளர்களும் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## கிளிநொச்சி...

தமிழ் அரசியல் பிரமுகர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

அந்தவகையில், பாராளுமன்ற உறுப்பினர்களான் சிவசக்தி ஆனந்தன், சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், கஜேந்திரன், அனந்தி சசிதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 40வது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இந்நிலையில் இந்த கூட்டத்தொடரின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில், காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்களால் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் வடக்கு மாகாணம் முழுமையாக ஹர்த்தால் காரணமாக நேற்று முடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## இராணுவத்தால்...

விடுவித்துக்கொள்ளும் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடந்த 2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் பின்னரான, கடந்த 2017 ஆம் ஆண்டு வரை மூன்று ஆண்டுகளில் தடுத்துவைக்கப்பட்ட மற்றும் சித்திரவதைக்குள்ளான இலங்கைப் பிரஜைகள் தொடர்பில் குறித்த அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்ட 16 வைத்திய அறிக்கைகள் இந்த விடயத்தை தெளிவுபடுத்துவதாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

குறித்த வைத்திய அறிக்கைகளைக் கொண்டு திரட்டப்பட்ட தகவல்களுக்கு அமைய, தடுத்துவைக்கப்பட்ட மற்றும் சித்திரவதை செய்யப்பட்ட அனைவரும் தமிழர்கள் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இலக்குவைக்கப்பட்ட மற்றும் தடுத்து வைக்கப்பட்ட இவர்களில் அதிகமானோர் எந்தவொரு பயங்கரவாத நடவடிக்கை பின்னணியையும் தற்போது வெளிக்காட்டாதிருந்த போதிலும் யுத்தத்திற்குப் பின்னர் இலங்கை பாதுகாப்புப் படையினர் வசம் சரணடையாமை காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்புகளைப் பேணியவர்கள் என அரச அதிகாரிகளினால் குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகச் சந்தேகப்பட்டவர்களும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதோடு இவர்ளுக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டம் அல்லது வேறு சட்டங்களின் அடிப்படையில் குற்றச்சாட்டுகள் எதுவும் பதிவு செய்யப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சித்திரவதைக்கு உள்ளான நால்வர் தலைநகர் கொழும்பில் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஏனையோர் வட மாகாண மாவட்டங்களிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரச அதிகாரிகள் குறித்த நபர்களிடம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் அரச விரோத நடவடிக்கைகள் தொடர்பில் சித்திரவதை ஊடாகவே ஒப்புதல் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பல்வேறு உபகரணங்களைக்கொண்டு தாக்குதல், எரியூட்டுதல், உடலின் குறிப்பான இடங்களில் சித்திரவதை செய்தல் மற்றும் மூச்சுத்திணறலை ஏற்படுத்துதல் அத்துடன் அச்சுறுத்தல் மற்றும் அவமானப்படுத்தல் போன்றன உள்ளிட்ட உடல் ரீதியான மற்றும் உள ரீதியான சித்திரவதையினை அவர்கள் அனுபவித்துள்ளனர்.

இதில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் பாலியல் வல்லுறவிற்கு உள்ளாகியிருப்ப தோடு மேலும் அநேகமானோர் பாலியல் சித் திரவதைக்கும் ஆளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

2015ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சிமாற்றம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய அரசாங்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான உறுதிமொழியினை வழங்கியதோடு இது நல்லிணக்கத்திற்கான இன்றியமையாத அம்சமாகவும் திகழ்ந்தது.

எனினும் இலங்கையில் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் போன்றவற்றை மேம்படுத்தும் வகையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு கடந்த 2015 செப்டம்பரில் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசானது உறுதியளித்த வாக்குறுதிகளை தொடர்ந்தும் உதாசீனப்படுத்துகிறது என்பதற்கு குறித்த சித்திரவதைகள் தொடர்பிலான ஆதாரங்கள் ஒரு தெளிவான எடுத்துக்காட்டாகும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## காணாமல்போன...

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கவனத்தை ஈர்க்கும் நோக்குடனும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கிளிநொச்சியில் நேற்று மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தை நடத்தினர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியுள்ளதை வெளிப்படுத்தியும், தமக்கு இன்னமும் நீதி வழங்கப்படாததைக் கண்டித்தும், இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது என்பதை வலியுறுத்தியும், இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று காலை 9 மணியளவில், கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றல் மற்றும், ஏ9 வீதியில் ஒன்று கூடிய, வடக்கு, கிழக்கின் எட்டு மாவட்டங்களையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், இந்தப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட தமது பிள்ளைகள், கணவன் மற்றும் உறவுகளின் படங்களையும், பதாகைகளையும் தாங்கியவாறு, கண்ணீருடன் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"அரசே பதில் சொல்", "சர்வதேசமே நீதியை வழங்கு", "காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?", "இராணுவமே, ஒட்டுக் குழுக்களே பதில் கூறுங்கள்", " சர்வதேசமே நீதியை நிலைநாட்டு", "எனது அப்பா எங்கே? எனக்கு அப்பா வேண்டும்", "நீதி தேவதையே எமக்கு நீதி வேண்டும்", "போதும் போதும் இனியும் எம்மை ஏமாற்றாதே", "விசாரணைகளை முன்னெடுக்காமல் காணாமல் ஆக்கப்பட்ட அலுவலகம் என்ன செய்கிறது?", "புதைத்தது யார்? புதைக்கப்பட்டது யார்? அரசே பதில் கூறு" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும், கடும் வெயிலின் மத்தியிலும் ஏ9 வீதியில் அமர்ந்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதையடுத்து, போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள், பேரணியாகப் புறப்பட்டுச் சென்று, கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் உள்ள ஐ.நாவின் பணியகத்தில் மனுவொன்றைக் கையளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், பாராளுமன்ற, உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் பங்கேற்றனர்.(ம-3-9-101-250-271-281-283-285-312)

## முழு அடைப்புப்...

க்கும் வகையில் முன்னெடுக்கப்படும் முழு அடைப்புப் போராட்டத்தால் வடக்கு மாகாணம் முடங்கியது. வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டதுடன், பொதுப் போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறவில்லை. அரச அலுவலகங்கள் திறக்கப்பட்ட போதும் பணியாளர்களின் வருகை குறைவு என்பதுடன் சேவைகள் இடம்பெறவில்லை.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகேட்டும் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு கால அவகாசம் வழங்கக்கூடாது என வலியுறுத்தியும் கிளிநொச்சியில் நேற்று மாபெரும் கவனயீர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பேரணிக்கு வலுச்சேர்க்கும் வகையில் வடக்கு மாகாணத்தில் நேற்று முழு அடைப்பு போராட்டத்தை முன்னெடுக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அழைப்புவிடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-3-9-101-250-271-281-283-285-312)


**வட மாகாண கல்வி மேம்பாட்டிற்கான ஆய்வு மாநாடு**

**நோக்கம் :- வட மாகாண கல்வித்துறை எதிர் நோக்கும் பிரச்சினைகளை ஆய்வுக்கு உட்படுத்தி முன்னேற்றத் திற்கான வழிமுறைகளைக் கண்டறிதல்.**

கல்வியில் விழிப்படைந்து எமது எதிர்கால சந்ததிக்கு வழிகாட்ட முன்வருவீர்!

சமகாலத்தில் கல்வித்துறையில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கல்வித் துறைசார் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், வைத்திய நிபுணர்கள், பொறியியல் வல்லுநர்கள், நீதித்துறை சார்ந்தோர், உள்நாடு, வெளிநாடுகளில் வாழும் புத்திஜீவிகள் போன்றோரிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதி 15.03.2019**

அனுப்ப வேண்டிய முகவரி:

**சிவன் பவுண்டேசன்,**
**இல.52, ஒட்டுமட வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் முகவரி: sivanfound@gmail.com
மேலதிக விபரங்களுக்கு பின்வரும் கைத்தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
**077 511 0039, 077 041 1742**

- ஏற்பாட்டுக்குழு
சிவன் அறக்கட்டளை

(7641)



**காணி விற்பனைக்கு**

பூநகரியில் தென்னங்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
0775000167, 0768445166
(7073)



**விரைவு பொதிகள் சேவை**

விசேட விலை குறைப்பு



(C-5439)
UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



**வெளிநாட்டில் வேலை வாய்ப்பு**

அவுஸ்திரேலியாவிற்கு அருகில் உள்ள பப்புவா நியூகினியாவில் வேலைவாய்ப்பு

பதவி - கல்வி நிறுவன முகாமையாளர்
சம்பளம் - 250'000 (இலங்கை ரூபா)
தகுதி - பட்டதாரிகள் (ஆண்கள்)
நன்மைகள் - தங்குமிடம், வாகனம், விமான பயணச்சீட்டு, காப்புறுதி மேலும் பல சலுகைகள்.
(C-5598)
V2 TRAVELS
0768226243 v2vacancies@gmail.com


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.